
# ஈழநாதம்

1995
பெப்ரவரி 19
ஞாயிற்றுக்கிழமை

ஆறாவது ஆண்டுச் சிறப்பிதழ்

## வாழ்த்துச்செய்தி



தேசத்தின், தேசியத்தின் உணர்வுகளையும், புகழையும், அர்ப்பணிப்புகளையும், தேசியமயமாக்கி தமிழ் தேசியம் தலை நிமிர்ந்து புதிய மாற்றங்களையும், விடுதலைப் போராட்டம் கண்டு கொண்ட புதிய பரிமாணங்களையும், வெளிக்கொணர்ந்து மக்கள் விழிப்புற மகத்தானசேவையினை வழங்குவதில் பத்திரிகைகள் இன்று பெரும் பங்காற்றுகின்றன.

தமிழையும், தமிழ் மக்களையும் இனவாத அரசின் அனர்த்தங்களில் இருந்தும், திட்டமிட்ட இருட்டடிப்பு நடைமுறைகளையும் இனம் கண்டு மக்களை நல்வழிப் படுத்தி அறிவியல், அரசியல், கலை இலக்கிய விஞ்ஞானத் துறைகளில் ஆழ்ந்த சிந்தனையுடன் நோக்கும் ஈழநாதம் பத்திரிகையானது தமிழ் மக்களின் மனங்களை கொள்ளை கொண்டுள்ளமை வெளிப்படையானது.

பத்திரிகைத் துறையானது உலக நகர்வை நிர்ணயித்து நவீன வளர்ச்சி கண்டுள்ள இன்றைய நோக்கில் அரசின் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் சேவையின் அடிப்படையில் இந்த மண்ணில் நிகழ்ந்த கெடுபிடிகள், அவலங்கள், அனர்த்தங்களின் மத்தியிலும் தனது வாழ்வைத் தொடர்ந்து தனது உண்மையான பணியை மக்களிடையேபகிர்ந்துகொண்ட ஈழநாதம் தனது தேசியப்பற்றுடன் கூடிய சேவையை தொடர ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பது பாராட்டுக்குரியது. எமது மக்களுக்கும், நாட்டுக்கும் அயராது உழைத்து மக்களின் மனங்களில் நிறைந்த சேவையுடன் இயங்கும் ஈழநாதம் தன் 6ஆம் ஆண்டில் சிறப்புடன் புதிய பல சாதனைகள் படைத்து புதுப்பொலிவுடன்சிறப்புற எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

சு. ப. தமிழ்ச்செல்வன்
அரசியல்துறைப் பொறுப்பாளர்
தமிழீழம்

மக்கள் தினசரியான ஈழநாதம் தனது ஐந்தாவது ஆண்டை நிறைவு செய்து ஆறாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது.

இன்று ஈழநாதம் பத்திரிகையானது வாரமஞ்சரி, மாணவர் அரங்கு, விளையாட்டு அரங்கு, சிறுவர் அரங்கு என பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கியதாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. மேற்கூறப்பட்ட நான்கில், வாரமஞ்சரி தவிர்ந்த ஏனையமூன்றும் கடந்த ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டவையாகும். இவற்றிற்கு இன்று மக்கள் மத்தியில் கிடைத்துள்ள வரவேற்பில் இருந்தே ஈழநாதம் தனது குறிக்கோளான 'மக்கள் தினசரி' என்ற இலக்கை நோக்கி முன்னேறிச்செல்கின்றது என்பதை உணர முடிகின்றது. இந்தவகையில், எதிர்காலத்திலும் மக்களுடன் இணைந்து செல்ல பல புதிய விடயங்களை ஈழநாதம் தன்னகத்தே கொண்டு வெளிவரத் திட்டமிட்டுள்ளது.

இதேசமயம், ஈழநாதம், தனது அடிப்படைக் குறிக்கோளான தமிழ்மக்களின் அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் குரலாக, சகல ஒடுக்குமுறைக்கும் எதிராக ஒலித்துக் கொண்டே வந்துள்ளது. எதிர்காலத்திலும் அதனை மேற்கொள்ளும் என உறுதி கூறுகின்றோம்,

அத்தோடு ஈழநாதம் கடந்த ஆண்டில் கண்ட வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைகின்றோம். இதற்கு தமிழீழ மக்கள் வழங்கிய பங்களிப்பானது ஈழநாதத்தை முன்னணிப் பத்திரிகை என்ற நிலைக்கு உயர்த்தியுள்ளது. இதற்கு உதவிய தமிழீழ மக்களுக்கு நன்றி கூறுவதோடு, தொடர்ந்தும் அவர்களின் ஆதரவை எதிர்பார்த்திருக்கின்றோம்.

- ஆசிரியர்

ஆறாம் ஆண்டில்
ஈழநாதம்
மக்கள்தினசரி
1995

## 'ஈழநாதம்'
### தீயிலெரியும் தேசத்துப் போர்முரசு
### அத்தாணி மண்டபத்து ஆராய்ச்சி மணி

எங்கள் முற்றத்தில் படர்ந்து
கொத்துக் கொத்தாகப் பூக்கும் குண்டு மல்லிகையே!
வாசலில் வந்தெம்மை வருடிச் செல்லும்
வசந்தச் சுகமே!
நாங்கள்
தினசரி தூக்கிமகிழும் "அறிவுப் பிள்ளையே"!
உனக்கு ஆறுவயதானதா?
ஆச்சரியம்.
எத்தனை அறிவை எமக்குத் தந்தனை.
ஈழநாதமே! நீ ஞானக்குழந்தை.
"கனவுத் தொழிற்சாலை"யின் கழிவு நீரை
போத்தலில் அடைத்துவிற்கும் "புத்திசாலிகளும்"
எண்சோதிடத்தையும்,
இராசிப்பலனையும்,
அச்சடித்து விற்கும் "அறிவாளிகளும்"
சந்தைப் பொருளாக்கிய 'பத்திரிகாதர்மத்தை'
சத்தியத்தின் பக்கம் திருப்பிய சாரதி நீ.
உண்மையைத் தொட்டுக்காட்டும் சுட்டுவிரலே!
பருவப் பிள்ளையும் படிக்கக் கூடிய
பகவத் கீதையே!
நீ பிறந்த நாளிருந்து
தமிழீழம் நிமிர்ந்தது.
தீயிலெரியும் தேசத்துப் போர்முரசே!
நீ கோயிற்கோபுரத்து அசையா மணியல்ல......
அத்தாணி மண்டபத்து ஆராய்ச்சி மணி.
உன்னைக் கண்ணிலொற்றிய பின்புதானே
நாங்கள் காலைக்கடனே முடிக்கின்றோம்.
"ஐந்தாம் பக்கத்தை" அலசி விட்டே
அரசியலை நாங்கள் ஆய்வு செய்கிறோம்.
"வெள்ளி"க் கொலுசின் கிண்கிணியோசையில்
யுத்தத்தின் சத்தத்தை உற்றுணர்ந்து கொள்கிறோம்.
எங்களுக்கு நீ பெறாமகன் முறை.
நாங்களுனக்கு சித்தப்பா, பெரியப்பா உறவு.
ஏன் தெரியுமா?
நீ எங்களின் "தம்பி"யின் பிள்ளை.
நூறு விரல்களின் ஒப்பனையின் எழிலாகி
வைகறையில்......
கோலமிட்ட வாசலெங்கும் குடியிருக்க வருகின்றாய்.
நள்ளிரவில்...
உன்வெள்ளை முகத்தில்...
அச்சுப் பொறியிட்ட முத்தத்தின் அடையாளத்தில்
உலகத் திசைகளை உற்றுப்பார்த்துக் கொள்ளுவோம்.
தேம்ஸ் நதியும், டான் நதியும்
கங்கையும், காவிரியும்
மாவலிகங்கையும் அழகானவைதான்
என்றாலும் எங்களுக்கவை சொந்தமல்ல...
"வழுக்கியாறு" வற்றிக்கிடந்தாலும்
எங்கள் பிள்ளைகள் விளையாடும் "தாயின்மடி"
ஈழநாதமே!
நீ வழுக்கியாறு.
எங்கள் உறவுக்கொடியின் உதிரப் பூ.
உனக்கு வித்திட்டவனுக்கு வெற்றி.
வாய்க்கால் வெட்டி வரம்பிட்டவன் வாழ்க.
நீரூற்றுபவர் நிலைப்பார்கள்.
தினசரி கண் விழித்து
ஒப்பனை செய்வோர் உன்போல் உயர்வர்,
ஈழநாதமே!
எங்கள் இதய நாதமே!
ஆயிரம் வருடங்கள் நீ வாழுவாய்.
அப்போதும் உன்னோடு நான் வாழுவேன்.

புதுவை இரத்தினதுரை

# வரி விளம்பரம்


**தித்திக்கும் தேன் சுவை வெள்ளம்**

இன்று பலரும் விரும்பி சுவைப்பது - பிக்னிக் ரொபி இனிப்புவகைகள் - "PICNIC TOFFEES," நீங்களும் நண்பருடன் சுவைத்து மகிழுங்கள் (சி-11279)

**வெளிவந்து விட்டது**

எதிர்வரும் புதுவருட (1995 96) யுவஹு திருக்கணிதபஞ்சாங்கம் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது எல்லா புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். விலை ரூபா 60: மட்டுமே. (10979)

**துளிர்**

சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் எல்லா கடைகளிலும் விற்பனையாகிறது. ஏக விநியோகஸ்தர்கள்: வசந்தம் புத்தக நிலையம், புதிய பஸ் நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (10945)

**புதிய மீரா பிரசுரம் "தூரம்தொடுவானம்"**

மாமனிதர் சித்திரன் சுந்தர் இந்த நூலுக்கு எழுதிய மதிப்புரையில்பொன். கணேசமூர்த்தியின் "தூரம் தொடுவானம்" ஓர் அற்புத ஆக்கம். இந்த நாவலிலே நிலைக்கண்ணாடியாக சமூகத்தை தீட்சண்யமாகப் பார்த்திருக்கிறார். விற்பனையாகின்றது. பூபாலசிங்கம், வசந்தம், பாலாஜி, ராஜன் புத்தகசாலைகள். (10968)

**மில்க்வைற் விலைகள்**

முன்னைய விலைகளிலேயே கிடைக்கின்றன. நீலசோப் ரூ. 6/- பார்சோப் ரூ. 36/- அரைபார் சோப் ரூ. 18/- சலவைப்பவுடர் 50 கிறாம்- ரூ. 6/- சலவைப்பவுடர் 450 கிறாம்- ரூ. 45/- "மேலுறைகளுக்கு பரிசில்கள் உண்டு". மில்க்வைற் (சி-11385)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995 - 02 - 19**

**ஞாயிறு இரவு**

08. 01 - இசையரங்கம் - நிகழ்ச்சியில் என். ஆர். கே. இரத்தினகுமார் என் ஆர். கே வாகீசன் ஆகியோரின் நாதஸ்வரக் கச்சேரி
08. 30 - செய்திகள்
08. 40 - தாயகப் பாடல்கள் என்பன இடம் பெறும்.

**1995 - 02 - 20**

**திங்கள் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள் கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07 40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம் பெறும்.

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995- 02- 19**

**ஞாயிறு மாலை**

05- 01 - சிந்தனைச் சிதறல்
05- 02 - எழுச்சிகீதம்
05- 10 - புதியவை
05- 15 - மழலைகளுக்காக
05- 30 - கதம்பம்
06- 00 - சிந்தனைக்குச் சில வினாடிகள்
06- 02 - பாமாலை
06- 15 - என் தெரிவு
06- 30 - மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.


# இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

**50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

ஏசியா, லுமாலா சைக்கிள்கள்,
அதன் உதிரிப்பாகங்களும்
மற்றும்
றொபின், வில்லியஸ் வாட்டர் பம்

பல்பொருள்
மொத்த சில்லறை
வாணிபம்

(சி-11397)

உங்களுக்குத் தேவையான
பாவனைப் பொருட்களுக்கு
**ராஜு ஸ்ரோர்ஸ்**
67,69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-11398)

சகல விதமான பற்றரி வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

# செல்வம் களஞ்சியம்

330, கேணல் கிட்டு சாலை
யாழ்ப்பாணம்.
(சி-11396)


## நினைவலைகள்

**1-ம் ஆண்டு** | **3-ம் ஆண்டு**





வீரச்சாவு
கப்டன் ஆண்டகை/
கந்தையா
தியாகராசா ஞானவேல்

அகால மரணம்
தியாகராசா
செந்திவேல்
(மயிலிட்டி)

28- 12- 1972 < பிறப்பு > 28- 12- 1972

வீரச்சாவு 01- 03- 1994
இறப்பு 30- 06- 1992

திதி: 19 - 02 - 1995

நாகர்கோவில். (10974) - குடும்பத்தினர்


## ஸ்ரீ தாமோதர விலாஸ்

சைவ உணவகம்

**Shree Thamothara Vilas**
**Vegetarian Restaurant**
*403, K.K.S. Road,*
*JAFFNA*

(சி-11401)

## உள்ளம் குளிரும் வாழ்த்துக்கள்

# கல்யாணி குளிரகம்

**(கல்யாணி கிறீம் கவுஸ்)**

இல. 73, சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.
(சி-11395)


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்லப்பா தங்கராசா

விண்ணில் 1972,08.26
மண்ணில் 1991.02.19

நீங்காத நினைவலைகள்
இதயத்தில் கனத்திருக்க
தாங்காத வேதனையோடு
கண்ணீர் சொரிகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அம்மா, அண்ணாமார்,
அக்காமார், அண்ணிமார்,
அத்தான்மார்

அல்லிப்பளை,
பளை.

(10960)

# பிடிமானம்

வசந்தன்

பொன்னையா அப்பு கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தார், கழுத்து வரைக்கும் வெள்ளைச்சேலை போர்த்தப்பட்டிருந்தது. உறவுகள் சுற்றிவரகாத்திருந்தனர்.

தகரப்பந்தல் ஐந்து நாட்களுக்கு முன்பு போட்டாகிவிட்டது. பெற்றோமாக்ஸ் எரிந்தது. சற்றுத்தள்ளிகுத்து விளக்கு தயாராக இருந்தது.

காத்திருப்பு; கந்தையரின் முடிவுக்காக எல்லோருமே... எல்லாமே...

ஆறுமுகத்தார் உத்தரவுகளை வழங்கிக் கொண்டிருந்தார். அப்புவிற்கு மருமகன். தங்கச்சியினது பிள்ளை. சிறு வயது தொடக்கம் உருவான ஆத்மார்த்த பிணைப்பு·

''பாடைக்காரன் காலமை வந்திடுவனோ''

''அவன் இண்டைக்கும் வந்து காத்துக் கிடந்திட்டுத் தான் போறான்'' முகத்தாரின் குரலுக்கு யாரோ ஒருவன் பதில் சொன்னான்.

ஐந்து நாள்...; விடிந்தா ஆறாம் நாள்...

'அப்பு ஏன்... இன்னும்...' ஆறுமுகத்தாருக்கு விளங்கவில்லை. 'ஒருவேளை வெளியில இருக்கிற பிள்ளையள், பேரப்பிள்ளையள் வருவினம் எண்டு' மனம் சஞ்சலப்பட்டது.

'சீ... இராது அந்தளவுக்கு அப்பு புத்தியில்லாதது இல்லை. எண்பத்தாறு வயசு இழத்துக்காண்டி அங்க இருந்து ஒருதரும் வராயினம் எண்டு அதுக்குத் தெரியும்'

'அப்ப ஏன்...?'

சனம் ஒவ்வொன்றாகக் கலைந்தது. ஆறுமுகத்தார் அயர்ந்து போனார். பெற்றோமாக்ஸ் மங்கியது; கவனிக்க ஆளில்லை. அப்பு தனித்து...

அப்புவினுள் ஓர் பொறி. சிறு அசைவு. கண்களை விழிக்க முயன்றார். சாதுவாக திறந்தது. கால்களை அசைத்துப் பார்த்தார்; முடியவில்லை. போர்வையைத் தூக்கி வீச வேண்டும் போலிருந்தது. இயலவில்லை.

இப்ப சில நாட்களா அவரைச் சுற்றி ஏதேதோ எல்லாம் நடக்கிறது; கனவு போல... அவரைக் கட்டிப் போட்டுவிட்டு... வெளியில ஓர் இயக்கம்...

'நான் இண்டைக்கில்லை எப்பவோ செத்திட்டன்' என்று கத்த வேண்டும்போல் உணர்வு. ஆனால், முடியவில்லை.

நினைவுகளும் கனவுகளும் மாறி மாறி... நெஞ்சுக்குள் ஏதோவொருஏக்கம் நெஞ்சை பிசையிற மாதிரி; சாவை ஏற்றுக் கொள்ள இயலாமல் தவிக்க வைக்கிற மாதிரி...

அப்போது சின்னன்; தங்கச்சியை இழுத்துக் கொண்டு அந்தப்புழுதிமண்முழுக்கஓடித் திரிந்த காலம். ஆடுறதும் ஓடுறதும், விழுகிறதும், அழுகிறதும்... அது அவர்களின் ராஜாங்கம்; அரசாண்ட மண்.

வளவைச் சுற்றி கிழுவை முள் வேலி. வீடு, மால், சமையற்கட்டு எல்லாம் மண் தான். குடை கவிழ்த்தது போல பனை ஓலைக் கூரை. வளவுக்க தான் பட்டியும் அடைக்கிறது.

பயிர்கொடி... அந்த மண்ணை நினைத்தா...அதில் விளையிறதை விட அதையே சாப்பிடலாம் போல... இப்போது நினைத்தாலும் அந்த சிவப்பு மண்ணில உருண்டு பிரண்டு புழுதியில் குளிக்க வேண்டும் போலிருக்கும்.

இது வேரறுந்த வாழ்க்கை. அந்த நிலம்... வாழ்க்கையின் பிடிமானம், இருப்பின் அர்த்தம் எல்லாமே அதில் வாழும் மட்டும்தான். அப்புவைப் பொறுத்தவரை வாழ்வும் சாவும் அர்த்தமற்றவை. ஆனால் ஊரில தான் இந்த சீவன் போக வேண்டும் என்பது அவரின் மனதில படிந்து போன ஆசை.

ஊரெல்லையோட சின்னப் புளியடி வைரவர்; அதற்கு பக்கத்தில் சற்றுத்தள்ளி சுடலைப்பிட்டி. அந்த சுடலைப்பிட்டி... எத்தனை சந்ததி சந்ததியாய்... ஐயா, ஆச்சி ஏன் அப்புவினுடைய பார்வதி ஆச்சி... அந்தச் சாம்பல் மேடு காலகாலத்து ஆதாரம்.

ஒரு வெள்ளிக்கிழமை தான் பார்வதி ஆச்சியை அங்கு எரித்தது. அன்றிலிருந்து வெள்ளிக்கு வெள்ளி அதில் போய் சிறிது நேரம் இருந்து விட்டு வராவிட்டால் அப்புவிற்கு சரிவராது.

சின்னப்புளியடி வைரவர். அப்புசின்னப்பெடியனா இருக்கையில் நிலவிய பெயர். இன்றைக்கு மரம் பெருத்து தலைவிரித்தாடுகிற பெரும் மலை. ஆனாலும், இப்போதும் சின்னப் புளியடிவைரவர் தான்,

ஊர் எவ்வளவோ மாறிவிட்டது. ஆனால் வைரவருக்கு அந்த சின்ன ஓலைக்கொட்டில்தான். கோயில் கட்ட வெளிக்கிட்டா ஆராவது ஒருவன் விடியப்புறம் 'எனக்கு இது போதும் கோயில் வேண்டாம்' என்று இரவு வைரவர் சொன்னதென்றுசொல்வான்.

வருடாவருடம்மடை வைக்கிறதன்றுதான் சனம் அங்கு கூடும். மற்றும்படி அப்புவை தவிர யாரும் அந்தப் பக்கம் வருவதில்லை.

வைரவரும் அப்புவும் சினேகிதர்கள். சில நேரங்களில் கோபக்காரர்; கதைக்கமாட்டார்கள். உறவும் பிரிவும் சண்டையும் சச்சரவும் அவர்களுக்குள் நெடுக வரும்.

'ஒருக்கா, மூத்தவன் படுத்த படுக்கை, சரியான கடுமை வைரவனடியில வந்து 'என்ரை பெடியன் எழும்பும் வரைக்கும் நான் இதை விட்டு எழும்பன்' எண்டிருந்தனான். ரெண்டு நாளுக்கு பிறகு ஓராள் தோளில தட்டுது. திரும்பிப் பார்த்தா மூத்தவன்...' என்று அப்பு இப்போது சொல்லும்போதும் குரல் தழும்பும் கண்ணில் நீர் கட்டும்.

இன்னொருதரம் இருட்டோட இருட்டாக மூத்தவனுக்கு கல்யாணம் பேசபுறப்பட்டு ஒழுங்கையில் இறங்கினவர் சிறிது. நேரத்தில் திரும்பி வந்தார்.

''வைரவனுக்கு இதில விருப்ப மில்லை'' என்றார் பதில் பேச ஆளில்லை. அது அவரது ஆழ்மனவுலகின் நடப்பு. அங்கு எவரும் ஆதிக்கம் செலுத்த அவர் அனுமதிப்பதில்லை.

பார்வதி ஆச்சி போன போது' சுடலையில் எரித்துப் போட்டு நேர புளியடிக்குத் தான் வந்தவர்.

''ஏன் இப்படிச் செய்தனி'' என கேட்டுவிட்டு போனவர் தான் அதுக்குப் பிறகு அந்தப் பக்கம் வருவதில்லை. ஊரை விட்டு ஓடிவருகையில் கூட அந்தக் கோபம் ஆறவில்லை.

ஆனால், இப்ப ஏதோ ,வைரவனடிக்கு போக வேணும் ஊருக்கை ஒருக்கா திரியவேணும்' என்றஉணர்வு அடிமனதின் வற்புறுத்து.

பக்கத்து ஊர்தான். இரண்டு மைல் வரும். அரசடி ஒழுங்கையால் இறங்கி அம்மன் கோயிலடிதாண்டி நேராகபோனால் வயல் வெளி, அது தாண்டினால் ஊர். பகலில் குளத்தடி வயலில் நின்று பார்த்தால் புளிய மரம் தெரியும். சற்றுத்தள்ளி சுடலை. அதற்கப்பால் 'அவங்கள்' இருக்கிறாங்களாம். அப்பு கூட சில நேரங்களில் குளத்தடி வயலுக்கு வந்திருக்கிறார். அங்கு நின்று புளியடியையும் கிராமத்தையும் பார்க்கிறதில்ஓர் ஆத்மார்த்த ரீதியிலான திருப்தி; அமைதி.

நிலவு மரங்களூடாக எழுந்தது. பின் நிலவு; நிழற்படங்களுடன் நிலம். வீடு இருண்டு கிடந்தது. அப்பு கண்களை மெதுவாகத் திறந்தார். கைகளை அசைத்து விளிம்பைப் பற்றினார் .கால்களைஅகற்றி நிமிர முயன்றார். முடியவில்லை. மூட்டுக்கள் தெறிக்கும் மரண வலி; வேதனை. நிமிர்ந்து இருந்தார்.

மனதில் ஏதோவொருகுரல் உந்தியது உடலின்சக்திஎல்லாவற்றையும் திரட்டி எழுந்து நடந்தார். வளைந்து குறுகிய மனித உருவம், நிழல்களுடன் நிழலாக அசைந்தது. சில அடிகள்; களைத்தது' நாக்கை ஈரமாக்கி மூச்சை உள்ளிழுத்து வாங்கினார். திரும்பவும் நகர்ந்தார்-

வயல்வெளி, மறுபக்கம் இருள்மண்டிப் போயிருந்தது. வாழ்க்கையின் எத்தனை இரவுகள் இந்த வயல்வெளிகளுக்குள் ........

அப்பு நடந்தார். மிக மெதுவாக' ஓர் அடியைவிட மெதுவாக, சில நேரங்களில் கைகளாலும் கால்களாலும் நடந்தார். இயலாமல் போகும் போதெல்லாம் நின்றார் .மீண்டும் நடந்தார். அப்புவின் உயிரோடு கலந்த இலட்சியப் பயணம், அதற்குமுடிவில்லை.

புளியமரம் பேய்போல தலைவிரித்தாடியது. அதன் கிளைகள் ஒன்றுடன் ஒன்று பயங்கரமாக மோதி சத்தமிட்டன. இருளின் அமைதியை வதைக்கும் காற்றின் ஊளைக் குரல்.

கொட்டில் சரிந்துபோய் கிடந்தது. அப்பு வயிரவனுக்கு முன்னால் இருந்தார். குழியின் ஆழத்துக்கு போய் விட்ட கண்களிலிருந்து நீர். அது கன்னச் சுருக்கங்களிலிருந்துவழிந்துவாயிற்குள்சென்றது.

கனவுலகில் அப்பு. தவழத் தொடங்கிய நாள் தொட்டு இன்றுவரை நீண்ட வாழ்க்கைக் காலத்தின்படிமங்களின் தடங்கள்; தழும்புகளை தடவும் சுகம்.

அப்புஎழுந்தார்; சுடலைப் பக்கமாக நடந்தார். முன்னே அகன்று பெருத்த உருவம்; வெண் புகார் போல ...... அப்புவை மறித்தபடி தேகம் நடுங்கியது. 'வைரவனுக்கு என்னோட சேட்டை' வாய் முணுமுணுத்தது. அது மனதின்பிரமைஅல்லதுநிஜம் எதுவாகவும் இருக்கட்டும். அப்புவை பொறுத்தவரை அது வைரவன். அவர்சிரித்து கதைத்து சண்டை பிடித்து... நேசிக்கும் நண்பன்.

''சீ... விலத்து'' அப்பு சற்று உரத்து உறுமினார். அது பேசாமல் நின்றது.

''நான் செத்துப் போடுவன் என்டு மறிக்கிறியே'' அப்பு கடவாயிற்குள் சிரித்தார். சத்தமில்லை. மனமுருகி கண்ணீர் மீண்டும் கன்னச் சுருக்கங்களில் வழிந்தது.

''நான் சாகப்போற சீவன் என்னை விடு, நீ காப்பாத்திறதா இருந்தாஇஞ்சனேக்கை வாற 'எங்கட பெடியளுக்கு ஒரு தீங்கும் வராமல் பார்'' அப்பு கைகுவித்தார். விடுவிடென நடந்தார். சோர்வில்லை. களைப்பில்லை.

சுடலைப் பிட்டி; சாம்பல் மேட்டுக்கு முன்பு அப்பு நின்றது. நெஞ்சுக்கூடு மேலும் கீழும் அசைந்தது. வயிறு உள் சென்று ஒட்டி மீண்டும் வந்தது. கன்னங்கள் துடித்தன. தேகம் நடுங்கியது.

பனை வடலிக்குள்ளாலும், பற்றைகளுக்குள்ளாலும் துப்பாக்கிகள் நீண்டன.

பற்றைகளுக்கும் மரங்களுக்கும் மேலாக ஒற்றை வெள்ளி பிரகாசமாக, தூரத்தில் இன்னுமிருக்கின்ற சேவல்கள் குரலெடுத்தன. இரத்தம்தோய்ந்த உடலோடு அப்பு சாம்பல் மேட்டில் குப்புற ...

## ஈழநாதமே ! அகல[ர]நாதமாய் ஒலிப்பாய் !

இந்தமண் மடியில் வீசும்
சந்தனக் காற்றே ! வைய
விந்தைகள் அறிந்தே சொல்லும்
வித்தக ஊற்றே ! உன்னைச்
சிந்தையில் ஏற்றோம்; சேதி
சொல்லிடும் திறமை கண்டே
வந்தனை செய்தோம் ! எங்கள்
வாழ்வினில் ஒளிர்வாய்; வாழி !

உலகெங்கும் நடக்கும் நிகழ்வை
உலைமூட்டிப் படைப்பாய் ! புலிகள்
களம்வென்று பாடும் போது
கைகொட்டிச் சிரிப்பாய் ! பொழுது
புலரமுன் வாசல் வந்து
புதினங்கள் சொல்வாய் ! ஈழம்
மலரும் அந் நாளை எண்ணி
மகிழ்வோடு தொடர்வாய்; வாழி !

வல்லமை நிமிர்வைச் சொல்லும்
“விளையாட்டு அரங்கு”ம்; வாழ்வில்
நல்லதை உணர்ந்து ஊட்டும்
“மழலைகள் அரங்கு”ம் சேர்த்தாய்!
வெள்ளிகள் தோறும் மஞ்சரி
சொல்லிடும் வார்த்தை; நெஞ்சை
அள்ளிடும் போதில் இன்னும்
ஆயிரம் காலம் வாழ்வாய்!

பொங்கிடும் புலிகள் பகையைப்
பூண்டோடு அழிக்கும்; வீரம்
தாங்கிடும் தலைவன் ஈழக்
கதவினைத் திறப்பான்! என்றே
இங்கொரு சங்கென ஒலிக்கும்
எங்களின் நாதமாய் வாழ்வாய்!
இன்றுன் அகவை ஆறில்
ஏறிடும் உனக்கென் வாழ்த்து!

- வேலணையூர் சுரேஷ்

# எமது சமூகத்தின் தேவைகளை இன்றைய கல்வி பூர்த்தி செய்கின்றதா?

**முதற்பரிசு பெற்ற கட்டுரை**

செல்வன் மகாலிங்கம் சாந்தீபன்

கல்வி என்பது மனிதமேம்பாட்டின் முழுமுதற் காரணியாக விளங்கும் ஓர் உயரிய கருவூலம் ஆகும். இது சமூகத்தையும் தனி மனிதனையும் அறிவாற்றல், பொருள்வளம், மனித நேய விழுமியங்கள் என்ற முழு நிலைகளிலும்விருத்திஅடைய வைக்கும் ஒரு பரிபூரண தேவையாக எக்காலத்திலும் விளங்கி வருகின்றது. ஒரு தேசமோ, பிரதேசமோ முழுமையாக அபிவிருத்தி பெறுவதற்கும் அந்த தேச அல்லது பிரதேச மக்கள் சமூகம் உயர்வடைவதற்கும் ஏற்ற வகையில் அந்த தேசங்களிலோ, பிரதேசங்களிலோ கல்வி முறை அமைக்கப்பட வேண்டும் என்பது கல்வித் தத்துவ அறிஞர்களின் கருத்து. அதாவது அந்த சமூகத்திலிருந்து கல்வியறிவு பெறுகின்றவர்களாலேயே அந்த சமூகம் முழுமையாக புனரமைக்கப்பட வேண்டும். அத்தகையவர்களாக அந்த கல்வியாளர்கள் உருவாகக் கூடியவாறு கல்வி வழங்கப்படல் வேண்டும்.

இந்த நிலைமையில் இப்பொழுது இங்கே பேணப்படும் கல்வி முறையானது; இத்தகைய நோக்கங்களை நிறைவேற்றுகின்றதா? உயர்மனித நேய விழுமியங்கள் கொண்ட கல்விமான்களை உருவாக்குகின்றதா? இவர்களால் எமது சமுதாயம் வளர்ச்சி அடைகின்றதா? என்ற வினாக்களுக்கு விடை தேட முயன்றால், திருப்திகரமாக இல்லை என்ற விடையையே நாம் வேதனையோடு பெறவேண்டியுள்ளது.

இதற்கு எமது கல்வியாளர்களைக் குறை கூறுவதிலும் பார்க்க, உருவாக்கும் பொழுதே அவர்களை அடிப்படை நோக்கத்திலிருந்து தவற வைத்து விடும் காரணி எதுவென்று ஆராய்ந்தால் அது எமது கல்விமுறையைத் தான் குறை கூற வைக்கின்றது.

கல்வியாளர்களை உருவாக்கி அதன் மூலம் சமூகப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டிய நேரத்தில், சமுதாயத்திலிருந்து விலகி கற்றவர்கள் தமக்குள்ளேயே ஒரு சமூகமாகி அல்லது தான் வாழும் சமூகத்தில் இருந்து ஒதுங்கி வாழும் ஒரு நிலையை இன்றைய கல்வி முறை உருவாக்கி இருக்கின்றது. இதன் மூலம் தனது அடிப்படை நோக்கிலிருந்தே அது விலகி விடுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

கனடா நாட்டுப் பேராசிரியர் ஒருவரிடம், எமது பிரதேச கல்வியாளர் ஒருவர் இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் வழங்கப்பட்ட பட்டங்களை ஏன் நீங்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்று கேட்ட பொழுது, ''உங்கள் பல்கலைக் கழகங்களில் இருந்து திறமைசாலிகள் உருவாகலாம், ஆனால் உங்கள் கல்வி முறையின்படி அற்புதமான மனனம் செய்யுமாற்றல் பெற்றவர்களே பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகின்றார்கள், இங்குள்ள பிரச்சினைகளை அவர்கள் மனனம் செய்து கொள்வதால் எமக்கு எந்ததீர்வும் கிடைக்கப்போவதில்லை. பிரச்சினைகளை செயல்ரீதியாக, யதார்த்த பூர்வமாக அணுகுபவர்களே எமக்கு தேவை. அத்தகைய திறன் படைத்தவர்களாக அவர்கள் இருந்தாலும் கூட, உங்கள் கல்வி முறை மூலம் எம்மால் அதை உறுதிசெய்து கொள்ள முடியாதுள்ளது. அதனாலேயே அவர்கள் மீண்டும் இங்கு தம்மைத் தயார்ப்படுத்த கல்வி பயில வேண்டியுள்ளது'' என்றாராம்.

அந்தப் பேராசிரியரின் இந்த சில வார்த்தைகளூடாகவே நாம் இந்த சமுதாயத்தில் பேணப்படும் கல்வி முறையிலுள்ள அடிப்படைக் குறைபாட்டை இனங்காணக் கூடியதாக இருக்கின்றது. இந்தக் கல்வி முறையானது உயர்கல்வி பெற்று கல்வியாளனாக விளங்கப்போகும் ஒருவனைத் தெரிவதிலேயே தவறு விட்டுவிடுகின்றது. செயற்றிறன், சமூகசிந்தனை, நல்லொழுக்கம், படைப்பாற்றல் போன்ற இன்னொரென்ன மனித சமூக உய்விற்கு அத்தியாவசியமான, பண்புகளைக் கொண்டவனை இனங்காண இக்கல்விமுறை உதவவில்லை என்பதைவிட இத்தகைய சிறப்புத் தகைமைகள் பொருந்தியவனை உருவாக்கத் தவறிவிட்டது என்பதே மிக வருத்தத்திற்குரிய உண்மையாகும்.

இன்று எமது சமூகத்தில் கல்வியால் உயர்ந்து, பதவிகளை வகித்துவரும் எத்தனையோபேர் எந்த வகையிலும் சமூகத்தை பாதுகாப்பவர்களாக அதன்மேன்மைக்கு பாடுபடுபவர்களாக இல்லாமல் இருப்பது மட்டுமல்ல, அவர்களே அதிகார துஷ்பிரயோகம், மோசடிகள்போன்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவதையே நாம் காண்கின்றோம். இந்த நிலையில் எமது சமூக நலனை இந்தக் கல்வி முறை பேணவில்லை, இன்றைய சமூகத்திற்கு பொருத்தமாயில்லை என்பது தெளிவாகின்றது.

இவ்வாறானகுறைபாட்டை பூரணமற்ற தன்மையை நோக்கை அடையாதிருக்கும் நிலையை ஏன் எம் கல்வி முறை கொண்டுள்ளது என ஆராய்ந்தால், எமது கல்விமுறையிலுள்ள குறைபாடுகள் அனைத்துமே புலனாகும்அடிப்படைக்கல்வியறிவை பெரும்பான்மையான மக்கள் பெற்றுக் கொண்டுள்ள பொழுதும், இன்றும் எமது சமூகத்தில் சமூக ஒடுக்குமுறைகள், மூட நம்பிக்கைகள், வறுமை, பொதுநலனில் ஆர்வமின்மை, கடும்சுயநலம், ஒழுக்கக் குறைபாடுகள் பாரிய மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டிய அளவில் உள்ளன. இந்தச் சீரழிவுகளிலிருந்து எமது சமூகம் அசைவதற்கு ஏற்ற வகையில் எமது கல்வி பயன்படவில்லை. மாறாக கற்றவர்களே மிகப் புத்திசாலித் தனமாக இச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள்.

எமது கல்வி முறையானது மாணவர்களை குறுகிய மனப்பாங்கு கொண்டவர்களாக, சமூக சிந்தனை அற்றவர்களாக மாற்றுகின்றது. ஆண்டு ஐந்தில் புலமைப் பரிசில் பரீட்சைக்காக ஓடத் தொடங்கும் மாணவன், தன் சக நண்பனையே விரோதியாக, தனது சந்தர்ப்பத்தை பறிக்க முயலும் ஒருவனாக இனங்காண்கின்றான். அந்த இளம் வயதிலேயே சுயநல சிந்தனையை எமது கல்விமுறை, அவனுள் வெற்றிகரமாக விதைத்துவிடுகின்றது. கல்வி அறிவு உயர உயர வட்டங்களைச் சிறிது சிறிதாகக் குறைத்து உயர்கல்வியாளர்கள் தமது குடும்பம்என்றநிலைக்குள் மட்டுப்படுத்தப்பட்டு விடுவதற்கு, சகல மட்டங்களிலும், ஆண்டு ஐந்திலிருந்து பல்கலைக்கழக பரீட்சைகள் வரை எமது கல்வி அமைப்பு கொண்டுள்ள 'போட்டிப் பரீட்சைகளே பெரிதும் காரணமாகின்றன.

ஆண்டு ஐந்தில் ஓடத் தொடங்கும் மாணவர்கள் சமூகத்தின் பக்கம் தம்மை திருப்பாது, திரும்பிப் பார்க்காமலேயே ஓடுகின்றனர். சந்தையில் கூட பொருள்களை விற்பனை செய்வோர் ஒரு பொது விலையை நிர்ணயித்து பாவனையாளர்களுக்கு வசதி செய்கின்றார்கள். ஆனால் எமது கல்விச் சந்தையோ ஒரு புள்ளி இரண்டு புள்ளிக்காக ஒரு ஜீவ மரணப் போராட்டத்தையே நடாத்தவைக்கின்றது. போட்டிப்பரீட்சையில் பெறும் அல்லது பெறமுடியாத ஒரு புள்ளி ஒருமாணவனை ''சுல்தானாக அல்லதுபக்கிரியாக'' மாற்றி விடும் கல்வி முறையே இன்று எமக்கு நடைமுறையிலுள்ளது. இந்தப் பந்தயத்தில் வெற்றி பெறுவதற்காக நாம் திரும்பிப் பார்க்காது ஓட வேண்டியுள்ளது. திரும்பிப் பார்க்காமலேயே ஓடிப்பழகிய நாம் இலக்கைஅடைந்தாலும் சரி, அடையாவிட்டாலும் சரி சமூகத்தை திரும்பிப் பார்ப்பதை நிறுத்திவைத்து விடுகின்றோம். இந்த வகையில் மாணவர்களைசமூகத்திலிருந்து விலகியே சிந்திக்க வைக்கின்றது எமது கல்விமுறை. இந்தவகையில் அடிப்படை நோக்கில் எமது கல்விமுறை தவறிவிட்டமையை இலகுவாக சுட்டிக் காட்டக் கூடியதாகவுள்ளது.

பட்டப்பின் படிப்புக்களுக்காகவும், ஆய்வுகளுக்காகவும் வெளிநாடுகளுக்கு செல்லும் உயர்கல்வியாளர்களில் பெரும்பான்மையோர், இந்தஇக்கட்டான சூழலிலும், நிரம்பிய தேவைகளுக்கும் மத்தியில் தாயகத்திற்கு திரும்ப மறுக்கின்றார்கள் என்றால் அவர்களை அவ்வாறு உருவாக்கிய கல்விமுறையே நிராகரிக்கப்படவேண்டியதொன்று.

அது மட்டுமன்றி கீழைத்தேய நாடுகளிலுள்ள திறமைசாலிகளைபுலமைப்பரிசில் என்றபோர்வையில் தம்மிடம் அழைத்து, பின் அங்கேயே வளமான வாழ்க்கையை அமைத்துக்கொடுத்து, அவர்களின் திறன்களை உறிஞ்சிவிடும் மேலைநாடுகளின் கொள்கைக்கு ஏதுவாக இருப்பதும் எமது கல்வி முறையிலுள்ளபாரியகுறைபாடாகும். இதுவும் எம் உயர்கல்வியாளர்கள் எம் தேசத்திற்கு, சமூகத்திற்கு பயன்படாமைக்கு ஒரு காரணமாகும்.

அடுத்து எமது கல்வி முறையானது, மாணவர்களுக்கு போதிய செயற்திறனை வழங்குவதில்லை. சகல விடயங்களையும் அவன் தத்துவரீதியாகவே அறிகின்றான். அவற்றை செயல்ரீதியாக அணுகும் பொழுது ஏற்படும் சிக்கல்களுக்குஅவன் முகம் கொடுக்க முடியாமல் விலகி விடுகின்றான். இதனால் அவனால் முழுமையாக சமூகத்திற்கு பயன்பட முடிவதில்லை. இந்தச் சிக்கலை நகைச்சுவையாக பலர் விளக்கியுள்ளார்கள்.

ஒரு மாணவன் சமையற் கலை வகுப்புக்குச்சென்றான். அங்கே விதம் விதமான உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் குறிப்புகளை மட்டும் ஆசிரியர்கள் வழங்கினார்கள். இந்த குறிப்புக்களை வைத்துக்கொண்டு அந்த மாணவன் பொங்கல் அன்று பொங்க ஆரம்பித்தான். குறிப்பின்படி செயற்பட்ட அவன் பொங்கி முடியும் தறுவாயை அடைந்த பொழுது, குறிப்பைப் பார்க்க ''இறக்கும் பொழுது ஏலம் போட்டு'' இறக்கவும் என்றிருந்தது. சிறிதுநேரம் சிந்தித்த அவன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து முதலாம்முறை பொங்கல்,

இரண்டாம் முறை பொங்கல்,

மூன்றாம் முறை பொங்கல்,

என்று உரத்துக்கூவி விட்டு பாத்திரத்தை இறக்கினானாம். எமது கல்வி முறையிலுள்ள பாரிய இன்னொரு குறைபாட்டை, அதனால் சமுதாயத்திற்கு ஏற்படும்சிக்கலை இலகுவாக இச்சம்பவம் மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. எமது கல்வி முறையானது, மாணவர்களின்திறன்களை இனங்கண்டு, அவற்றை வளர்த்து அதன்மூலம் சமூகம் அவனது பயன்பாட்டைப் பெறவும், அவன்தன் ஆற்றலை வளர்த்து ஆளுமை பெறவும் வழி சமைக்காது, மாறாக வெறும் ஏட்டுக்கல்வி அறிவு கொண்டவர்களையே உருவாக்குகின்றது. இவர்களால் சமூகத்திற்கு சேவைசெய்ய விரும்பினும், திருப்திகரமாக செய்வதற்கு ஏற்றவகையில் கல்வி அவர்களை உருவாக்கவில்லை.

மனிதநேய விழுமியங்களை அறப்பண்புகளை உருவாக்க வேண்டிய மதக்கல்வியும், எமது மண், எமது பிரதேசம், எமது மொழி, எமது சமூகம் என்ற பாசப்பிணைப்புக்களை ஏற்படுத்த வேண்டிய வரலாற்று சமூகவியல் கல்வியும் தமது இலக்கிலிருந்து நேர்மாறாக விலகி மத, பிரதேச கலவரங்களைத் தூண்டுவதிலும் ஒரு மொழிபேசும் மக்களையே பிரதேச சாதிய ரீதியாக பிளவுபட வைத்தும் இருக்கின்றது.


இன்று நடைமுறையிலுள்ள கல்வியானது வருமான இலக்கை அதுவும் சொற்ப வருமானமுள்ள அரச பதவிகளை நோக்கியே வழங்கப்படுகின்றது. இதனாலேயே அரச பதவிகளிலுள்ள கல்வியாளர்கள் சமூக விரோத முறைகளில் பொருளீட்ட முனைவதும், கல்வியாளர்கள் அரச பதவிகளை இலக்காகக் கொள்வதும் தொடர்கின்றது. மாறாக சகல துறைகளிலும் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடக்கூடிய திறன் மிகுந்தவர்களை உருவாக்குவதன் மூலமே சமூகம் பயன் பெறமுடியும். ஆனால் அதை இந்தக் கல்வி முறை பூர்த்தி செய்யவில்லை.

தொழில் துறை சார்ந்த கல்வியானது ஒரு சமூகத்தின் அவசிய தேவை ஆகும். ஆனால் இங்கு தொழில்நுட்ப கல்வி வழங்கும் மையங்களும் மனனம் செய்வித்தலையும் அதன் மூலம் அரச சேவைகளையும் பரிச்சயப்படுத்துகின்றன. ஒருவர் சுயமாக ஒரு தொழில் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி அடைவதற்கு வழி காட்டக் கூடிய கல்வி எமது கல்வி முறையில் அறவே காணப்படவில்லை. தனித்தோ கூட்டாகவோ உற்பத்தி சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு அதன் மூலம் உயர்ச்சியை மட்டுமே அளிக்கக் கூடிய துறைகளில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கான தகுதியை வழங்கக் கூடிய வகையில் எமது கல்விஅமைப்பில் மாற்றங்கள் ஏற்படுதல் அவசியமானது.

இறுதியாக எமது கல்வி அமைப்பை அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பேணப்படும் நவீன விஞ்ஞான தொழில் நுட்ப கல்வி முறைகளோடு ஒப்பிடும் பொழுது நாம் எத்தனையோ தலைமுறைகள் பின்தங்கியுள்ளமை தெளிவாகப் புலப்படும். இதுவும் கால ஓட்டத்தில் எம் சமூகம் மீது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் ஒரு காரணியாக மாறும்.

எனவே எம் சமூகத்திற்கு எந்த வகையிலும், திருப்திகரமாக அமையாத பலதரப்பட்டகுறைபாடுகள் கொண்ட இந்தக் கல்வி முறையை மாற்றி, சமூகத்திற்கு நூற்றுவீதமும் பயன் படக்கூடிய திறனும், பண்பும் பொருந்திய கல்வியாளர்களை உருவாக்கக் கூடிய வகையில், எமது கல்விமுறை மாற்றி அமைக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்டு காலத்தின்- சமூகத்தின் முழு நிலைகளிலும் பயன்படக் கூடிய ஒன்றாக்கப்படல் ஒரு யுக மாற்றத்தை எதிர் நோக்கி நிற்கும் எமது சமூகத்தின் தாமதிக்க முடியாத உயிர், உயர் பிரச்சினைகளில் ஒன்றாகும்.

முதற்பரிசு பெற்ற சிறுகதை



# தழும்புகள்

ரஜனி பேராயிரவன்

செல்லக்கிளி அம்மாவின் நினைவு தூபி தாண்டி பலாலி வீதியில் ..

வீதியில் வழக்கத்திற்கு மாறாக அதிக சனநடமாட்டம் பரபரப்போடு கூடிய ஏதோ ஒன்றிற்கான எதிர்பார்ப்போடு அவர்கள் அலைந்து கொண்டிருப்பதாக தெரிந்தது.

முகங்களில் ஏதோ ஒரு ஒளியோடு ..

வாழ்வின் சந்தோசமான கணங்கள் இவைதான் என்ற பாவனையில் வீதியில் கூட்டம்கூட்டமாக சிரித்து கதைத்தவாறு மக்கள்.

என்ன இன்று...?

எனது சிந்தனையை தனது கேள்விகளால் குழப்பிக் கொண்டிருந்தான். எனது நான்கு வயது மகன்.

கான்ரிலை கைகளால் இறுகப்பற்றியபடி... வீதியில் போவோர் வருவோர் பற்றி எல்லாம் கேள்விகள்.

கேள்விகளிற்கு பதில் சொல்லுவதா? இல்லை ஏதோ ஒரு மயக்கத்தில் மிதக்கும் சனங்களோடு மோதாது சைக்கிள் ஓடுவதா?

கேள்வி கேட்டு அவன் சலிப்படைந்ததில்லை.

பதில் சொல்லித்தான் நான் அலுத்துப் போனதுண்டு.

சனங்கள் என்றால் அவனுக்கு வலு சந்தோசம். ஒவ்வொருத்தர் பற்றியும் ஒவ்வொன்று பற்றியும் ஆயிரம் சந்தேகங்கள் அவனுக்கு.

அத்தனையும்கேள்விகளாக மாறும்.

''அப்பா ஏன் எல்லாரும் ஒரே பக்கமாகப் போகினம்'' நான் கவனித்தும் சிந்தனையில் எடுக்காததை அவன் கவனித்து விட்டான்.

ஓம். சனம் எல்லாம் பரமேஸ்வராச்சந்தி பக்கமாகத் தான் போகுதுகள்.

அங்கயிருந்து யாரும் வருவதாகத் தெரியவில்லை. சந்தியிலும் சரியான சனம் நிற்பது தெரிகிறது.

என்ன நடந்தது இவர்களுக்கு. மனுசரை இடிச்சு விழுத்திக் கொண்டு... குழந்தையளைக் கூடக் கவனிக்காமல்...

இன்டைக்கு என்ன...?

''அண்ணை வழி விடுங்கோ மூன்று மணியாகப் போகுது'' யாரோ ஒருவர் இடித்து விழுத்தி விடுபவர் போல கூறிக் கொண்டே ஓட...?

மூன்று மணிக்கு என்...?' அட நான் தான் மறந்துபோனன். அதற்கா இத்தனைபேருக்கும் இவ்வளவு அவசரம்.

நேரம் பார்க்கிறேன் 2.56

காலையில் வந்தவர்கள் இப்போது போகப் போகிறார்கள் அதற்காகவா இத்தனை பேரும்...

காலையில் அவர்கள் வந்திறங்கியபோது நடந்தவைகளை நேரில் கண்டவர்கள் கூறியது மீண்டும் நினைவில் வந்து நெஞ்சம் வலித்தது. இவ்வளவு சனத்தையும் விலத்தி அங்கால போக ஏலுமா?

''நான் ரவுணுக்கு போக வேணும். தயவு செய்து ஒருக்கா வழி விட்டு தாறீங்களா''.

சைக்கிளை உருட்டியவாறே வழியை மறித்தபடி மேலே பார்த்தவாறுநிற்பவர்களிடம் கேட்கிறேன்.

எப்படியும் இந்த இடத்தை விட்டு போய் விட வேண்டும் என்ற நினைப்புடன்.. ஆனால் யாரும் அசைவதாக இல்லை. சிலருக்கு எனது வேண்டுதல் எரிச்சலைக் கூடத்தருகிறது.

கூட்டத்தில்நின்ற வயதான ஒருவர் ''தம்பி உந்த சைக்கிளை ஒரு பக்கமா வைச்சுக் கொண்டு நில்லு. இப்ப அங்கால போக ஏலாது. போனால் இடிச்சுத்தான் விழுத்துங்கள். குழந்தைப் பிள்ளையையும் வைச்சிருக்கிறாய்''.

அவர் சொல்வதும் நியாயம் தான்.

''குழந்தைக்கும் அதைப் பாக்க ஆசையாயிருக்கும். எங்கயிருந்தோ எல்லாம் சனம் வந்திருக்குது. நீ றோட்டிலை நிண்டு குழந்தைக்கு காட்டன் தம்பி''

மகனுக்கும் அதைப் பாக்க ஆசையிருக்குமா? இருக்கலாம் குழந்தை தானே. ஓரமாக சைக்கிலை நிறுத்தி நானும் நிற்கிறேன். சிறுவர்கள், இளைஞர்கள், வயதானவர்கள், பெண்கள் என எல்லோரும் முண்டியடித்தபடி வானத்தை பார்த்துக் கொண்டிருக்க......

என்னைப் போல வீதியால் வந்து கூட்டத்துள் அகப்பட்டவர்களும் தங்கள் ... தங்கள் வேலைகள் தடைப்பட்ட எரிச்சலில் முகத்தை சுளித்தவாறு அங்காங்கு......

இங்க இவ்வளவு சனம் எண்டால் வளாக மைதானத்தில்...... ஒரு முறையாவது பார்த்துவிட வேண்டும் என்ற அவசரத்தில் எத்தனை பேர் முண்டியடிப்பார்கள்.

நாங்கள் நின்ற வீதியின் வலதுபக்கமாக உள்ள அம்பலவாணர் ஒழுங்கைக்குள்ளால் அது மைதானத்தை அடையும் என நினைத்து சிலர் ஓடி ஏமாற்றத்தோடு திரும்பி வந்தனர்.

எல்லோரின் வாய்களும் அதைப்பற்றியும் அவர்களைப் பற்றியுமே பல்வேறு ஊகங்களையும் உண்மைகளையும் பேசிக்கொண்டிருந்தன.

எனது நெஞ்சுக்குள் என்னவென இனங்காண முடியாத உணர்வொன்று.......... எரிச்சலா...... கோபமா...... துக்கமா...... எதுவென புரிந்து கொள்ள முடியாத உணர்வு.

மகனுக்கு அந்தக் கூட்டம் சிரிப்பையும் சந்தோசத்தையும் ஏற்படுத்த...... கண்கள் மின்ன சிரித்தவாறு என் கழுத்தை கட்டிப்பிடித்தவாறு துள்ளிக் கொண்டிருந் தான். அவனுக்கு சந்தோசம் வந்தால் தூக்கி வைத்திருக்கும் போதே துள்ளத் தொடங்கி விடுவான்,

ஏதோ நினைத்தவன் போல அமைதியானவன்.

''அப்பா எங்களிட்ட பூ இல்லையே''

''ஏனப்பன் பூ''

''மாமாக்களுக்கு போட்டு கும்பிடத்தான்''

...ம்... சனங்கள் வீதியில் கூடியிருப்பதை பார்த்து மாவீரரின் வித்துடல் தாங்கிய ஊர்தி வரப்போகிறது என நினைத்து விட்டான்.

''இல்லை செந்தூ இப்ப மாமாக்கள் வரேல்ல''

''அப்பா பகல்ல அம்புலி மாமா தெரியுமா? சரியான விசர் இவைக்கு என்னப்பா''

மகன் சொல்வதும் சனங்கள் நின்ற நிலையும் சிரிப்பைத் தான் தந்தது. சிலர் வீட்டுக் கூரைகளிலும், மதிலிலும், மரங்களிலும் கூட ஏறி நின்றனர்.

நாங்கள் நின்ற வீதியின் அருகிலுள்ள பெரிய மரம் ஒன்றில் ஏற முயன்ற இளைஞர் ஒருவர் விழ...... காலில் பலமான அடி. ரத்தம் வழிய மீண்டும் ஏற முயன்றார்.

''மானம் இல்லாததுகள்'' பக்கத்தில் நின்ற ஒருவரின் புறுபுறுப்பு. அவரை நிமிர்ந்து பார்த்தேன். கண்களில் ஏதோ ஒரு சோகம். அவ்விடத்தில் நிற்க விருப்பமில்லாதவர் போல அந்தரப்பட்டவாறு அங்குமிங்கும் பார்த்து கொண்டிருந்தார். இலேசாக சிரிக்க முயன்ற என்னையும் கவனியாதவர் போல.........

அவருள்ளும் ஏதோ உணர்வொன்று பொங்கிக் கொண்டிருந்ததோ... என்னவோ...

காலையில் வந்திறங்கிய போது அவர்கள் வழங்கிய இனிப்புப் பரிசுகள் பற்றியும் அவர்களின் கைகளை... கால்களை... தொடக் கிடைத்த சந்தர்ப்பங்கள் பற்றியும் கூட அருகில் பேச்சுக்கள்...

கிடைத்தவர்கள் கூற... கிடைக்காதவர்கள் ஏங்க... வந்தவர்கள் தேவதூதர்களோ என்று கூட எனக்குள் சந்தேகம். சரியானமறதிகார சனம் காலையில நடந்தவைகளை எப்பிடி ஞாபகம் வைச்சிருந்து கதைக்குதுகளோ.

''இந்த முறை எப்பிடியும் சரிவரும்'' யாரோ ஒருவர்.

''ஓமோம் முந்தின ஆக்கள் மாதிரி இல்லைத்தான் நம்பலாம்'' இன்னொருவர்.

என்ன நம்பிக்கை அதுவும் நாளைய உயிர் வாழ்விற்கே நம்பிக்கை இல்லாத இந்த மண்ணில இருந்து கொண்டு.

சரியாக மூன்று மணி.

வானத்தில் வடக்கு பக்கமாக இரைச்சல் கேட்க தொடங்க வீதியில் நின்றவர்களின் பாதங்கள் நிலத்திலிருந்து துள்ளத் தொடங்கின. கைகள் அசைப்பதற்கு ஆயத்தமாகின. ஆனாலும்... என்ன யாருக்கும் அதைத் தெரியவில்லை. வெறுமனே காற்றாடியின் சத்தமும் இரைச்சலுமே கேட்டது. கொஞ்சம் கொஞ்சமாக சத்தம் அதிகமாகி பின்பு அதுவும் இல்லாமல் போக கூடியிருந்தவர்களின் முகங்களில் ஏமாற்றம். ''அட அவன் மற்றப் பக்கத்தால போயிட்டான்'' பிறவுண் றோட்டில நிண்டிருந்தால் வடிவாகப் பாத்திருக்கலாம்''

சிலர் விரக்தியோடு கூற வேறு சிலர் பிறவுண் வீதிக்கு போக வழி தேடினர்.

''போகேக்க இந்தப் பக்கமாகத்தான் வருவான்''

காலமை என்ன வடிவா பாத்தனாங்கள்''

இவர்கள் அதைப் பார்த்ததே இல்லையோ என சந்தேகம் வந்தது. இந்த மண்ணில இருந்து கொண்டு அதைப் பார்க்காமல் என்ன? அது என்ன இன்னும் எத்தினை விதம்விதமான பெயர்களில... பார்த்திருக்கிறம்.

யுத்தம் கஸ்ரங்களை தந்தாலும் எத்தினையோ வித்தியாசமான வாழ்வானுபவங்களையும் எங்களுக்கு தந்திருக்கிறது.

இந்தக் காலத்திற்கே உரித்தான நிகழ்வுகள். எங்களுக்கு முன் வாழ்ந்தவர்களோ இனி வாழப்போகிறவர்களோ உணரமுடியாத சம்பவங்கள்.

சுதந்திரத்திற்கான ஒரு போர்... அதற்கான உன்னதமான அர்ப்பணிப்புக்கள். இருபது வருடங்களிற்கு முன் வாழ்ந்த தமிழன் எண்ணிக் கூடப் பார்த்திருக்காதவை.

சர்வதேசங்களில் பெருமையோடு பேசப்படும் ஒரு இனமாக இன்று தமிழினம் மாறினாலும் அவர்களிலேயே ஒரு பகுதியினருக்கு தமது இன்றைய நிலையோ... நடக்கும் சுதந்திரப் போரிற்கான அர்ப்பணிப்புக்களையோ புரிந்துகொள்ள முடியாதது... வேதனையானது.

இரு நிமிடங்களின் பின் மீண்டும் அதன் சட சட ஒலி. நீண்ட நாள் காணாத நண்பன் ஒருவனை காணப் போவது போல் முகங்கள் புன்னகையால் மலர்ந்தன.

மெல்லமெல்ல மேலெழுந்து தெரியத் தொடங்க சிலர் கைகளை அசைத்தவாறு கூச்சலிடத் தொடங்கினர். மேலெழுந்து வடக்கு பக்கமாக விரையத் தொடங்கியது. இவர்களின் ஆனந்தக் கூச்சல் கேட்டோஎன்னவோ அப்பிரதேசத்தை வட்டமிட தொடங்க... ஆனந்தம்தாங்க முடியாத சிலர் அங்குமிங்கும் ஓடியவாறு கையசைக்க... சிலர் வெறுமனே வேடிக்கை பார்க்க... வேறு சிலர் முகங்கள்ஒளியற்று இறுகிப்போய்...

மகனின் கரங்கள் முன்பை விட அதிகமாக கழுத்தை இறுக்க... ''என்னப்பன்''...

முகம் சிவந்து கண்களில் இதோ என்பது போல வழிய தயாராக கண்ணீர். உதடுகளின் துடிப்பை அடக்கவாயை இறுக முடியவாறு...

இவன் அதுக்கு பயப்பிடுகிறானா.

''செந்தூ அது ஒண்டும் செய்யாது குஞ்சு''

''அப்பா நீங்கள் அதைப் பாக்காதேங்கோ''

என் குரலையும் மீறி அவன் குரல் ஒலிக்கிறது.

அருகில் நின்றவர்களின் பார்வை எங்கள்மேல் படிய...

''தம்பி அது ஒண்டும் செய்யாது கையை தூக்கி காட்டுங்கோ பாப்பம்'' அருகில் நின்ற ஒருவர் கூற.

சத்தத்தோடு அவன் விம்மி விம்மி அழ... என்னால் எது சொல்லியும் அவனை கட்டுப் படுத்த முடியவில்லை.

அம்மா... அம்மா... எனக் கைகால்களை உதறியவாறு மிகப் பரிதாபமாக எனது மகன்...

அதன் சத்தத்தைக் கூட கேட்க விரும்பாதவன் போல இரு காதுகளையும் பொத்தியவாறு என் தோளில் தலையைப் புதைத்து அம்மா...... அம்மா... என என் பிள்ளை சத்தமிட்டு அழ...

ஏன் நான் இந்த நேரம் இங்க வந்தன்.

எதை அவன் மறந்துவிட வேண்டும் என்று நினைக்கிறேனோ அதை அவன் அடிப்படையிலிருந்தே ஞாபகம் வைச்சிருக்கிறான்.

அவன் சிரிப்பது விளையாடுவது எல்லாம் அந்த நிகழ்வைத் தற்காலிகமாக மறந்த சில நிமிடங்களில்தான்.

அந்த ஞாபகங்கள் அவனை விட்டு என்றுமே போகாது.

அவனுடைய அன்பான அம்மா.

எந்தக் குழந்தையும் ஆசையோடு நேசிக்கும் அம்மா.

அவன்ரை கண்ணுக்கு முன்னால துடிச்சு... துடிச்சு...

இத்தனை பேரும் சந்தோசக் கூச்சலுடன் பார்க்கும் இதுதானே அவன்ரை அம்மாவை அவனுடைய கண்ணுக்கு முன்னால சுட்டு...

என்ரை பிள்ளையின்ரை உயிரான அம்மா...

அவனை சிரிக்கச் செய்து தானும் சிரித்து கடைசி வினாடி வரை கூட அவனுடன் உயிரும் உணர்வுமாக விளையாடிக் கொண்டிருந்தவள்.

ஒரு வினாடியில் எல்லாம் கனவாகிப் போனது,

ஒரு வருசம் என்ன எத்தினை வருசமானாலும் மறக்கக் கூடியதா?

எனக்குக் கூட இடையில் கிடைத்த துணை அவள்.

இவனுக்கு... இந்த பூமியில் கண்விழித்தது முதல் அவள் தான் உலகமே. உலகையே இவனுக்கு அறிமுகப்படுத்தியது கூட அவள்தான். அப்பா... அன்பு... பாசம் எல்லாம் அவள் சொல்லிக் கொடுத்தவை.

ஒரு பொம்மையைக் கூட தன்னிடமிருந்து பிரித்தால் அழும் குழந்தையிடமிருந்து அதன் உயிரான அம்மாவை அவனுடைய உலகமான அம்மாவை ஒரே வினாடியில் பிரித்தால்.

''செந்தூ அப்பாவைப் பாருங்கோ''

எப்போதும் சிரிப்பை சிந்தியபடி... சதா கேள்விகள் கேட்கும் உதடுகள். நெஞ்சத்து விம்மல் ஒலி வெளியே கேட்காதவாறு இறுக மூடியிருக்க...வாய்கோணியவாறு... ''ம்மா அம்மா''

என் கண்களும் என்னையறியாது கலங்க அவனைத் தூக்கி வைத்திருக்க முடியாதபடி கைகால்கள் நடுங்க மதிலோடு சாய்ந்து கொள்கிறேன்.

# புலனாய்வு நடவடிக்கைகளும் தடய அறிவியலும்



சி. சிவபாலன்

ஆதிகால மனிதன் தனது உணவுக்காக மிருகங்களை வேட்டையாடும் போது அவற்றின் காலடித் தடங்களையும் அவை உண்டு விட்டு எஞ்சவிட்ட உணவுகளையும் கொண்டு அவை இருக்கும் இடங்களை இனம்கண்டான். அவ்வாறே எதிரி விலங்குகளின் நடமாட்டம், தமது குழுவைச் சேர்ந்த ஏனையோரின் அசைவுகள் என்பனவற்றையும் அறிந்து கொண்டான்.

எதிரிப்படைகளின் நகர்வு, அவர்களின் நடமாட்டம் போன்றவற்றையும் தடயங்களைக் கொண்டு இனங்காணும் ஆற்றல் அவனுக்கு இருந்தது- குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை தடயங்கள் மூலம் கண்டறியும் திறன் அவனுக்கு இருந்தது.

கண்ணெதிரே நடவாத சம்பவம் ஒன்றை அச்சம்பவம் நடந்த இடத்தில் காணப்படும் தடயங்களைக் கொண்டு ஊகித்தறியும் அறிவு அவனுக்கு ஆதிகாலம் முதலே இருந்து வந்தது.

இதனை அடியொற்றி அவனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இன்றைய சமுதாயத்தில் இடம்பெறக்கூடிய குற்றச் செயல்களில் - அவற்றில் ஈடுபடுவோரை கண்டறிய உதவும் தடய அறிவியலாக ( **Forensic Science** ) வளர்ச்சி பெற்றது.

குற்றம் நடைபெற்ற இடத்திலோ அல்லது அதனுடன் தொடர்புடைய இடத்திலோ கண்டெடுக்கப்பட்ட பொருட்களைப் பகுப்பாய்வு செய்யும் 'தடய அறிவியல்' இன்று ஓர் வளர்ச்சி பெற்ற விஞ்ஞானமாக மாறியுள்ளது.

இத்தடயப்பொருள்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான பல நவீன ஆய்வு கூடங்கள் இன்று உலகின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. அசாதாரண மரணங்கள் குறித்து ஆய்வு செய்யும் ஆய்வுகூடங்கள் தொடக்கம் மிக நுணுக்கமான முறையில் பகுப்பாய்வு செய்து முடிவுகளைத் தரக்கூடிய அதிநவீன ஆய்வு கூடங்கள் கூட இன்று உள்ளன.

இந்த ஆய்வு கூடங்கள் புகைப்படப்பிரிவு, நுணுக்குக் காட்டிப்பிரிவு, ரேகை ஆராய்ச்சிப்பிரிவு, இரசாயனப் பகுப்பாய்வு என்பவற்றுடன் புலனாய்வு முயற்சிகளுக்கு துணைபுரியும் எக்ஸ் கதிர் உபகரணங்கள், கணனிகள் என்பனவும் இடம்பெற்றுள்ளமை ஒரு முக்கிய அம்சமாகும்.

ஆரம்பகால புலனாய்வு நடவடிக்கைகளில் தடய அறிவியலானது குற்றம் நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களை அவதானித்து குற்றம் நடந்த சூழலை ஊகித்து அறிதல் என்ற நிலையிலேயே இருந்து வந்தது. 19-ம் நூற்றாண்டின் இறுதி அரைப் பகுதியில் இரசாயனவியல், புகைப்படத்துறை, நுணுக்குக் காட்டிகள் என்பனவற்றின் உதவியோடு பல முன்னேற்றகரமான முறைகள் தடயஅறிவியலில் புகுத்தப்பட்டன. அத்துடன் தடய அறிவியலானது ஒரு விஞ்ஞான முறையாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இக்கால கட்டத்தில் தடய அறிவியலில் ரேகை நிபுணர்கள், புகைப்பட நிபுணர்கள் ஆகியோரின் பங்களிப்பே அதிகமாக இருந்தது. முக்கியமாக கைவிரல் அடையாளங்கள் குற்றச் செயலில் ஈடுபட்டவரை நிரூபிக்க உதவின.

பின்னர், குற்றம் நடந்த இடத்தில் காணப்பட்ட இரத்தக்கறை, மயிர், கழிவுப் பொருள்கள் போன்றனவும் ஆய்வுக்குரியவையாகமாறின. தடய அறிவியலானது நோயியல், உயிரியல், மானுடவியல், உளவியல், இரசாயனவியல் போன்ற பல்வேறு துறைகளையும் இணைத்துக் கொண்டு பரந்த பரப்புடைய ஒரு விஞ்ஞானமாக தோற்றம் பெற்றுள்ளது. அத்துடன் மருத்துவத் துறையில் இது முக்கிய பகுதியாக காணப்படுகிறது.

எலும்புக் கூடுகளை அல்லது எலும்புகளை வைத்துக் கொண்டு அவற்றுக்கு உரியவரின் பால், இனம், வயது, இரத்தவகை என்பவற்றை திருத்தமாக அறிந்து கொள்ள முடியும் என மானுடவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். உயிருள்ள ஒருவரின் எலும்பு அமைப்பைக் கொண்டும் அவரின் பால், இனம், வயது என்பவற்றை கண்டுபிடிக்க முடியும். அண்மைக் காலத்தில் மண்டை ஓட்டைக் கொண்டு அம்மண்டையோட்டுக்கு உரியவரின் முகத்தோற்றத்தை அமைக்கும் தொழில் நுட்பம் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது.

இம்முறையானது விபத்துக்கள், அழிவுகள், இடிபாடுகளில் சிக்கி இறந்து உருக்குலைந்த நிலையில் மீட்கப்படும் சடலங்களை அடையாளம் காணவும் உதவுகிறது. மேலும் பால், இனம், வயது போன்றவற்றில் தவறான தகவல்களைத் தருவோரின் உண்மைத் தகவல்களைக் கண்டறியவும் பயன்படுத்தப்படுகிறது.

குற்றப் புலனாய்வுத் துறையில் தடய அறிவியலானது பெரும் பங்கினை வகித்து வருகின்றது. இயற்கைக்கு மாறான மரணங்கள், சந்தேகத்துக்கிடமான மரணங்கள், திடீர் மரணங்கள், பலாத்காரத்தால் ஏற்பட்ட மரணங்கள் என்பவை குறித்து சரியான தகவல்களை பெற இறந்தவரின் உடலை மருத்துவ பரிசோதனைக்கு (பிரேத பரிசோதனை) உட்படுத்துதல் மிகவும் பயனுள்ளதாகும். இச் சோதனையை மேற்கொள்ளும் மருத்துவநிபுணர் மரணத்திற்கான மருத்துவக் காரணத்தை கண்டறிவார்.

சடலத்தின் திசுக்கள், உறுப்புக்கள், உடல் திரவம், சிறுநீர், முள்ளந் தண்டுப் பாயம், இரைப்பையிலுள்ள பொருள்கள் என்பன முக்கிய ஆய்வுப் பொருட்களாக இருக்கும். அநேகமாக நஞ்சருந்திய அல்லது நஞ்சூட்டப்பட்டதால் ஏற்படும் மரணங்களின் போது மேற்படி பொருட்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் இறப்புக்குக் காரணமான நச்சுப் பொருள், இறந்த நேரம் என்பவற்றைக் கண்டறியலாம்.

சம்பவம் நடந்த இடத்தில் காணப்பட்ட இரத்தக்கறை முக்கிய தடயப்பொருளாகும். இந்த ரத்தக் கறைகளை சேகரித்து அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தும் உயிரியலாளர்கள் அதுஇறந்தவருடையதா? அவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட வேறொருவருடையதா? என்பதையும் இரத்தத்தின் வகை, அதில் காணப்படும் அணுக்களின் எண்ணிக்கை என்பனவற்றையும் கண்டறிவார். இதனைச் சந்தேக நபரின் இரத்தத்துடன் ஒப்பிடுவதன் மூலம் குற்றவாளியை நிரூபிக்க முடியும்.

> **தடய அறிவியலானது நோயியல், உயிரியல், மானுடவியல், உளவியல், இரசாயனவியல் போன்ற பல்வேறு துறைகளையும் இணைத்துக் கொண்டு பரந்த பரப்புடைய ஒரு விஞ்ஞானமாக தோற்றம் பெற்றுள்ளது. குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு மிகுந்த உதவி புரியும் ஒரு அறிவியலாக தடய அறிவியல் உள்ளது.**

பாலியல் வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவரின் உடலில் காணப்படக் கூடிய உமிழ்நீர், விந்து என்பவற்றைக் கொண்டு குற்றம் புரிந்தவரை நிரூபிக்க முடியும்.

பற்கள், குற்றப் புலனாய்வு நடவடிக்கைகளில் முக்கியமான ஒரு தடயப் பொருளாகும். அழிவுகள் அல்லது விபத்துக்களில் ஏற்படும் மரணங்களின் போதும் இவற்றில் சிக்கி இறந்தவர்களின் சடலங்களை இனம்காண அல்லது வன்முறை மூலம் கொல்லப்பட்ட ஒருவரின் சடலத்தை இனம்காண அவர்களின் பல் அல்லதுபல்வரிசை உபயோகம் உள்ளதாக அமையும்.

மேலும் பற்களால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் அல்லது பல் அடையாளங்கள் குற்றவாளியைக் கண்டுபிடிக்க சிறந்த தடயமாக அமையக் கூடியது. பல் மருத்துவத் துறையில் அனுபவம் வாய்ந்த ஒருவரால், பற்களால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள், அல்லது சம்பவம் நடந்த இடத்தில் காணப்பட்ட மீதமான உணவில் - உதாரணமாக பழங்கள், இறைச்சி, சுவிங்கம் - காணப்பட்ட பல் அடையாளங்களை வைத்துக் கொண்டு குற்றவாளிகளை நிரூபிக்க முடியும்.

குற்றச் செயல்களில் தொடர்ச்சியாக ஈடுபடுவோர் விட்டுச் செல்லும் தடயப் பொருள்கள் உளவியல் நிபுணர்களால் ஆராயப்படுகின்றன. அதாவது தொடராகக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் ஒரேவகையான தடயப் பொருள்களை விட்டுச் செல்வது வழமை எனவும் குற்றம்புரியப்பட்ட விதத்தில் ஒற்றுமைத் தன்மை காணப்படும் எனவும் உளவியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். மேலும் இவ்வாறாக குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கெனவே பொதுவான உளவியலும் உண்டு என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயுதங்களால் புரியப்படும் குற்றச் செயல்களில் துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், கூரான ஆயுதங்கள் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவ்வாறான குற்றச் செயல்களின் போது பெறப்படும் பல தடயப் பொருள்கள் பல்வேறு ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

துப்பாக்கிகளால் ஏற்படும் மரணங்களின் போது இறந்தவரின் உடலிலிருந்து எடுக்கப்படும் சன்னம் முக்கியமான ஒரு தடயப் பொருளாகும். இச் சன்னத்தை ஆராய்வதன் மூலம் எந்த வகை துப்பாக்கியால் சுடப்பட்டார் என்பதை இலகுவில் கண்டு கொள்ளலாம். அத்துடன் பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்டால் உறுதிப்படுத்திக் கொள்ள சன்னத்திலுள்ள அடையாளம் உதவியாக இருக்கும். மேலும் வெற்றுத் தோட்டா கண்டுபிடிக்கப்படுமாயின் அதில் உள்ள அடையாளமும் பயன் தரக்கூடிய ஒரு தடயமாகும். மேலும் துப்பாக்கிச் சூட்டுக் காயத்தை நுணுக்கமாக ஆராய்வதன் மூலம் கொல்லப்பட்டவர் எத்திசையிலிருந்து சுடப்பட்டார்? எவ்வளவு தூரத்திலிருந்து சுடப்பட்டார்? என்பனவற்றை ஊகித்து அறிந்து கொள்ள முடியும்.

பாரிய குண்டுவெடிப்புகளின் போது இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் என்போரின் உடலில் இருந்து எடுக்கப்படும் சன்னங்களிலிருந்தும் சுற்றாடலில் கண்டுபிடிக்கப்படும் வெடிகுண்டின் பகுதிகளிலிருந்தும் வெடிகுண்டின் அமைப்பை பெருமளவில் ஊகித்து அறிய முடியும். மேலும் இரசாயன பகுப்பாய்வின் மூலம் வெடிப்பொருளையும், வெடிப்பொருளின் அளவையும், பயன்படுத்தப்பட்ட வெடிக்க வைக்கும் சாதனம், வெடிப்பொருள் அடைக்கப் பாவிக்கப்பட்ட பொருள், நேரம் காட்டி என்ன? என்பவற்றையும் அறிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கலாம்.

அதிசக்தி வாய்ந்த குண்டு வெடிப்புகள் நிகழும் போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் கூட சரிவரக் கணிப்பிட முடியாது போகலாம். அவ்வேளைகளில் சம்பவம் நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட மனிதச் சிதறல்களை ஆராய்வதன் மூலம் இதனை அறிந்து கொள்ளலாம் என உயிரியலாளர்கள், மானுடவியலாளர்கள் என்போர் கூறுகின்றனர்.

கூரான ஆயுதங்களால் ஏற்படும் மரணங்களின் போது இறந்தவரின் உடலில் ஏற்படுகின்ற காயங்கள், அவற்றின் ஆழ, அகலங்கள் ஆராயப்பட்டு பல்வேறு முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஓரளவிற்கு பாவித்த ஆயுதம் குறித்தும் ஊகித்தறிய முடியும்.

தடய அறிவியலில் போலி ஆவணங்களைப் பாவித்து செய்யப்படும் மோசடிகள் குறித்த புலனாய்வும் உள்ளடங்கி உள்ளது. போலி ஆவணங்களைத் தயாரித்து மோசடி செய்யும் பேர்வழிகளை கண்டுபிடிக்க பல்வேறு முறைகள் உபயோகத்தில் உள்ளன. இதில் கையெழுத்து நிபுணர்களின் பங்களிப்பு முக்கியமானது. தற்போது ஆவணங்கள் போலிகளா? உண்மைகளா? என்பதைக் கண்டறியும் கணனிகள் பல உபயோகத்தில் உள்ளன.

இங்கு கையெழுத்துகளை ஒப்பிடுவது மட்டுமன்றி ஆவணமானது தட்டச்சு செய்யப்பட்டிருப்பின் எழுத்துக்களின் அமைப்பு, தேய்ந்த எழுத்துக்கள், பொறிக்கப்படும் அழுத்தம் போன்ற பல விடயங்கள் நுணுக்கமாக ஒப்பிடப்படுகின்றன. இதேபோன்று போலி ஆவணங்கள் அச்சிடப்படும் போது எழுத்துக்களின் வடிவம், அழுத்தம் என்பன போன்ற விடயங்கள் ஒப்பிடப்பட்டு போலி ஆவணங்களை அச்சிட்ட அச்சகங்கள் கண்டறியப்படுகின்றன.

நவீன தடய அறிவியல் ஆய்வு கூடங்களில் கணனிகள் மூலம்குற்றவாளிகளின் அடையாளங்கள், விரலடையாளங்கள், அவர்களைப்பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டு பேணப்படுகின்றன. பின்னர் இவை குற்றச் செயல்களின் போது விட்டுச் செல்லப்பட்ட தடயங்களுடன் கணனி மூலம் ஒப்பிடும் முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு முயற்சிகள் காரணமாகதடய அறிவியலானது பல்வேறு துறைகளையும் இணைத்துக் கொண்டு ஒரு விஞ்ஞானமாக வளர்ச்சி அடைந்துள்ளமையைக் காணலாம்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னிலங்கை பத்திரிகைகளின் இராணுவத்துறை ஆய்வாளர்கள்



ஜெயந்தன்

யாழ் குடாநாட்டை சிறிலங்கா இராணுவம் அடுத்த மாத இறுதியில் கைப்பற்றிவிடும்... விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக முறியடிக்கப் பட்டுவிட்டனர்... இனிக் காடுகளே இராணுவத்தின் முக்கிய போர் மையமாக இருக்கும்... இப்படியான தொனியில் கடந்த நான்கு வருட காலமாக இரண்டாம் ஈழப்போர் காலகட்டத்தில் தென்னிலங்கை வாரப்பத்திரிகைகளில் அவற்றின் இராணுவத்துறை ஆய்வாளர்கள் தொடர்ந்து எழுதிவந்திருக்கின்றனர்.

தென்னிலங்கை வார இறுதிப் பத்திரிகைகளில் குறிப்பாக ஆங்கிலப் பத்திரிகைகளில் அவற்றின் முற்பக்க தலைப்புச் செய்திக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம்கொண்ட ஓர் அம்சமாக அவற்றின் இராணுவத்துறை ஆய்வுக் கட்டுரைகளும் பத்திகளுமே முக்கிய இடம் பிடித்திருக்கின்றன.

## ஆய்வாளர்கள் -ஒரு நோக்கு

இனி இப் பத்திரிகைகளில் இராணுவ ஆய்வுகளையும் விமர்சனங்களையும் எழுதிவரும் இராணுவத் துறை ஆய்வாளர்களை நோக்குவோம். வார இறுதிப் பத்திரிகைகளாக வெளிவரும் ‘சண்டே ரைம்ஸ்’ ‘சண்டே ஐலண்ட்’, ‘சண்டே லீடர்’, ‘சண்டே ஒப்சேவர்’ ஆகியவை உள்நாட்டு போர் குறித்த ஆய்வுகளை வாரம் தோறும் தொடர்ந்து வெளியிடுகின்றன.

சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் இராணுவத்துறை ஆய்வாளர் லக்ஷ்மன் குணசேகர எழுதிவருகிறார். ஆரம்பத்தில் இப்பத்திரிகையில் எழுதிவந்த இக்பால் அதாஸ் என்பவர் கடந்த யூன் மாதம் 19-ம் திகதி முதல் வெளிவர ஆரம்பித்த சண்டே லீடர் வாரப் பத்திரிகையின் இணையாசிரியராகவும் அதன் இராணுவத்துறை ஆய்வாளராகவும் இணைந்து கொண்ட பின்னர் லக்ஷ்மன் குணசேகரவே சண்டே ரைம்ஸின் இராணுவத்துறை ஆய்வாளராக எழுதிவருகிறார்.

சண்டே ஐலண்டை பொறுத்தவரையில் ஆரம்பத்தில் ஷாமிந்திர பெர்டினான்டோ என்பவர் எழுதிவந்த போதிலும் தற்போது அப்பத்திரிகையின் அரசியல்துறை ஆய்வாளரான தாரகி (டி. சிவராம்) இராணுவத்துறைசார் ஆய்வுகளையும் எழுதி வருகிறார்.

சண்டே லீடர் பத்திரிகை புதிதாக வெளிவர ஆரம்பித்த போதும் பாதுகாப்புத்துறை ஆய்வு விமர்சனங்களில் பிரபலமான இக்பால் அதாஸ் அதில் எழுதுவது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாக இருக்கிறது. சண்டே ஒப்சேவரில் ஆர். ரி. எப். என்ற குறியீட்டு பெயரில் ஒருவர் இராணுவத்துறை சார் ஆய்வுகளை எழுதிவருகிறார்.

## இவர்கள் என்ன சொல்கிறார்கள்?

மேற்படி இராணுவ ஆய்வாளர்கள் இரண்டாம் கட்ட ஈழப் போரின் பின்பே தமது ஆய்வுகளை எழுத ஆரம்பித்தவர்கள். இந்த வகையில் இக்பால் அதாஸ் என்பவர் தென்னிலங்கை வாரப்பத்திரிகைகளில் வாரம் தோறும் இராணுவ ஆய்வுக் கட்டுரைகள் வெளியாக மூலகர்த்தாவாக இருந்தவர். மற்றையவர் ஷாமிந்திர பெர்டினான்டோ.

இக்பால் அதாஸை பொறுத்த வரையில் அவர் ஆரம்ப காலகட்டத்தில் கூடியளவில் சிறிலங்கா இராணுவம் சார்ந்த ஆய்வுகளையே எழுதினார். இராணுவம் காங்கேசன் துறையை கைப்பற்ற எடுத்த ‘‘ஒபரேஷன் ஜெயசக்தி’’ நடவடிக்கையின் போது இவர் எழுதிய ஆய்வுகள் விடுதலைப்புலிகள் இனி தலையெடுக்க முடியாத அளவுக்கு முதுகெலும்பு முறிக்கப்பட்டு விட்டனர் என்ற தொனியில் அமைந்திருந்தன. இவரின் இப்போக்கு இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஆரம்பத்தில் இருந்து யாழ். குடாநாட்டை இராணுவம் சுற்றிவளைத்து நெரிக்க எடுத்த ஒபரேஷன் வலம்புரி, பலவேகய i, பலவேகய ii போன்ற இராணுவ நடவடிக்கைகளின் போது வெளியான அவரின் ஆய்வுக் கட்டுரைகளிலும் நீடித்தது. எனினும் சிறிலங்கா இராணுவத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த லெப். ஜெனரல் கொப்பேகடுவ அராலித்துறை கண்ணிவெடியில் பலியான பின்பு அதாஸின் எழுத்துப்போக்கில் மாற்றம் தெரிய ஆரம்பித்தது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் உள்ள தீவுப்பகுதியினுள் விடுதலைப்புலிகள் எவ்வாறு ஊடுருவி இத் தாக்குதலை நடாத்தினர் என இராணுவ தரப்பு குழம்பிய வேளையில் இவரும் நன்றாக குழம்பியிருந்தார் என்பது அவரின் ஆய்வுக்கட்டுரைகளிலிருந்து புலனாகியது. தீவுப் பகுதியினுள் புலிகள் ஊடுருவியதை வியப்புடன் நோக்கிய அவர் விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியில்

> **போரில் ஈடுபட்டுள்ள ஓர் இராணுவம் தனது போர் தளபாடங்களில் ஒன்றாகத்தான் பத்திரிகையாளர்களையும் கருதுகின்றது. இந்தப் பத்திரிகையாளர்களின் பிரசார உத்தியும் உளவியல் ரீதியாக எதிர்த்தரப்பு மீது பிரயோகிக்கப்படும் ஓர் போர்தான். இதன் மூலம் நாட்டின் பொதுமக்களின் கவனமும் பிற விடயங்களில் சிதறி விடாது போரிலேயே கருத்தூன்றச் செய்ய போர் செய்யும் இராணுவமும் பிரசாரம் செய்யும் பத்திரிகையாளரும் இணைந்து செயற்படுகின்றனர்.**

தோற்கடிக்கப்பட முடியாத சக்திகள் என ஏற்றுக் கொண்டு அதை தவிர்க்க முடியாத நிலையில் தமது கட்டுரைகளில் குறிப்பிடவும் ஆரம்பித்தார்.

தொடர்ந்து வெளியான அவரின் பல ஆய்வுகள் இராணுவப் பலவீனங்களை சுட்டிக்காட்டி விடுதலைப் புலிகளின் பலங்களை எடுத்துக்காட்டி இராணுவ பலவீனங்களை சீர் செய்ய ஆலோசனைகள் வழங்குவன போன்று அமைந்தன. இந்த வகையிலான அவரின் எழுத்துப்பாணி இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னா பதவி ஏற்ற பின் நெருக்கடிக்கு உள்ளானது.

இராணுவப் பலவீனங்களை இவர் எடுத்துக் கூறுவது இராணுவத்தினரின் மனோ நிலையைப் பாதிக்கும் என்று கூறிய இராணுவத் தளபதி சிசில் இராணுவ அதிகாரிகளுக்கு இராணுவத் தரப்பு செய்தி எதுவும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படக் கூடாது என எச்சரித்து சுற்றறிக்கை ஒன்றையும் அனுப்பிவைத்தார். இக்பால் அதாஸின் இராணுவ ஆய்வுகட்கு இராணுவ தரப்பு தகவல்களை வழங்கும் வளங்களாக பல இராணுவ மூத்த அதிகாரிகளே இருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிசிலின் அறிவுறுத்தல் வெளிவந்த போதிலும் இக்பால் அதாஸ் இராணுவ பலவீனங்களையும் சிசிலின் செயற்திறனின்மையையும் சுட்டிக் காட்டி எழுதிவந்தார். இந்நிலையில் இராணுவத் தளபதி சிசில் தனது மிரட்டலின் உச்சக்கட்டமாக அதாஸின் வீட்டிற்கு மரணித்தவர்க்கான மலர்வளையம் ஒன்றை அனுப்பிவைத்தார். இராணுவ தளபதியின் இச்செயல் தென்னிலங்கை சுதந்திர பத்திரிகையாளர் சங்கத்தின் கடுமையான கண்டனத்திற்குள்ளாகி அதன் பலனாக உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தும் செய்திகளை துணிந்து வழங்கியவர் என அமெரிக்க சுதந்திர பத்திரிகையாளர் சங்கத்தினால் அதாஸ் பாராட்டப்பட்டு, கடந்த நவம்பரில் அவர் வாஷிங்டனில் பத்திரிகையாளர் விருது ஒன்றையும் பெற்றுக் கொள்ள வழிவகுத்தது. தற்போது சண்டே லீடர் பத்திரிகையின் இணையாசிரியராக இருக்கும் அதாஸ் அதில் களநிலைமை (Situation Report) என்ற தலைப்பில் வாரம் தோறும் தமது இராணுவ ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவருகிறார். ஆரம்பத்தில் சண்டே ரைம்ஸில் எழுதிய ஆய்வுகளுக்கும் தற்போது சண்டே லீடர் பத்திரிகையில் எழுதும் ஆய்வுகளுக்கும் இடையே நிறையவே வேறுபாடு காணப்படுகின்றது. தற்போது இவரின் எழுத்துப்போக்கு மிதவாதத் தன்மையாக காணப்படுகிறது.

அடுத்து சண்டே ஐலண்டில் ஆரம்பத்தில் (1991 - 1992 காலப்பகுதி) இராணுவ ஆய்வுக் கட்டுரைகளை எழுதிய ஷாமிந்திர பெர்டினான்டோ அனேகமாக இராணுவ கட்டமைப்பு சீராக்கம் குறித்தே வலியுறுத்தி வந்தவர். இதற்காக இவர் விடுதலைப் புலிகளை சுட்டிக்காட்டி இராணுவத் தலைமையும் அரசியல் தலைமையும் பலமாக இருப்பதே போரின் வெற்றியை உறுதி செய்யக் கூடியது என எழுதிவந்தார்.

விடுதலைப்புலிகள் கிழக்கில் செயற்படுவதை அடிக்கடி சுட்டிக்காட்டும் இவரின் ஆய்வுக் கட்டுரைகளை மேலோட்டமாக நோக்கும்போது புலிகள் கிழக்கில் பலம் பெற்றுவிட்டதை இவர் ஒப்புக்கொள்வது போல் அமைந்திருக்கும். ஆனால் அவர் தனது எழுத்து மூலம் புலிகளின் செயற்பாடுகளை பூதாகரமாகக் காட்டி கிழக்கில் இராணுவம் தொடர்ந்து தீவிர வேட்டையில் இறங்க வேண்டும் என்பதை மறைமுகமாக எடுத்துக் கூறுவதாகவே இருக்கும்.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் தோற்றம் பெற்றபோது சண்டே ஐலண்டில் நரேஷ் இளையதம்பி என்பவர் எழுதிய பல கடல் சமர் குறித்த ஆய்வுக் கட்டுரைகள், கடற்புலிகளின் கடலாதிக்கம் தற்போது உயர்வாக உள்ள நிலையில் வெளிவருவது நின்று விட்டதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதோர் விடயமாகும்.

சண்டே ஐலண்டின் அரசியல் விமர்சகராகவும் இராணுவத்துறை ஆய்வாளராகவும் இருக்கும் தாரகி ஆரம்பகட்டத்தில் இராணுவதரப்புச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதி வந்தார். அவற்றை பெரிதுபடுத்தினார். தமிழ்க்குழு ஒன்றின் உறுப்பினராக இருந்து தென்னிலங்கை பத்திரிகைகளில் பத்தி எழுத்தாளராக பின்னர் மாறிய இவர் ஏனைய ஆய்வாளர்கள் போன்றே ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் தாக்கி விட்டு தப்பிவிடும் தந்திரத்தை நகையாடினார். இது விடுதலையை பெற்றுத்தராது என்றார்.

ஆனையிறவுச்சமர், கொழும்பு தொடர் குண்டுவெடிப்புகள் ஆகிய சம்பவங்களின் பின் ஈழ விடுதலைப் போராட்டம் என்பது புலிகளின் தலைமையில் யாராலும் தடுக்க முடியாத அளவுக்கு இலக்கை நோக்கி நகர்கின்றது என எழுத ஆரம்பித்தார் தாரகி. இவர் தனது ஆய்வுக் கட்டுரைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து வெளிவரும் தமிழீழ பிரசுரங்களை ஆதாரமாக கொண்டு எழுதுவதன் மூலம் தாம் ஒருபக்க - இராணுவ தரப்பைமட்டும் கொண்டு - ஒருதலைப்பட்சமாக எழுதுவதில்லை என்பதை வெளிக்காட்ட தனது கட்டுரைகளில் முயல்கிறார்.

சண்டே ஒப்சேவரில் பாதுகாப்புச் செய்திகள் என்ற தலைப்பில் ஆர். ரி. எப். என்பவர் எழுதும் கட்டுரைகள் உண்மையில் இராணுவத்துறை ஆய்வுகளாக அமையாது வாராந்த தொகுப்பாகவே அமைந்திருக்கின்றது.

## ஒட்டு மொத்தக் கருத்து

இனி ஒட்டுமொத்தமாக இந்த இராணுவ ஆய்வாளர்கள் இரண்டாம் ஈழப்போர் காலகட்டத்தில் எழுதிய கருத்துக்களின் தொகுப்பை நோக்கின் இவர்கள் அனைவரதும் ஈழப்போராட்டம் குறித்த கண்ணோட்டம் ஒருதரப்பாக அதாவது கொழும்புக்கு கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. இவர்களின் கணிப்பில் விடுதலைப் புலிகளின் ஆயுத பலமும் ஆட்பலமும் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட்டதேயன்றி மனோபலம் என்ற விடயம் கருத்தில் எடுக்கப்படவில்லை என்பதை துணிந்து கூறமுடியும். சில சமயங்களில் இவர்களது ஆய்வுகள் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை ஆதரிப்பது போல் மேலோட்டமாகத் தென்பட்டாலும் எதிரியைப் பாராட்டி தான் சார்ந்த சிங்களப்படைகளை ஊக்குவிக்கும் செயற்பாடே முக்கிய இலக்காக இருந்தது.

இந்த வகையில் ஓர் உதாரணமாக கடந்த ஜூலை மாதம் 17-ம் திகதி சண்டே ரைம்ஸில் அதன் இராணுவ ஆய்வாளர் எழுதிய குடாநாட்டை கைப்பற்றுவது தொடர்பான **‘Baiting Jaffna’** எனும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையின் ஒரு பகுதியை இங்கே எடுத்துக் காட்டலாம்.

> ‘‘பொதுத்தேர்தல்களின் பின் குடாநாட்டின் மீது இராணுவபடையெடுப்பு நடத்துவதானால் மாரிகாலம் முடிவடைந்த பின்பே நடத்த முடியும். இதற்கு 1995 இன் முதற்பகுதிவரை காத்திருக்க வேண்டும். சிறிலங்கா படையில் சிலரிடையே உள்ள அடிப்படைக் கேள்வி இராணுவம் குடாநாட்டை தாக்குமா என்பதே.

(23ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழத்தின் முன்னணிப் பத்திரிகையாம்

★ ஈழநாதம் ★

தனது ஆறாம் ஆண்டில் காலடி வைக்கும் இந் நன்னாளில்

**'புத்தூக்கி' "REFRESHER"**

குளிர்பான தயாரிப்பாளர் தமது இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வரை)**

இல: 75/1, பலாலி வீதி,

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

காலை எழுந்தவுடன்

கதவைத் தட்டும் ஈழநாதமே!



மங்களத்தின் மறு பெயராக

நீ என்றும் வாழ வாழ்த்துகின்றோம்.

**சோதி புடவை அகம்**

இல: 14, சிறப்பு அங்காடி,

யாழ்ப்பாணம்.

சிறுகதை

# குறுணிக்கல்

## கே.ஆர்.டேவிட்

''நீயும் நானும் ஒரேபிரச்சனைக்குள்ளைதான் வாழ்றம்... எங்கை பாத்தாலும் அகதியள்... எங்கை பாத்தாலும் குண்டு விழுந்து சிதறின கட்டிடங்கள்...... எதைப்பாத்தாலும் குண்டு பட்ட காயங்கள்... வீதிக்கு வீதி... மதிலுக்கு மதில்... செத்துப் போன புள்ளையளின்ரை படங்கள்....

இதுக்குள்ளைதான் நாங்கள் வாழ்றம்... இதுகளுக்கூடாகத்தான் நாங்கள்வாழவேண்டியிருக்கு .. முடிஞ்சது முடிஞ்சது தான் முடிஞ்சதுகளை நினைச்சு ஆவலாதிப்படுகிறதில அர்த்தமில்லை...

குறுணிக்கல்லைக் கண்ணுக்குக் கிட்டப் புடிச்சுப் பாத்தால் அது உலகத்தை மறைக்கும்... பயங்கரமாயிருக்கும்... அதையே கண்ணுக்கு எட்டப் புடிச்சுப்பாத்தால் குறுணிக்கல் தான் எண்டது தெரியும்...

நான் குறுணிக்கல்லை, குறுணிக்கல்லாகவே பாக்கிறன்... நீகுறுணிக்கல்லைப் பாறாங்கல்லாய்ப் பாக்கிறாய்...''

இளவாலையை விட்டு வெளியேறி இரண்டு வருடங்களுக்கு மேலாகி விட்டது. இப்போது தான் இருவரும் முதல்முறையாகச் சந்திக்கின்றனர். எதிர்பாராத சந்திப்பு. இருவருக்குமே பெருமகிழ்ச்சி.

வீதியோரத்தில் நின்ற பூவரசு மரத்தோடு சைக்கிளைச் சாத்திவிட்டு திருநாவுக்கரசுவுக்குப் பக்கத்தில் வந்தமர்கிறார் இரத்தினம்.

ஒரே மண்ணில் பிறந்து - ஒன்றாகவே படித்து... மிகவும் நெருக்கமாகப் பழகியவர்கள். இராணுவம் இளவாலையை ஆக்கிரமித்த போது அங்கிருந்து வெளியேறி மானிப்பாய் வரை ஒன்றாக வந்தவர்கள்... அதன் பின் தங்குமிடந் தேடியலைந்ததால் பிரிந்து விட்டனர்.

திருநாவுக்கரசு தான்உடுத்திருந்த சாறத்தின் கீழ்ப்பகுதியால் முகத்திலும், குரல்வளையிலும் வடிந்து கொண்டிருந்த வியர்வையைத் தேய்த்துத் துடைக்கின்றார்.

''என்னடா இப்பிடி மாறிப் போனாய்...'' உதட்டில் விரலை வைத்துக் கேட்கின்றார் இரத்தினம்.

''புற அழகுதான்ரா மாறியிருக்கு.., அக அழகு இன்னும் அப்பிடியே தான்ரா இருக்கு...'' பதில் கூறிய திருநாவுக்கரசு வழமைபோல் சிரிக்கிறார்.

''உன்ரை சிரிப்பு... அப்பிடியே இருக்கு...'' இருவரும் சேர்ந்து சிரிக்கின்றனர்.

''உன்ரைபாடெல்லாம்எப்பிடி... இப்ப எங்கைஇருக்கிறாய்... தொழில் துறை...'' திருநாவுக்கரசு கேள்விகளை அடுக்குகின்றார்.

''எல்லாம் இளவாலையோடை சரி... இப்ப படுகிற பாடு... நாட்டிலையும் நிம்மதியில்லை... வீட்டிலையும் நிம்மதியில்லை... இப்பிடியும் ஒரு வாழ்க்கை...'' இரத்தினம் மிகவும் வேதனையுடன் கூறுகின்றார்.

''நீஇப்ப எங்கைஇருக்கிறாய்..''

''செம்மணி றோட்டிலை...''

''வீடு எப்பிடிவசதியானதே...''

''எங்களுக்குப் போதுமானது..'' திருநாவுக்கரசு கூறுகின்றார்.

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் செல்கின்ற பாதையில் கைதடிப் பாலத்தை அண்மித்துள்ள வளைவில் இடதுபக்கமாகவுள்ள சைக்கிள் கடைவாசலில் இருவரும் அமர்ந்திருக்கின்றனர். திருநாவுக்கரசின் சைக்கிள் பின்சில்லில் ஐந்து கம்பிகள் உடைந்து விட்டன. அதைப் பூட்டக் கொடுத்து விட்டு சைக்கிள் உழக்கிய காலலுப்புத் தீரக் கால்கள் இரண்டையும் நீட்டி அமர்ந்திருந்தார் திருநாவுக்கரசு. இரத்தினம் தற்செயலாக அந்தப் பக்கம் வந்தார்.

''லொறியிலை ஏத்திற பாரங்களைச் சைக்கிள்ளை ஏத்தினால் கம்பியள் உடையுந்தானே...'' சைக்கிளைப் பூட்டிக்கொண்டிருந்த சைக்கிள் கடைக்காரன் கூறுகிறான். கடைக்காரன் கூறியதைக்கேட்ட இரத்தினம் ஆச்சரியத்தோடு திருநாவுக்கரசைப் பார்க்கின்றார்.

''என்ன பாக்கிறாய்...''

''நீஇப்ப விறகு கட்டிறியே...''

''எப்பிடியோவாழவேணுமே..''

''அதுக்காக...''இரத்தினம் வாக்கியத்தை முடிக்காமல் சுற்றிப் பார்க்கின்றார். வேலிக் கரையோடு மிகப் பெரிய தொரு மரக்குற்றி கிடக்கின்றது. அந்த மரக்குற்றியைப் பார்த்த இரத்தினம் திரும்பிதிருநாவுக்கரசைப் பார்க்கின்றார். 'இந்தப் பெரிய குற்றியை எப்பிடியடா கொண்டு வந்தாய்' இந்த உணர்வோடுதான் இரத்தினம் பார்க்கின்றார்.

''முருகா... இந்தப்பாரத்தை... இவ்வளவு தூரம் .. சைக்கிளிலை...'' இரத்தினத்தின் உதடுகள்துடிக்க நுனி நாக்கு நடுங்குகின்றது.

''மனப்பலமிருந்தால் எதையும் செய்யலாம்...''

''சும்மா தத்துவம் கதைக்கிறாய்...'' இளவாலையில் திருநாவுக்கரசு ஓரளவு மதிப்புள்ளவர். பெரும் படிப்பு படிக்காவிட்டாலும் நிறையப் புத்தகங்கள் வாசித்தவர். முக்கியமான விடயங்களை எழுதி வைக்கின்றபழக்கமும் இவரிடமுண்டு. சரளமாகத் தத்துவங்கள் கூறுவார்.

பத்து வயதுச்சிறுவர்கள் இருவர் சேர்ந்து கட்டிப் பிடிக்கக்கூடிய பருமனிலானதொரு மஞ்சவுண்ணா மரத்தின் அடிக்குற்றி. வேர்கள்ஒழுங்காகத் தறிக்கப்பட்டு வாளினால் அரியப்பட்டிருந்தது.

வைரவ கோவிலடியிலுள்ள மாவீரர் நினைவாலயத்திற்கருகில், சைக்கிள் ஒரு கிடங்கில் விழுந்து... அவலப்பட்டு... நெஞ்செலும்புகள் நெரு நெருக்க..சைக்கிளைநிதானப் படுத்தி மீண்டபோது... பின் சில்லில் உள்ள கம்பிகள் சிக்குப்பட்டு... திருநாவுக்கரசு ஒருவாறுசைக்கிளை நிறுத்தினார். பக்கத்திலுள்ள சர்பத் கடைக்காரன் மிகவும் வாஞ்சையோடு திருநாவுக்கரசுக்கு உதவி செய்து... சைக்கிள்கடை இருக்கும் இடம் பற்றிய ஆலோசனையும் வழங்கினான்.

''என்னடா இரத்தினம் நெத்தியிலை சந்தனப்பொட்டைக் காணயில்லை...''

''அதெல்லாம் இளவாலையோடை போட்டிது...''

''ஏனடா...''

''எங்கடை வாழ்க்கைச் சிறப்பிலை... ஒரு சந்தனப்பொட்டு..''

இரத்தினம் இளவாலையில் வாழ்ந்த காலத்தில், நெற்றியில்



பொட்டு வைக்காமல் எங்குமே செல்ல மாட்டார். பரந்த நெற்றியில் இருபத்தைந்து சதக் குற்றியளவிலான ஒரு சந்தனப் பொட்டு வைத்து அதன் மேல் குண்டுமணியளவில் குங்குமம் வைத்திருப்பார். வட்டமான அவரது முகத்துக்குச் சந்தனப் பொட்டு மிகவும் அழகாகவே இருக்கும்.

''உப்பிடியெல்லாம்மனதைவிடக் குடாது இரத்தினம்...''

''இளவாலையிலை உந்தமாதிரிச் சீவிச்சுப்போட்டு... இஞ்சைவந்து... பரிசுகெட்ட சீவியம் சீவிக்க வேண்டிக்கிடக்கு...''

''பரிசு கிடைக்கிறதும்... பரிசு கெட்டுப்போறதும்... எங்களாலை தான்...''

''நீஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு வியாக்கியானம் சொல்லுவாய்...''

மேற்குவானத்தில் கதிரவன் இறங்கி, பனைமரங்களின் நிழல்கள் நீண்டுபோயிருக்கின்றன... நாலுமணியிருக்கும். இலேசான மழை இருள் ஜில்லிட்ட காற்று... திருநாவுக்கரசு தலையை நிமிர்த்தி வானத்தைப் பார்க்கின்றார்.

''இரவைக்கு இலேசான மழை இறங்கினாலும் இறங்கும்...''

இன்று அதிகாலையில் வீட்டிலிருந்து புறப்பட்ட திருநாவுக்கரசு பத்து மணியளவில் பளைக்கு வந்து, இந்தக் குற்றியை வாங்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். மிருசுவிலில் சிறிதுதங்கி, கொடிகாமத்தில் அரை இறாத்தல்பாணால் இரைப்பை வெறுமையை நீக்கிக்கொண்டு... அடுத்துக் கைதடிச் சந்தியில் இடது பக்கமாகவுள்ள வேப்பமரத்தின் கீழ் சிறிது தங்கலாமென எண்ணியிருந்தார்... எதிர்பாராத விதமாக இந்த இடத்தில் தங்கவேண்டி ஏற்பட்டுவிட்டது.

''அண்ணை... புதுக்கம்பியள் போட்டால் காசு கூடவரும்... என்னட்டைக் கிடந்த கம்பியளில் நல்ல கம்பியளாய் தெரிஞ்சு போட்டிருக்கிறன்... கொஞ்சநாளைக்குப் பாவிக்கலாம்... வசதி கிடைக்கயிக்கை மாத்தி விடுங்கோ'' சைக்கிள் கம்பிகளைப் பூட்டிமுடித்த சைக்கிள் கடைக்காரன் மனிதாபிமானத்துடன் கூறுகிறான்.

ஆறுகப்புக்கள் நாட்டப்பட்டு, சில தடிகளோடும், கிடுகுகளோடும்... புல்லுக் கொத்தப்பட்ட நிலத்தில் இயங்கும் சைக்கிள்கடை! திருநாவுக்கரசு நன்றியுணர்வோடு அவனைப்பார்க்கின்றார்.

''நானும் உங்களைப் போலை தான் வயாவிளானிலிருந்து இடம் பெயர்ந்துவந்தனான்... வயித்தைக் கழுவவேணுமே...''

''எங்கை பாத்தாலும் அகதியள்... என்னபாவம் செய்தமோ-..''

''அப்படிச் சொல்லாதை இரத்தினம்... நாங்கள் கற்பனை பண்ணாத எத்தனை சம்பவங்களைப் பாக்கிறம்... இதுகளெல்லாம் எங்கடை காலத்திலை நடந்தது என்று சொல்லிறதிலை பெருமையிருக்கு...''

''அப்பிடி என்னடா பெருமையிருக்கு...''

''எடேய்... இரத்தினம்...முந்தி சிங்கள ஆமியள்தேடித்தேடி எங்களை அழிச்சவங்கள்... இப்ப சிங்களஆமியளின்ரை முகாம்களைத் தேடித்தேடி எங்கடை பொடியள்... அழிக்கிறாங்கள்... இது பெருமையில்லயா''

''திருநாவுக்கரசு சைக்கிள்கடைக்காரனுக்குப் பத்து ரூபாவைக் கொடுத்துவிட்டு அவனது முகத்தைப் பார்க்கிறார்... சைக்கிள் கடைக்காரன் எதுவுமே பேசவில்லை.

மூவரும் சேர்ந்து திரும்பவும் மரக்குற்றியைச் சைக்கிளில் ஏற்றுகிறார்கள். வாளால் அரியப்பட்ட பகுதியை ''கரியலில்'' பக்குவமாகவைத்து, சமநிலை பார்த்து திருநாவுக்கரசு கட்டுகிறார்.

மரக்குற்றியைமார்போடு சரித்து வலது கையால் மரக்குற்றியை அணைத்துப்பிடித்து, இடதுகையால் சைக்கிள் 'ஹான்டிலை' பிடித்தபடி உருட்ட ஆரம்பிக்கிறார் திருநாவுக்கரசு. இந்த பாலத்தடியில் வழமையாகவே இவர் சைக்கிளை உருட்டித் தான் செல்வார். மேடுபள்ளங்களுக்கு விலத்தினால் வருகின்ற வாகனங்களில் முட்டவேண்டிவரும். வாகனங்களுக்கு விலத்தினால், கிடங்குகளில் இடறுப்படவேண்டிவரும்... பெருங் கஷ்டங்களைத் தவிர்ப்பதற்காகச்

(25ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா புத்தகசாலை (அன்) அச்சகம்

★ பாலர் வகுப்புகள் முதல் பட்டதாரி வகுப்பு வரையான பாடப் புத்தகங்கள்
★ பாடசாலை உபகரணங்கள் / அலுவலக காகிதாதிகள்
மற்றும்
★ றபர் சீல்கள் / அச்சக வேலைகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
★ ஒவ் - செட் பிறிண்டிங் செய்து தரப் படும். (Colour)

234 காங்கேசன்துறைசாலை
யாழ்ப்பாணம்.

---

ஆறாவது ஆண்டு மலரை
வாழ்த்துகின்றோம்.

## ஸ்ரீ காந்த் பொத்தகசாலை

165, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், நல்லூர்.

---

வியாபாரிகளே
உங்களுக்குத் தேவையான
★ அழகு சாதனப் பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள் பெற்றுக் கொள்ள

## ஜெயா அழகு மாடம்

177, 187, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

---

பாலர் நூல்களுக்கும்,
சகல பாடநூல்களுக்கும்,

## ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

யாழ்ப்பாணம்.

---

# ஈழநாதத்தின் அகம் பொலியும் ஆறாம் ஆண்டு

---

சகலவிதமான நவீனரக துணிகளையும்,
தைத்த ஆடைகளையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

## துணிப் பூங்கா
## CLOTH EMPORIUM

158, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

---

திருமணம் சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படுகின்றனவா? இல்லை!
பூமியில் மகாலட்சுமியின் தங்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது!

சிறந்த 22 கரட் தங்க நகைகளுக்கு
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

## மகாலட்சுமி நகைமாடம்

★ அழகிற்கு அழகு மிளிர மங்கையர் மனம் நாடுவது
**மகாலட்சுமி நகை மாடம்**
213, A, (கஸ்தூரியார் வீதி,)
சந்தோஷம் வீதி, யாழ்ப்பாணம்.

---

நாளுக்கோர் புதுமை நாடுவது உண்மை
இவற்றை அளிப்பதுதான்

## சிவராதா

புடைவை மாளிகை
16 B, மேஜர் சோதியா தெரு (பெரியகடை)
யாழ்ப்பாணம்.

---

## ஜெகன் படப்பிடிப்பாளர்

இல: 399 மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.

கிளை:-
இல. 234/4 A, அர்ச்சுனா வீதி,
(ஸ்ரான்லி றோட்)
யாழ்ப்பாணம்.

# நவீன தமிழ் இலக்கியப் பரப்பில் சர்ச்சைக்குரிய இரு பெரும் விமர்சன இயக்கங்கள்

நவீன தமிழ் இலக்கிய உலகில் விமர்சனக் கலை என்பது சர்ச்சைகளுக்குரிய ஒரு விஷயமாக மாறிவிட்டது. எழுதப்படும் விமர்சனங்களும் சரி, அவற்றை எழுதிய விமர்சகர்களும் சரி, பெரும் தாக்குதல்களுக்கு உட்படுகின்றன; உட்படுகின்றனர்.

தமிழ் இலக்கிய விமர்சனத் துறையில் ஈடுபட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டு 80களில் மறைந்து போன கைலாசபதியும், க. நா.சு வும் இன்று கூட பெரும்விமர்சனத் திற்குள்ளாகின்றனர்.

இவர்கள் படைப்பாளிகளாலும் வாசகர்களாலும் சக விமர்சகர்களாலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் திட்டித் தீர்க்கப்படுகின்றனர்.

'எப்படி விமர்சனம்முழுமை பெறுவதற்கு வாய்ப்பில்லையோ - அது போல விமர்சகர் பற்றிய விமர்சனங்களும் முழுமை பெறுவதற்கு வாய்ப்பில்லை' என 'தமிழ் இலக்கிய விமர்சகர்கள்' என்ற நூலில் பாலா சொல்வது இன்னமும் முழுமையாக எமது தமிழ் விமர்சகர்கள் விமர்சிக்கப்படவில்லை என்பதையே குறிக்கின்றது.

தமிழகத்தைச் சேர்ந்த க. நா. சுப்ரமணியமும், ஈழத்தைச் சேர்ந்த க. கைலாசபதியும் விமர்சன உலகில் தமக்கென புதிய சுவடுகள் பதித்தவர்கள். தமக்கென இரு வேறுபட்ட சிஷ்ய பரம்பரையை உருவாக்கியவர்கள்.

இவர்கள் இருவர் மத்தியிலும் - ஒரு பனியுத்தம் நிகழ்ந்தது. தற்போது இந்த இரு விமர்சன சிகரங்களின் சிஷ்யர்கள் இந்தப் பனியுத்தத்தை பெரும் தாக்குதல்களாக வழி நடத்திச் செல்கிறார்கள்.

க.நா.சுவும் கைலாசபதியும் தமக்கென இரு சார்புக் குழுக்களை உருவாக்கி அந்தந்த குழுக்களுக்குசார்பாக இயங்கி படைப்புகளைச் சாடியும், உயர்த்தியும், ஆதரித்தும் - நிராகரித்தும் வந்தனர்.

'ஒரு படைப்பை பிறர் விமர்சிக்க முன்வரும் போதுதான் எத்தனை பார்வைகள் வந்துவிடுகின்றன. உளவியல் பார்வை... சுயானுபவமாற்றுரைக்கும் பார்வை...... மார்க்ஸிஸ எதிர்ப்பு நெறிப் பார்வை ........ மார்க்ஸிஸ நெறிப்பார்வை . .. , அலசல் பார்வை . . . . நல்லதை மட்டும் கண்டு சொல்லும் பார்வை . , . குறைமட்டும் உரைக்கும் பார்வை , . . . பிற இலக்கிய ஒப்பீட்டுப் பார்வை . . . விமர்சக சுயஸ்தாபிதப்பார்வை . . . நண்பர்கள்ஆதரவு - நண்பரற்றோர் நிராகரிப்புப் பார்வை . . . . என எவ்வளவு நோக்கங்கள் வந்துவிடுகின்றன, என பாலா படைப்பின் மீதான விமர்சகர்களின் ஆய்வை கேலி செய்கின்றார்.

ஒரு படைப்பின் வெற்றிக்குப் பின்னால் விமர்சகர்களின் ஆதரவு நிறைய இருந்துள்ளது. இதே மாதிரி தரமான படைப்பு என பொதுவாக கணிக்கப்பட்ட படைப்புகள் விமர்சகர்களால் தோல்வி அடைந்த சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

விமர்சனங்களை ஜீரணித்து கொள்கின்ற படைப்பாளிகள் அன்று தொட்டு இன்று வரை மிகக்குறைந்த தொகையில் உள்ளனர்.

'படைப்பு இலக்கியத்தைப் போலவே இலக்கிய விமர்சனமும் படித்து ரசிக்கக் கூடிய ஒரு கலையாக விளங்க முடியும். ஆனால் - தமிழில் அது அவ்வாறு வளரவில்லை,' என்ற வல்லிக் கண்ணனின் கூற்று தமிழ் விமர்சகர்கள் மீதான விமர்சனமாகவே அமைகின்றது.

> ஒரு நல்ல படைப்பாளி எவ்வளவு தூரம் இலக்கியத்தைச் செழுமைப் படுத்த முடியுமோ - அவ்வளவு தூரம் விமர்சகனும் இலக்கியத்தை உச்ச தரத்திற்கு கொண்டு செல்ல முடியும் என கருதப்பட்டு வருகின்ற சூழலில் - விமர்சகர்கள் படைப்பாளிகளுடனும் பத்திரிகைகளுடனும் வாசகருடனும் சக விமர்சகருடனும் மோதிக் கொள்ளும் நிலையே உள்ளது. இது விமர்சகர்களின் நோக்கத்தை சந்தேகிக்க வைக்கின்றது.

கைலாசபதியும், க. நா.சு வும் தனித்தனி உதிரி விமர்சகர்களல்லர்; இவர்கள் இருவரும் இரு பெரும் விமர்சன இயக்கங்கள். இந்த இரு ஆலமரங்களும் தமது வழியில் பல வழித்தோன்றல்கள் விழுதிறக்குவதை பார்த்துவிட்டே மறைந்தன.

கலை கலைக்காகவே என்கிற உருவ வாதியாக க.நா.சுவும் கலை வாழ்க்கைக்காக என்கிற மார்க்ஸிஸ பார்வை கொண்டவராக கைலாசபதியும் கருதப்படுகின்றனர்.

'நமது விமர்சகர்களில் எத்தனை பேருக்கு உழைக்கும் மக்கள்பால் உண்மையான அன்பு இருக்கிறது? அவர்களது கலை உணர்வு, வாழ்க்கைப் போராட்டங்கள் பற்றிய ஆழ்ந்த ஞானம் எத்தனை பேருக்கு இருக்கிறது? இத்தகைய அம்சங்கள் ஒன்றுமே இல்லாத புத்தகப் பூச்சிகள் தானே இன்று நம்மிடையே 'விமர்சனப் புலிகளாக' 'கர்ஜனை' செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வெறும் 'காகிதப் புலிகள்' என்பதை காலம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது.'

- இது தி. க. சிவசங்கரனின் கூற்று. இவர் மார்க்ஸிஸ பார்வை கொண்ட விமர்சகர். கலை கலைக்காகவே என்கிற உருவவாதிகளை நோக்கியே இவரது கருத்துக் கணை எய்யப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

வழிநடத்தும் தலைமை விமர்சகர்கள் மௌனம் கடைப்பிடிக்கும் நேரத்தில் கூட சிஷ்யர்கள் மோதி குத்திக் கிழிபட்டதுண்டு. சர்ச்சைகள் குழப்பங்களாகவும், தெருச் சண்டைகளாகவும் முற்றிக் கொண்டதுண்டு.

'தி. க. சி, வானமாமலை போன்றவர்கள் இலக்கியப் படைப்பில் யதார்த்தவியல் வேண்டும் என்று போராடிக் கொண்டிருப்பார்கள். அவர்களின் யதார்த்தப் பார்வைக்கோ அப்பால்-இப்பால் எதுவும் நடக்காது. நடந்தாலும் நிஜமாக இருக்காது. ஒரு தொழிற்சங்கத் தலைவன் இலஞ்சம் வாங்கியதாக எழுதப்பட்ட ஒரு கதையை அவர்களிடம் காட்டி விட முடியாது. கோபம் பொத்துக் கொண்டு வரும் அவர்களுக்கு' என தமிழ்நாடன் முற்போக்கு முகாமைச் சேர்ந்தவர்களை மொத்தமாகத் தாக்குகின்றார்.

தமிழ் இலக்கிய உலகில் பல போக்குகள் இருப்பினும் இரு போக்குகள் அடிக்கடி முட்டி மோதிக் கொண்டேயுள்ளன.

50 களில் எழுத ஆரம்பித்த கைலாசபதி 57 ஆம் ஆண்டு தினகரன் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டதை அடுத்து தமிழ்த் திறனாய்வுலகில் பெரும் சர்ச்சைகளுக்குரியவராக விளங்கினார்.

**வவுனியா திலீபன்**

மார்க்ஸிஸ சிந்தனை உடைய சிற்றிலக்கிய ஏடுகளில் நிறைய எழுதினார். தமிழகப் பத்திரிகைகளான தாமரை, சாந்தி, சரஸ்வதி, செம்மலர், தீக்கதிர், ஜனசக்தி, ஆராய்ச்சி மற்றும் இடதுசாரி ஏடுகள் இவரின் களங்களாயின.

க. நா. சு. தமிழகம் -டில்லி - சென்னை என மூன்று பகுதிகளிலும் மூன்று காலகட்டங்களில் வாழ்ந்தவர். மணிக்கொடியிலும் அதன் பின்னர் சூறாவளி, சந்திரோதயம், தேனீ ஆகிய சஞ்சிகைகளில் ஆரம்பத்தில் எழுதியவர். 50 களில் சரஸ்வதியிலும், 60 களில் 'எழுத்து', 'இலக்கிய வட்டம்' ஆகிய ஏடுகளிலும் எழுதியவர்.

ஐரோப்பிய மொழிகளில் உள்ள பல படைப்புக்களை மொழிபெயர்த்து தமிழுக்குத் தந்த மாதிரி தமிழில் உள்ள படைப்புக்கள் பலவற்றை ஆங்கிலத்தில் இவர் மொழி பெயர்த்துள்ளார்.

க. நா. சு. தன் வாழ்வின் பெரும் பகுதியை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அர்ப்பணித்தவர் என்று கருதப்படுகின்றார்.

இவைதான் - இவர்கள் பற்றிய பொதுவான கருத்து. ஆனால் - விமர்சன ரீதியாக இருவரும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். இன்னும் கூட தாக்குதல்கள் சரமாரியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மு. தளையசிங்கம், எஸ். பொன்னுத்துரை போன்றோரும் தமிழகத்தில் உள்ள க. நா. சு. கோஷ்டியைச் சேர்ந்தவரான வெங்கட்சாமிநாதன் போன்றோரும், கைலாசபதியையும் அவரது சார்பில் நின்று இயங்கியவர்களையும் விமர்சித்தனர். வெங்கட்சாமிநாதன் இறுதிக் காலத்தில் க. நா. சு விடம் முரண்பட்டுக் கொண்டார்.

'சூழ்நிலை காரணமாகவும் சமுதாயத் தத்துவச் சார்பினாலும் கைலாசபதி அவர்கள் சில சந்தர்ப்பங்களில் ஒரு மிகை வாதக்காரராக செயல்பட்டிருக்க வேண்டும். உதாரணமாக, அவர் - க. நா. சு. என்றோ எழுதிய பிழைகள் மலிந்த கட்டுரைகளைத் திரட்டி நூல் வடிவமாக அனுமதித்தது கைலாசபதியின் மொத்தத் தோற்றத்திற்குப் பெருமை சேர்க்காது' என்று அசோகமித்திரன் மல்லிகையில் கைலாசபதி மீதான தனது ஆழப் பார்வையை வெளிப்படுத்துகின்றார்.

'நாவல் என்னும் பயன் தரும் துறையில் உழைக்காது, புதுக்கவிதை என்ற பெயரில் வசன கவிதைக்காரர் இன்று குட்டையைக் குழப்புவது வருந்தக் கூடிய காட்சியாகும்' என்ற கைலாசபதியின் கருத்துக்கு -

'கலை பண்பாட்டுத் துறைகள் கிழித்த கோட்டில் செல்லக் கூடியன அல்ல. இலக்கிய வீச்சின் சக்தி நாவல் என்கிற ஒன்றோடு முடிந்து விடுவதல்ல; அதற்கு நிறைய சரீரங்கள் உண்டு' என தி. சு. நடராசன் கைலாசபதியின் கருத்திற்காக விசனப்படுகின்றார்.

ஒரு காலத்தில் முற்போக்கு முகாமில் இணைந்திருந்து இயங்கிவிட்டு - கருத்து முரண்பாடு காரணமாக வெளியேறிய எஸ். பொ. தற்போது அவுஸ்திரேலியாவில் இருந்தாலும் முற்போக்கு வாதிகள் மீது தாக்குவதை நிறுத்திக் கொள்ளவில்லை.

'முற்போக்கு இலக்கிய கோஷத்தை ஒருகட்டத்தில் தலைமையேற்று நடத்த வந்தவர்கள் தவறான பாதையில் இட்டுச் சென்றார்கள். அது எனக்குத் தெரிந்தது, அதனால் முரண்பட்டேன். அந்த முரண்பாட்டை முன் வைத்தபோது-வைதீக மார்க்ஸிஸம் மட்டும் நல்ல இலக்கியத்தை படைக்க மாட்டாது என்று கூறினேன். இரண்டாவது இந்த வைதீக மார்க்ஸிஸ விமர்சனங்கள், அந்த இயக்கத்தின் தலைவர்கள் என்று பிரகடனப்படுத்திக் கொண்ட கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்கள் படைப்பிலக்கிய ஆற்றல் இல்லாதவர்கள். ஓரளவில் சொன்னால் படைப்பிலக்கியத்தில் முயன்று தோற்றவர்கள்' என எஸ். பொ. தெரிவித்துள்ள கருத்து ஈழத்து - தமிழகத்து முற்போக்கு படைப்பாளிகளை ஆத்திரம் எழச் செய்திருக்கிறது.

இன்னும் தொடர்ந்து முற்போக்கு இலக்கியம் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் எழுந்தவாறேஉள்ளன.

'முற்போக்கு இலக்கியம் உள்ளடக்கத்திற்கு அழுத்தம் கொடுத்த அளவிற்கு வடிவங்களிலோ அல்லது அதனுடைய வெளிப்பாடுகளிலேயோ அதிக கவனம்செலுத்தாது போனபடியால் ஒரு வகை வறட்டுத் தனமான போக்கு பிற்காலத்தில் காணப்பட ஆரம்பித்தது' என்கிறார் மௌனகுரு.

முற்போக்கு இலக்கிய விமர்சகரால் இருட்டடிப்பு செய்யப்பட்டவர்களுக்காக இரக்கப்பட்டு தமது கருத்தினை வெளியிடுபவர்களும் - இச்செயலினால் முற்போக்கு வாதிகள் மீது ஆத்திரப்படுபவர்களும் உண்டு.

'கைலாசபதியை குழுமனப்பான்மை சில சமயங்களில் பாதித்திருக்கிறது. அத்தகைய மனப்பாங்கே ஈழத்தின் சிறந்த கவிஞர்களில் ஒருவரான 'மஹாகவியை' அவர் கண்டு கொள்ளாமல் விட்டதற்கு காரணம்' என்கிறார் துரை மனோகரன்.

இதே தன்மையைச் சொல்லி- 'கனக. செந்திநாதன் விமர்சனம் செய்யவில்லை. ரசனையை வளர்த்தார். இது தமிழ் வளர்ச்சிக்கு கெடுதலானது. மகா பாமரத்தனமானது' என்ற கைலாசபதியின் கூற்றை சுட்டிக் காட்டி எஸ். பொ. முறையிடுகின்றார்.

கைலாசபதியைப் பற்றியும் முற்போக்கு முகாமைச் சேர்ந்தவர்களைப் பற்றியும் பல குற்றச் சாட்டுக்கள் இன்றும் வெளிக்கிளம்பிய வண்ணமே உள்ளன.

- இலக்கிய உலகிலே தலைவர்கள் - தொண்டர்கள் என்கிற இரு வேறு வர்க்கங்களை உண்டாக்கியவர்கள் கைலாசபதியும் - சிவத்தம்பியும் ஆவர்.
- தினகரன் ஆசிரியராக இருந்த காலத்தில் இலக்கிய வளர்ச்சியை விட பத்திரிகையின் விற்பனையை அதிகப்படுத்துவதில் ஆவலாக இருந்தவர் கைலாசபதி.
- முற்போக்கு இலக்கிய வாதிகள் சிங்களம் மட்டுமே தேசிய மொழி என வாதிட்டு வந்தவர்கள்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

BM ESTD: 1960 JMJ

ஈழநாதம் என்றும் இன்றும் தனது சேவையை திறம்படச் செய்யவேண்டும் என எமது இனிய வாழ்த்துகள்.

யாழ் நகரில் வானொலி, தொலைக் காட்சி, ஒலிபெருக்கி அதன் உதிரிப்பாகங்கள் விற்பதிலும் சீர்படுத்துவதிலும் 35 வருட அநுபவமும் நன்மதிப்பும் பெற்றவர்கள்.

**வானொலி மனுவல்**
**(றேடியோ மனுவல்)**
**121, அர்ச்சுனா சாலை**
**(ஸ்ரான்லி வீதி)**
**யாழ்ப்பாணம்.**

யாழ் நகரில் அவசர தேவைகட்கு
றபர் சீல்கள் - கலர், கறுப்பு - வெள்ளை
என்லாஜ்மென் படங்களுக்கு

**தரன்**
**(புகைப்பட கலைக்கூடம்)**
**(தரன் ஸ்ருடியோ)**
**189, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

இதயம் இனிக்கும் 6ஆம் ஆண்டில் ஈழநாதம்

**டில்கா வானொலி**
**மணிக்கூட்டுத் தொழிலகம்**

உங்கள் சகலவிதமான றேடியோக்கள், ரி. வி. டெக் மற்றும் சகல இன மணிக்கூடுகள் அனைத்தையும் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள

**DILKA WATCH**
**& RADIO WORKS**
284, STANLEY ROAD
[ADJOINING VANAVIL]
JAFFNA.

BRANCH: KANDY ROAD,
CHAVAKACHCHERI.

**ஸ்பெஷல்**
**எஞ்சினியேர்ஸ்**
**இல. 36, அருச்சுனா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## நூறாண்டு வாழி

பொங்கிடும் உணர்வி னோடு
புத்தொளி வீசி நின்றுன்
மங்கிடா தெழுத்தி னாலே
மக்களை மயங்க வைத்துத்
தங்கமாய்த் தொண்டு செய்து
தரணியில் ஈர்மூன் றாண்டாய்
எங்களுக் குழைத்த ஈழ
நாதம்நூ றாண்டு வாழி!



**வாழ்த்துபவர்கள்:**

அச்சுக் கலையுலகில் வெள்ளி
விழாக்கண்டு வீறு நடைபோடும்

**சாந்தி**
**அச்சகம்**
நாச்சிமார் கோவிலடி
**575, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# உழுத்த மாளிகையின் இடுக்குகள் எங்கும் போராட்டம் விதைத்த ஆலம் விதைகள்

தமிழ் மக்களின் தேசிய இனச் சிக்கல் தொடர்பான சந்திரிக்கா அம்மையாரது செயற்பாடுகளையும் அறிக்கைகளையும் பார்க்குமிடத்து இல்லாத ஊருக்கு போகக் கிளம்பிய பயணமாகிவிடப் போகின்றதோ அவரது போக்கு என சிந்திக்க தோன்றுகின்றது. நேர்வழி இருக்கும் போது அதனை விடுத்து பாதைகளை மாற்றி வைத்து பயணம் செய்ய முயலும் அவர் தனது பயணத்திற்கு புலிகள் தடையாகவுள்ளனர் என சொல்லவும் முனைகின்றார். தனது பெயர் சந்திரிக்கா விஜயகுமாரதுங்க அல்ல. சந்திரிக்கா பண்டாரநாயக்க விஜயகுமாரதுங்க என்று வலியுறுத்தும் அவர் பதவிக்கு வருவதற்காக அவ்வப்போது அணிந்துகொண்ட வாக்குறுதிகள் எனும் முகமூடிகளை இப்போது எவ்வித தயக்கமுமின்றி கழற்றி வருகின்றார். இத்தகைய அவரது போக்கு கண்டு அவரைத் தெரிவு செய்த சிங்கள மக்கள் திடுக்கிடும் போது தமிழீழ மக்களோ இனச் சிக்கல் தொடர்பான அவருடைய உண்மை முகம் எதுவென ஐயுறுவதில் தவறேது? சிங்கள மக்களின் நீண்டகால அரசியல் போக்கினை ஆராய்ந்து வருபவர்கள் சிங்கள மக்கள் தமக்கு நன்மை பயக்காத ஆட்சியினை தோற்கடிப்பதில் காட்டும் அக்கறையை புதிதாக பதவிக்கு வருவோர் குறித்து காண்பிப்பதில்லை என்கின்றனர். ஆனால் தமது 48 வருட சுதந்திர தினத்தை சிங்களவர் பெயருக்காயினும் நினைவு கொள்ளும் போது தமிழ் மக்கள் தாம் நம்பிக் கெட்ட வரலாற்றையல்லவா ஞாபகப் படுத்திக் கொள்கின்றார்கள். தனது முன்னோர் செய்த தவற்றினை செய்யேன் எனக் கூறி நேசக்கரம் நீட்ட முற்பட்டவர் இப்போது பாதியில் நீட்டிய கையையே பற்றிப் பிடியுங்கள் அது போதும் எனக் கூறினால் தமிழ் மக்கள் தயக்கம் கொள்வதில் தவறேது? ஏனென்றால் ''நிலையின் இழிந்தக் கடையாக'' மாறினால் ''தலையின் இழிந்த மயிரனையர்'' என தாம் ஆகி விடுவோம் என்பது அவர்கட்கு இப்போது பட்டறிவல்லவா?

## அம்மையார் விடுக்கும் எச்சரிக்கை நிலை

இதய பூர்வமான நேர்மையுடன் அரசியல் இலாப நட்டங்கட்கு அப்பால் அணுக வேண்டிய தேசிய இனச் சிக்கலை இப்போது அவர் அணுகும் முறை அவரது முன்னைய அரசியல் போக்கினை நோக்குவோர்க்கு ஒன்றும் ஆச்சரியத்தைத் தராது. பல நூற்றாண்டு காலமாக அடிமைச் சகதியில் புதைந்த இனம் விழிப்படைந்து அதன் தேசிய ஆன்மா இதுவரை வடித்த குருதியை துடைத்தெறிய கிளர்ந்தெழும் போது மரபுவழி அரசியல் வித்தைகளை அழுத்தம் கொடுக்கும் வார்த்தைகளை, முரண்பாடான செயற்பாடுகளை கையாண்டு அதனைத் தீர்க்க முடியும் என நம்புவது தனது அரசியல் நலன்கட்கு எவ்வித பாதிப்பையும் அவர் ஏற்படுத்த விரும்பவில்லையென்பதை புலப்படுத்துகின்றது. இத்தகைய அவரது போக்கு அவர் சனாதிபதியாக பதவியேற்ற அன்றேபுலனானது. ''பெரும்பான்மை மக்கட்கு எவ்வித பாதிப்பையும் கொண்டு வராத தீர்வு'' என்றும் ''கௌரவத்தோடு கூடிய சமாதானம்'' என்கிற சொற்றொடர்களை அன்றிலிருந்தே அவர் பயன்படுத்தத் தொடங்கினார். இதன் பின் அவரது பாதுகாப்பு பிரதி அமைச்சரோ புலிகள் வழிக்குவராவிட்டால் இராணுவத் தீர்வினையே நாடவேண்டி நேரிடும் என பொன்மொழிகளை இன்றுவரை உதிர்த்த வண்ணமேயிருக்கின்றார். இப்போது இறுதியாக பிரெஞ்சு மொழியும்படித்தசந்திரிக்கா அம்மையார் பிரான்சிய செய்தி இதழான புகழ்மிக்க ''லெமொண்ட்'' டிற்கு செவ்வி கொடுக்கும் போது கூறியது இது தான். ''கரந்துறை போராளிகள் (கெரில்லாக்கள்) இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை விரும்பாத நிலையில் நான் போருக்கு செல்வேன் எனக் கூறவரவில்லை. ஆனால் செவ்வனே நன்கு ஆயுதமயமாக்கப்பட்ட இராணுவத்தை கொண்டுள்ள உறுதியான, நேர்மையானதொரு அரசாங்கம் போரை நிச்சயமாக வெல்லும் என்பதை மட்டும் என்னால் கூற முடியும்.'' இவ்வார்த்தைகள் விடுதலைப் புலிகட்கு அம்மையார் விடுத்த முதல் எச்சரிக்கை என்றே சிங்கள, ஆங்கில செய்தியேடுகள் தலைப்பிட்டு பரபரப்பாக பிரசுரித்தன. முன்னர் சந்திரிக்கா அவர்கள் தனது கணவர் விஜயகுமாரதுங்கவோடு தமிழ்க் குழுக்களோடு பேச்சுக்கள் நடத்த தமிழ் நாடு சென்றிருந்த போது 'விஜய்' தமிழ் மக்களின் இடர்கள் குறித்து பேசும் போது அவர் ஒரு குறிப்பிட்ட எல்லையை தாண்டாது பேசுவதை மட்டுப்படுத்துவதையே தனது வேலையாக அம்மையார் மேற்கொண்டிருந்தார் என்பதும் பேச்சுக்கள் முடியும் போது சிறிலங்காவில் தமக்கு அரசியல் நன்மைகள் ஏற்படும் வகையிலான அறிக்கைகள் விடுமாறு அப்போதே வற்புறுத்தியவர் என்பதையும் இங்கே நினைவு கொள்ள முடியும். தமிழ் தலைவர்களை ஏமாற்றும் படலத்தை முதல் தொடங்கி வைத்த சொலமன் பண்டாரநாயக்காவை தந்தையாக தமிழ் பகுதிகளில் முதல் இராணுவ அடக்கு முறைக்கு வழிகோலிய சிறிமாவோ பண்டாரநாயக்காவை தாயாகக் கொண்ட அவரிடம் வேறென்ன நாம் எதிர்பார்க்க முடியும் என கருதுவதில் தவறென்ன இருக்க முடியும்?

## பொறுமைக்கு பதிலாக பொங்கும் நிலை

இதுவரையும் மூன்று கட்டங்களாக நடந்தேறிய அமைதிப்பேச்சுக்களை பார்க்குமிடத்து எவருக்கும் ஒரு உண்மை புலப்படும். முதலாவது பேச்சுவார்த்தையின் முடிவில் மாத்திரமே இருதரப்பினரும் ஒன்றாக இருந்து வெளியிட்ட கூட்டறிக்கை என்பது வெளியாகியது. இதன் பின்னான பேச்சுக்களின் முடிவில் கூட்டறிக்கை என்பதற்கு பதிலாக கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இருதரப்பினரும் தனியான அறிக்கைகளை தத்தமது நிலைப்பாட்டிற்கேற்பவே வெளியிட்டனர். இவ் வேறுபட்ட நிலை மூன்றாம் கட்டப் பேச்சுக்களின் பின் வெகு தெளிவாகவே பிரதிபலித்தது. விடுதலைப் புலிகள் ஒரு தொடர்ச்சியான நிலைப்பாட்டை தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தும் அதே வேளை சிறிலங்கா தரப்போ காலத்திற்கு காலம் வளைவதும் நெளிவதுமாக தடம்புரள்கின்றனர். பேச்சுவார்த்தைகளில் ஒரு முகமும் கொழும்பில் இன்னொரு முகமுமாக காட்டி நிற்கின்றனர். மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின் பல்வேறு குறைகள் தொடர்பான புலிகளின் எழுத்திலிடப்பட்ட விளக்கங்கட்கு பதிலளிப்பதை தவிர்த்து தமது மேலாதிக்க நிலைப்பாட்டை வலியுறுத்துமாப் போல் பேச்சுவார்த்தையில் பேசி முடிவிற்கு வர முன்னர் தமது முடிவினை அரசாங்க அறிவித்தலாக வெளியிடுகின்றனர். ஒரு தரப்பு முடிவுகளை இரு தரப்பு முடிவாக்கும் வித்தையிலும் ஈடுபடுகின்றனர். இதற்கு காரணம் வேறொன்றுமில்லை. சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சி வழமை போல் இன்னமும் பௌத்த, சிங்கள பேரினவாத கருத்தியலின் அடிப்படையிலமைந்த தளத்தின் மீதே நிற்கின்றது. அரசாங்கத்தின் முடிவுகள் பேரினவாத அரச இயந்திரத்தின் இயங்கு விதிகட்குட்பட்டே மாற்றமுற்று வெளிவருகின்றன.

வே.பாலகுமாரன்

எனவே தான் படிப்படியாக, நிதானமாக, பக்குவமாக தமிழ் மக்களிடையே உறுதியான நம்பிக்கையை கட்டி எழுப்பியநகரவேண்டியபேச்சு வார்த்தை ஒவ்வொரு கட்ட முடிவிலும் தேக்க நிலையை அடைகின்றது. ஆனால் இத் தேக்க நிலை பற்றி சற்றும் கவலைப்படாமல் காலம் தாழ்த்தினால் புலிகள் பலம் பெற்றுவிடுவர் என அலட்டிய வண்ணம் இப்போது அவசரம் அவசரமாக தீர்வுத் திட்டம் ஒன்றினை தயாரிக்கும் பணி முற்றுப்பெற்று விட்டதாக கிரமமான அறிவிப்புக்களை விடுத்து சிங்கள பேரினவாத சக்திகட்கு சாமரம் வீசுகின்றார் அம்மையார். சருவதேச அரசியல் அறிந்தவர் எதற்கெடுத்தாலும் ANC க்கும் தென்னாபிரிக்க நிறவெறி அரசுக்கும், அரபாத்திற்கும்றபினுக்கும்இடையிலான பேச்சுக்களை மேற்கோள் காட்டுபவர் அப் பேச்சுக்கள் எவ்விதம் - எவ்வளவு காலம் நடைபெற்றன என்பதை அறியாரா? நான்காண்டுக்குமேலாக நடைபெற்றது தென்னாபிரிக்க பேச்சுக்கள். ஒருவருடத்திற்கு மேலாக நடைபெற்றும் பெரும் இழுபறியில் இப்போது இன்னொரு வருடமாகு பேச்சுக்கள் தொடரும் நிலை பாலத்தீனத்தில். போர் நிறுத்தம் அறிவித்து 7 மாதங்கள் கழிந்தும் இன்னமும் முறையானபேச்சுக்கள் IRAக்கும் பிரித்தானியாவுக்கும் தொடங்கவில்லை. பொறுமையாக அணுக வேண்டிய சிக்கலை பொங்கிய நிலையில் அவர் அணுகுவதற்கு மிக முக்கிய காரணியுண்டு.

## காற்றுள்ள போது தூற்றும் நிலை

மாற்றமுறும் தற்போதைய புதிய உலக ஒழுங்கு எனும் சூழலிலே - பொருண்மிய நலன்கள் பிராந்திய மேலாதிக்கங்களின்நலன்களைஇரண்டாமிடத்திற்கு தள்ளிவிட்ட நிலையிலே- தமிழ் மக்களோடு தாம் நடத்தும் போருக்கு தொடர்ந்து ஆதரவையோ, போருக்கு செலவிடும் நிதிக்கான மாற்றீட்டையோ எவரும் தொடர்ந்து அளிக்கப் போவதில்லை யென்பது சந்திரிக்கா அம்மையாருக்கும் அவரது சருவதேச அறிவுமிக்க ஆலோசகர்கட்கும் ஒன்றும் தெரியாத விடயமல்ல. குடியரசுக் கட்சியினர் செல்வாக்கு மேலோங்கும் அமெரிக்க நிருவாகமோ தமது அமெரிக்க நலன்கட்குபாதிப்பு ஏற்படாத இடங்களில் எவ்வகையிலும் (நிதியுதவி உட்பட) தலையிடுவதையோ பூரணமாக விரும்பாத நிலைக்கு தள்ளப்படுகின்றது. தாம்ஊட்டிவளர்த்த அமைப்புக்களையே இடை நடுவில் கைவிட்டு அவ்வவ் நாட்டு அரசுகளில் கணிசமான பங்கேற்கும் வகையிலான செயற்பாடுகளையே ஐ.நாவிற்கு ஊடாக மேற்குலகம் மேற்கொள்வதை நிக்கரகுவா தொட்டு அங்கோலா, மொசாம்பிக் வரையிலான வரலாறுகள் சுட்டுகின்றன. இப்போது மேற்குலகம் விரும்புவது தமதுஉலகவங்கி, சருவதேச நாணய நிதியம் போன்ற நிதியுதவி அமைப்புகட்கு ஊடாக வழங்கப்படும் கடன்களை சம்பந்தப்பட்ட நாடுகள் தமது பொருண்மிய விரிவாக்கத்திற்கு பயன்படுத்துவதையே அப்போது தான் அவர்கள் நலன்களும் மேலும் உறுதிப்படும். எனவே தான் கடந்த 2 வருடமாக சிறிலங்கா தொடர்பானஉலக வங்கியின்வேறுபட்டபோக்கு, அதன்விளைவுகளைஉணர்ந்த அம்மையார் தனது சருவதேச பொருண்மிய ஆலோசகரும் நண்பருமான லால் ஜெயவர்த்தனாவின் ஆலோசனைப்படி ''அமைதி''எனும் துறையிலே தனது முதலீட்டை செய்ய உத்தேசித்தார். இவர்கள் திட்டப்படி பேச்சுக்கள் தொடர்ந்து போர் நிறுத்தப்பட்டால் அமைதிக்கான முதலீட்டின் பங்கிலாபம் பாரிய அளவில் கிடைப்பதோடு உலக வங்கியும் மிகத்தாராளமாக மீதப்படுத்தப்படும் போருக்கு செலவிடும் பணத்தைவிட, இரட்டிப்பான உதவியை செய்யத் தயாராக உள்ளது. எனவே இப்போதுஇறுதியாக கிடைக்கும் கொழும்புச் செய்தி கூறுவது இதுதான் - இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் தயாராகிவிட்டது- வருகின்ற மார்ச் மாதத் தொடக்கத்திலிருந்து வடக்கில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பம்- இவற்றோடு சனாதிபதி சந்திரிக்கா அம்மையார் ஏப்ரல் மாத முடிவில் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் உலக வங்கி உட்பட்ட- சருவதேச நாடுகள் பரிசில் (Aid Club) கூடி சிறிலங்கா வழங்கப்படும் உதவி பற்றி முடிவெடுக்கும் போது தானே நேரடியாக சென்று உரையாற்றி வெற்றியுடன் திரும்ப அம்மையார் முடிவெடுத்து விட்டதாக தெரிவிக்கின்றது. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் வித்தையிது. அமெரிக்கா சென்று இப்போது திரும்பிய கதிர்காமர் அவர்கள் ''அமெரிக்காவிடமிருந்து ஆசீர்வாதம்'' பெற்று வந்ததாக கூறப்படுவதன் பொருள் இதுவே.

## மோதல் தவிர்ப்பின் முறுகல் நிலை


எனவே இப்படியான சாதகமான சருவதேசச் சூழ்நிலையிலிருக்கும் போது மக்களிடம் வெள்ளைத் தாளில் பெற்ற கையொப்பம் போன்ற மாபெரும் ஆணை இருக்கும் போது அம்மையார் ''அடைமொழிகளை 'குறியீட்டுமொழி களை''' பயன் படுத்துவதன் பொருள் என்ன? இங்கே தான் ஐயம் தோன்றுகின்றது. சிங்களவரின் திட்டமிட்ட குடியேற்றங்கள் எனும் மண்பறிப்பால்- மண்மீட்பாக மனித குலம் காணாத ஈகங்களால் தனித்துவமான விடுதலைப் போராட்டமாக உருவெடுத்த நிலையில் தமிழரின் இதய பூமியாம் மணலாறு தொட்டு தென் தமிழீழம் வரையிலான மண்பறிப்பினை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட அடைமொழிகளே இவை. வடக்கோடுகிழக்கின் சில பகுதிகளை இணைத்தல்என்றால் பட்டிப்பளை (கல்லோயா) தொட்டு கந்தளாய் வரை மணலாறை தவிர்த்த நிலை என்று பொருள்படும். பெரும்பான்மை மக்கள் நலனுக்கு பாதகமில்லாத கௌரவத்தோடு கூடிய சமாதானம் என்றால் காலம் காலமாக இன்றுவரை தொடரும் சிங்கள குடியேற்றங்கள் பாதுகாக்கப்படும் என்று பொருள். 'அதிகாரப்பரவலாக்கம்' என்றால் இத்தகைய சிங்கள மக்கள் நலன்கட்கு பாதிப்பின்றி சில அதிகாரங்களை வழங்கல் என்று பொருள்.

இவ்வாறு அடித்துச் சொல்வதற்கு தென் தமிழீழத்தில் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின் இன்றைய நிலையே போதுமான சான்று பகரும். இருதரப்பினரின் இராணுவ ஆயத்த நிலைகள், போன்ற பல விடயங்களை உள்ளடக்கிய விரிவான போர் நிறுத்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## முதற் பரிசு பெற்ற கவிதை

### அர்ப்பணமானவற்றின் பெறுமதி



வா!
அருகமர்.
பேசு.
சமாதானம் பற்றி மூச்சு முட்டப் பேசு.
முற்றத்தில் பறவைகள்
அச்சமின்றி நின்று மேயட்டும்
நீளத்துக்கும் பூச்செடிகள் வளர்ப்போம்.
பாதையெங்கும் ஒளியூறட்டும்.
இரவு பகல் என்ற பேதம்
எதுவுமினி இல்லையென்றானபின்
சண்டை, சச்சரவு
கோபம்,வாதம் எதுவுமில்லையென்றளவுக்குப்
பேசிமுடி.
மூக்குமுட்டிய துயரங்களை இனிஎரித்துவிடுவோம்.
இழந்தவை, அழிந்தவை
செலவானவை, கழிந்தவை போக
அர்ப்பணமானவற்றின் பெறுமதியுணர்ந்து சொல்.
மிக நிதானம் கொண்டு பேசு.

நமக்கென்ற வாழ்க்கை
நாம் பேசும் மொழி
நாம் வாழும் தேசம்
நமது வீடு
இவைதானே நாம் கேட்டோம்
இவைதானே நமக்கானவை.
இவைபற்றிப் பேசு;
மிக நிதானங் கொண்டு சொல்;
இவை நமக்கானவைதானே!

இத்தாவில் க.சிவராசா

## உணர்வெழல்

சின்னவன் ஒருவன் தெருவினில் போனான்
இமைகளிடை இரண்டு தணல்கள்
வரிப்புலிச் சீருடை
தோளில் துமுக்கி.

வளைந்தே என்றும் நடக்கும் எனக்கு
அவனின் நிமிர்வு புதுமையாய் இருந்தது.

அந் நொடிப் போதே அதிர்வு
அவனாய்
அவனின் - என்னின் - அவர்களாய்
இன்னுமேன் இல்லை நானும்?

நெஞ்சு பிளந்து
கண்முன் விரிந்ததென திகைப்பு
வெளிச்சம் பிடித்து உற்றுப் பார்த்தேன்
காடு மண்டிக் கிடந்ததென் உள்ளம் -
சோம்பல் பூனை, கோழைமைக் கழுதை,
தன்னல நரி புகல்கிற இடமாய்!

மின்னி வெளித்தது கபாலத்துள்;
அடிமைக் கடலுள் உயிரினுமினிய
அன்னைத் தமிழீழம்!

தெரிந்தும்
தாயே
இன்னுமேன் நான் இறுகிக் கிடக்கின்றேன்!!

செ. பொ. சிவனேசு

---

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் கடந்த நான்கு மாத காலப் பகுதியில் மூன்று கட்டப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று விட்டன. இருப்பினும், கடந்த ஒரு மாதகாலமாக இப்பேச்சுவார்த்தையில் ஒரு மந்தநிலை ஏற்பட்டுள்ளதாகவே கருதப்படுகின்றது. ஆனால், இந்நிலையானது விரைவில் போக்கப்படும் என அரச தரப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத் தரப்பினருக்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையானது வெளிப்பார்வைக்கு இருதரப்புப் பேச்சுவார்த்தை எனக் கூறப்பட்டாலும், அது முத்தரப்புப் பேச்சுவார்த்தை போன்றதே ஆகும். அதாவது விடுதலைப் புலிகள் இயக்கம் - சிறிலங்கா அரசு - அதன் இராணுவம் ஆகியவற்றிற்கு இடையிலான பேச்சுவார்த்தை என்றே கூறவேண்டும்.

மேலோங்கி இருந்ததால் மட்டும் எழுந்தது என்று கூறமுடியாது. கடந்த காலத்தில் அதாவது பொ. ஐ.முன்னணி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் ஆயுத படையினர் ஐக்கிய தேசியக் கட்சியின் சொந்தப் படை போல் செயற்பட்டதினால் எழுந்த ஆத்திரமும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளும் காரணம்என்றே கூறவேண்டும்.

இந்நிலையிலேயே ஆயுதப் படையினர் மீது குறிப்பாக ஐ.தே.கவின் சிந்தனைக்கு ஏற்ப இராணுவத்தை வழி நடத்திச் சென்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா மீதும், உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகளின் மீது அதிகாரத் துஷ்பிரயோகம், லஞ்ச ஊழல்குற்றச்சாட்டுக்கள் போன்றவை பொ. ஐ. முன்னணியால் முன்வைக்கப்பட்டன.

அத்தோடு, ஆட்சி அதிகாரத்திற்கு வந்த கையோடு- அதாவது பாராளுமன்றத்

இருப்பினும், ஜனாதிபதித் தேர்தலின் முன் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் காட்ட முனைந்தது. இதன் அடிப்படையில் இராணுவத் தரப்புடன் பேச்சுக்கள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரினாலும், பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவினாலும் நடத்தப்பட்டன. இராணுவத்தின் நலன்கள் பாதுகாக்கப்படும் என உறுதி மொழிகள் அளிக்கப்பட்டன. அப்பொழுது தான், இராணுவம் தனது நிலைப்பாட்டின் உறுதியையும், பலத்தையும் புதிய அரசாங்கத்திற்குக் காட்டியது. ஒரு மாலையில் சுமார் நான்கு மணித்தியாலங்கள் பேச்சு நடத்திய ஜனாதிபதிசந்திரிகா வெறுங்கையுடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால், இதுதான் சந்திரிகா அரசாங்கத்திற்கு இராணுவம் கொடுத்த முதல் சமிக்கை எனக்கொள்ள முடியாது. அதற்கு முன்னரே இராணுவம் தனது உணர்வுகளை அரசாங்கத்துடன் நெருக்கமாக அப்பொழுது

# பேச்சுவார்த்தையி...
# மூன்றாவது தரப்பா...

ஆனால், இராணுவமும் அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்டது என்ற ரீதியில் ஆட்சியில் இருப்போர் கருதுவதினாலேயே பேச்சுவார்த்தையை இருதரப்புப் பேச்சுவார்த்தை என்ற வடிவத்திற்குள் அடக்க முற்படுகின்றனர். இந் நிலையில் இராணுவ ] கடற்படை அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் பங்குபற்றினும் அதனை முத்தரப்பு பேச்சுவார்த்தை என்ற வடிவம் பெறுவதை அரசாங்கம் விரும்பவில்லை.

இந்நிலையே பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டைகள் ஏற்படக் காரணமாகின்றன. சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்து இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியற் தீர்வு காணப்படுவதை அதுஏற்கும்நிலையில்இல்லை. அதனை ஒரு தன்மானப் பிரச்சினையாகவே அது கருதுகின்றது. அவ்வாறு கருதுவதற்கு ஏற்றவகையில் இராணுவத்திற்குச் சில அவமானங்கள் ஏற்பட்டே இருந்தன. இதில் இராணுவ ரீதியில் புலிகளை வெற்றி கொள்ள முடியாமற் போனது ஒருபுறம் இருக்க, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிப் பீடத்தில் ஏறிய உற்சாகத்தில் பிரச்சினையைத் தீர்க்க இராணுவத்திற்குப் போதிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டு விட்டது. இனி இராணுவத்தீர்வு சாத்தியமில்லை- இராணுவத்தால் இயலாது என்பது போன்ற தொனியில் வெளிப்படையாகவே பேசியது. அத்தோடு இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடும் வீண் விரயம் எனக் கூறியது.

மேலும் சில இராணுவ அதிகாரிகள் தமது இஷ்டம் போல் அதிகாரத்தை கையில் எடுத்துள்ளதாகவும், ஆனால் இதைப் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லை எனவும் கூறப்பட்டது. அரசாங்கத்தின் அறிவிப்புக்களுக்குக் கட்டுப்படடே இராணுவம் நடக்க வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகாவே எச்சரித்திருந்தார்.

இது தனியாக் இராணுவத்தின் அதிகாரம் ஆட்சியில்

தைக் கைப்பற்றிய உடன் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கும் முன் வந்தது. இதற்கு பொதுத் தேர்தலின் போது சமாதானத் தீர்விற்குக்கிடைத்த வரவேற்புக் காரணமாக இருக்கலாம். ஆனால் இது குறித்து இராணுவத் தலைமைப்பீடத்துடன் அரசாங்கத் தரப்பு எதுவித பேச்சுக்களையும் ஆரம்பத்தில் மேற்கொள்ளவில்லை. அவர்களின் சம்மதத்தையும் பெறவுமில்லை.

இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்றுஎதிர் கொள்ளவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி நிச்சயம் என்ற ரீதியில் எதிர்காலத்தில் இராணுவம் தமது பணிப்புக்களுக்குப் பணிந்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் சந்திரிகா குமாரதுங்காவிற்கு ஏற்பட்டிருக்கலாம். அல்லது பேச்சுவார்த்தையின் பின் இராணுவத்தை சமரசம் செய்து கொள்ளலாம் என்ற நோக்கம் தோன்றியிருக்கலாம். ஆனால் இராணுவத்தில் பெரும் களை எடுப்பிற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி திட்டமிட்டிருந்தது என்பது மட்டும் உறுதிப்படுத்தக் கூடியதாகவே இருந்தது.

இந்நிலையில், முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் ஜனாதிபதித் தேர்தலின் முன்னர் பொ. ஐ. முன்னணியினரால் ஆரம்பிக்கப்பட்ட போது இராணுவத்தரப்பினரின்-இராணுவத்தினரின் விருப்பு வெறுப்புக்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை. ஆகையினால் பேச்சுவார்த்தையில் இராணுவத்துடன் தொடர்புடைய விடயங்கள் பற்றி ஆராயப்பட்ட போதுபாதுகாப்புஅமைச்சும், ஜனாதிபதிப் பதவியும் கைமாறும் நிலையில் காத்திருக்க வேண்டும் என்ற ரீதியிலேயே பேசப்பட்டது. ஜனாதிபதிப் பதவி இராணுவத்தைப் பணிய வைக்கும் என பொ. ஐ. முன்னணியின் எண்ணம் அதற்கு ஆதாரமாக இருந்திருக்கலாம்.

இருந்தவர்களுக்கு வெளிக்காட்டியிருந்தது. சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஆலோசனைக் குழுவில் இருந்த தமிழ் பத்திரிகையாளர் ஒருவரைச் சந்தித்த இராணுவ உயர் அதிகாரி ஒருவர், இராணுவம் தனது நிலைப்பாட்டில் இருந்து விட்டுக்கொடுக்கப் போவதில்லை எனதெளிவாகவே கூறியிருந்தாராம். அத்தோடு அதனை புதிய அரசிற்குக் கூறும்படியும் சொன்னாராம்.

அதாவது முதலாம் கட்டப் பேச்சுக்கள் முடிவுற்ற போது தான் பேச்சுவார்த்தையில் மூன்றாவதுதரப்பு-புறந்தள்ள முடியாத தரப்பு ஒன்று இருப்பதை அரசாங்கம் புரிந்து கொண்டதுஎன்றே கூறலாம். இம்மூன்றாம் தரப்பானது, இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வை முற்றாக நிராகரித்ததோடு, கடந்தகாலத்தில் தனது நிலைப்பாட்டில் இருந்தும் தனதுகொள்கையில் மாற்றம் எதுவும் செய்வதற்கு தயாராகவும் இருக்கவில்லை.

ஜெயரா...

இந்நிலையில், முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் அரசாங்கம் ஒப்புக் கொண்ட விடயங்களில் முன்னேற்றகரமான நடவடிக்கை எதையும் எடுக்க முடியாது போனது. இதற்கு வடக்கு-கிழக்கு நிர்வாகம் பற்றி அரசாங்கம் தெளிவாகப் புரிந்திராமையும் ஒரு காரணம் என்றே கூற வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இரண்டாம் ஈழப்போரின் பின்னர் இராணுவச் சட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட்ட பிரதேசங்களாகவே இருந்தன. அரசாங்கத்தரப்பு கூறிக் கொண்டது போல் விடுவிக்கப்பட்டதான கிழக்கு மாகாணமும் சரி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு மாகாணமும் சரி சிறிலங்கா அரசால் அதாவது ஐ. தே. க. அரசால் பிரகடனப்படுத்தப்படாத இராணுவச் சட்

டத்தின் கீழேயே இருந்தது. அங்கு சிவில் நிர்வாகம் என்பதும் சிவில் அதிகாரிகள் என்பதும் இராணுவத்தினரின் பணிப்புகளுக்கு கீழ்ப்பட்டே செயற்பட வேண்டியும் இருந்தது.

ஆகையினால், முதலாம் கட்டப் பேச்சுக்களின் பின் அரசாங்கம் இராணுவத்துடன் தொடர்பற்ற விடயங்கள் என்ற ரீதியில் சில நடவடிக்கைகளை எடுக்க முனைந்ததாயினும் அது வெற்றி பெறவில்லை. எடுத்துக்காட்டாக தடைவிதிக்கப்பட்ட பொருள்கள் சிலவற்றின் மீதான தடையை அரசாங்கம் தளர்த்திய போதும், தடைமுகாங்களைத் தாண்டி அவற்றால் வடக்கே வந்து சேரமுடியவில்லை. பொருளாதாரத் தடை நீக்கம் என்பது பேச்சளவினதானதாகவே இருந்தது.

இதேசமயம் கிழக்கு மாகாணத்தில் பிரகடனப்படுத்தப்படாத பொருளாதாரத் தடை ஒன்று அமுலில் இருந்

இராணுவத்தை பொறுத்து அதன் நிலைப்பாடு தெளிவாகவே பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ''இன்றைய நிலைகளில் இருந்து ஒரு அங்குலம்தானும் பின்வாங்கப் போவதில்லை'' என்பதே அதுவாகும். இதன் அடிப்படையில், இராணுவம் வடக்கிலும், கிழக்கிலும் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியது.

இராணுவத் தரப்பின் கூற்றுப்படி கிழக்கு மாகாணம் அவர்களின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசம். வடக்கே யாழ் குடாநாடு இராணுவ முற்றுகைக்குள்ளும், ஏனைய பகுதிகள் ஒட்டுமொத்தப் பொருளாதாரத் தடைக்குள்ளும் உள்ள பிரதேசமாகும். இந்தவகையில், கிழக்கில் புலிகளின் நடமாட்டம் ஒடுக்கப்பட்டு விட்டது என்பதும், இதனால் புலிகளின் நடவடிக்கைக்கு இடமளிக்க முடியாது என்பதும் அதன் நிலைப்பாடு ஆகும். அதேவேளை வடக்கில் இராணுவ முற்றுகையோ அன்றிப்பொருளாதார முற்றுகையோ தளர்த்தப்படக்கூடாது என்பதிலும் இராணுவம் உறுதியாகவே இருந்தது.

டது. இதன் மூலம் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் இராணுவம் தனது தீர்மானங்களை நிலை நிறுத்த முற்பட்டது.

இந்தவகையில் தான் பூநகரிப்பாதைதிறப்பது தொடர்பாகவும்- பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பாகவும் கிழக்கில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் குறித்தும் இராணுவம் புதிய நிலைப்பாட்டுடன் செயற்படத் தொடங்கியது.

பூநகரிப்பாதை விவகாரத்தை நிராகரித்த இராணுவத்தலைமை, பொருளாதாரத்தடை நீக்கத்திற்கும் முட்டுக்கட்டை போட்டது. குறிப்பாக எரிபொருளில் அதன் கட்டுப்பாடு/பிடி பலமானதாகவே இருந்தது. இதில் எந்த வித தளர்வையும் செய்ய அது தயாராக இருக்கவில்லை.

இதற்கு சிறப்பான உதாரணமாக மோதல் தவிர்ப்பு உடன்பாட்டு அமுலாக்கத்தில் இராணுவம் முட்டுக்கட்டையாக எழுந்துள்ள விவகாரத்தைக் குறிப்பிட முடியும். 'மோதல் தவிர்ப்பு நிலை' உடன்பாட்டின் போது இராணுவத்தரப்பு அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் பங்கு கொண்டபோதும் தமது நிலைப்பாட்டிற்கு மாறாக, ஒப்பந்த சரத்துக்கள் சில அமைந்துவிட்டதை இராணுவத்தரப்பு ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை.



# ...தையில் வலுவுள்ள ...பாக ராணுவம்

...யராஜ்

தையை அரசதரப்பு அறிந்திருக்கவே இல்லை.

இந்நிலையானது ஜனாதிபதித் தேர்தலின் பின்பும் மாற்றம் கண்டதாக இல்லை. இராணுவக் கட்டமைப்பில் மாற்றம் எதுவும் செய்யப்படாமல் சந்திரிகா அரசாங்கம் இவ்விவகாரத்தில் முன்னேற்றம் காண முடியாததொரு நிலை ஏற்பட்டது.

இதேசமயம் சந்திரிகா அரசாங்கமும் ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் தனது நிலைப்பாட்டில் மாற்றத்தைக் காட்டினர். இனப்பிரச்சினையின் தீர்வுடன் பெரும்பான்மையினரின் நலனையும் இணைத்துப் பேசத் தொடங்கினர். அத்தோடு இராணுவத்தினரின் நிலைப்பாட்டையும் படிப்படியாக ஏற்றுக்கொள்ளும் அளவில் இருந்தனர். அரசாங்கத்தின் இந்நிலைப்பாடு மாற்றத்திற்கு இராணுவத்தின் அழுத்தமே முற்றுமுழுதான காரணம் என்பதைவிட, ஆட்சியாளர்களிடம் இருந்த பேரினவாதச் சிந்தனையும் சேர்ந்ததின்வெளிப்பாடேஇது எனலாம். இதன் தொடராகவேஇரண்டாம்கட்டப்பேச்சுவார்த்தையின் நிகழ்ச்சிநிரல் இராணுவத்தினரின் நிலைப்பாட்டிற்கு ஏற்றதாக வகுக்கப்பட்டது.

இதன் பிரகாரம் முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் முன்னுரிமை கொடுக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்களின் விநியோகம், மற்றும் பாதை திறப்பு விவகாரம் என்பன பின்தள்ளப்பட்டு, முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் அரசாங்கம் வழங்கிய நிகழ்ச்சிநிரலில் கடைசியாக இருந்த மோதல் தவிர்ப்பு நிலை குறித்த பேச்சுவார்த்தை முதன்மை பெற்றது. இது இராணுவத்தினரின் சம்மதத்துடன் மேற்கொள்ளப்பட்டது என்பதிலும் சந்தேகமில்லை.

இதேசமயம், இராணுவத்தரப்பு மறுசீரமைப்பொன்றிற்கு சிறிதுகால அவகாசம் வேண்டியும் நின்றது. ஏற்கனவே இராணுவத்தளபதியாக ஜெரிடீ சில்வா பதவி ஏற்ற பின்னர் இராணுவச் சீரமைப்பு தொடங்கியிருப்பினும், அதனைப் பூர்த்தி செய்ய கால அவகாசம் தேவையாக இருந்தது என்பதே யதார்த்தமாக இருந்தது. ஏனெனில் கடந்தகாலத்தில் இராணுவம் எதிர்கொண்ட பெரும்தோல்விகள் அதன் கட்டமைப்பையே சீர்குலைத்திருந்தது.

இந்நிலையில், புதிய அரசாங்கத்துடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ளவும், அதே சமயம், கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்ளவும் பரஸ்பர விட்டுக் கொடுப்பிற்கு இராணுவம் இணங்கியது. அதன் பிரகாரம், மோதல் தவிர்ப்பு நிலை ஒன்றிற்கு இராணுவம் உடன்படுவதற்கு முன்னர் இடைக்கால வரவு-செலவுதிட்டத்தில் 500கோடி ரூபா இராணுவத்திற்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருந்தது. இது இராணுவத் தரப்பிற்கு அரசாங்கம் செய்த நற்சமிக்கை அல்லது பிரதியுபகாரம் ஆகும். இது இராணுவத் தரப்பிற்கு நம்பிக்கை யூட்டும் அம்சமாக இருந்தது.

இவ்உறவு நிலை வளர்ச்சியில் இராணுவத் தரப்பும் பேச்சுவார்த்தையில் இணைத்துக் கொள்ளப்பட்டது. இவ்விணைப்பானது போர் நிறுத்தம், மோதல் தவிர்ப்பு நிலை குறித்த பேச்சிற்கு உறுதுணையாகும்எனத் தெரிவிக்கப்பட்டிருப்பினும் பேச்சுக்களில் இராணுவத் தரப்பும் இடம் பிடித்துக் கொண்டது என்றே கூற முடியும்.

இந்தவகையில் இரண்டாம் கட்டப்பேச்சுக்களில் இராணுவத் தரப்பு நான்குபேர் கொண்டசிறிலங்காகுழுவில்50வீத இடத்தைப் பிடித்துக்கொண்

டையாக எழுந்துள்ள விவகாரத்தைக் குறிப்பிட முடியும்.

இதன் காரணமாகவே, கிழக்கில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு இராணுவம் தடை விதித்தது. இது கிழக்கு இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பதின் அடிப்படையிலானதாகும் இது போன்றதே மீன்பிடிப்பதற்கு உடன்பாட்டின் மூலம் வழங்கப்பட்ட அனுமதியை இராணுவத் தரப்பு ஏற்றுக்கொள்ள மறுத்த நிலையும் ஆகும்.

ஆனால் அரசாங்கத் தரப்பு இராணுவத்தின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகிவிட்டமையால் உடன்பாட்டில் விரோதமாக ஏற்பட்டுவிட்ட சரத்துக்களை அரசாங்கத்தின் மூலமே நிவர்த்திக்க இராணுவம் விரும்பியது. இதன் பிரகாரமே ஒப்பந்தத்தின் பின்னர் மீன்பிடிக்கு அரசாங்கம் விதித்ததடைகளும் கட்டுப்பாடுகளும் ஆகும்.

மேலும் கிழக்கில் புலிகளின் பிராந்திய தளபதிகளுடன் இணக்கம் காணப்பட்ட சில விவகாரங்களை மோதல் தவிர்ப்பு உடன்பாட்டு நகலுடன் இணைத்துக் கொள்ளச் செய்த முயற்சியும் ஆகும்.

ஆனால் இம்முயற்சிகள் இன்று சமாதானப் பேச்சிற்கு முட்டுக்கட்டைகளாகத் தோன்றியுள்ளன. ஆனால் இராணுவத் தரப்பு இதில் விட்டுக் கொடுப்பதற்கென சமாதானத் தீர்விற்கு ஒத்துழைப்பதற்கான சாத்தியப்பாடுகளோ இருப்பதாகத் தெரியவில்லை. இதன் கார

(27 ஆம் பக்கம் பார்க்க)




## சுவரில் சிலந்தி

இரவு உறக்கத்திற்கு முன்னுள்ள
நிமிஷங்களில்
சுவரில் - முகடில் - அலுமாரி வெளிப்புறங்களில்
பூச்சி தேடுவதே
வேலையாய்ப் போச்சு..
நடுநிசி -
உறக்கத்தைக் குலைக்கும்
குளிரின் கொடுமையில் -
நுளம்பின் தாக்குதல்களில்
எழும் போது...
பூச்சிகள் பற்றிய நினைப்பு
நெஞ்சையெரிக்கும்!
கடந்த வாரம்
கழுத்தில் விழுந்து கடித்த
பூச்சியின் ஞாபகம் இன்னும்
மங்கவில்லை.
இதோ -
விடிவிளக்கு ஒளிர்கையில்
சுவரில் பூச்சி...
சிலந்தியெனக் கண்ணுற்றபோது
எழுந்து...நெருங்கி...
அடிக்க முயலுகையில்-
'விஷப்பூச்சியெனில் ஓடும்'
நண்பனொருவனின்
எப்போதைய கூற்று
காதில் ஒலிப்பு...
நான் நெருங்கிய பின்பும்
சிலந்தி ஓடவில்லை.
புதுமைச் சிலந்தி ஓடுமோ?
விஷம் இருப்பவை ஓடும்
என்பது மீளப் பதிவாக
பொட்டுப் பூச்சியென
அடையாளம் கண்டு
வெட்கினேன்!



- கோகுலன்

# "விளையாட்டுக்களின் பல்வேறு பரிமாணங்கள் திருப்திகளும் அதிருப்திகளும்"

விளையாட்டுக்கள், அதன் நன்மைகள், உளவியல், உடலியல் ரீதியான தேவைகள் என்பன பற்றிய கருத்துக்கள் நிறையவே வெளியிடப்படுவதும் போதிக்கப்படுவதும் சாதாரணமாக எங்கும் காணப்படுகின்ற தொன்றுதான். விளையாட்டுக்கள் அவசியமானவை என்பதில் யாருக்கும் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை என்பதும் அதேபோன்று உண்மையானதும் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை. விளையாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள், ரசிகர்கள் ஆகியோர் உள்ளூர் விளையாட்டுகளுடன் நேரடித் தொடர்பு கொண்டவர்கள். அதேவேளை சர்வதேச ரீதியில் தமக்குப் பிடித்தமான விளையாட்டுகளை, அது தொடர்பான செய்திகளை பின்பற்றுபவர்கள். மேலும் விளையாட்டுக்கள் சர்வதேச ரீதியில் ஒரு பரிமாணத்தையடைந்திருக்கும்வேளை உள்ளூர் மட்டத்தில் எமது மண்ணில் ஏற்றங்களை கண்டு வருகின்றது.

சர்வதேச ரீதியான விளையாட்டுக்கள், அதன் முன்னணி நாயகர்கள், நாயகிகள் அனைவரையும் நாம் அறிந்தவர்கள் அல்ல. ஆனால் உலகின் முக்கிய பல விளையாட்டுக்கள், அதன் முன்னணி வீரர்கள் பற்றி அறிந்துள்ளோம். உதாரணமாக உதைபந்தாட்டம், கிரிக்கெட், ஹொக்கி, சதுரங்கம், குத்துச் சண்டை என்றவாறாகச் சிலவற்றை குறிப்பிடலாம். ஆனால் சர்வதேச விளையாட்டுகளில் இன்னொரு பக்கம் உண்டு. அதாவது தொழில்சார் தன்மை கொண்டாடப்படும் நபர்கள் **(CELEBRITIES)** என்பன. விளையாட்டுக் களங்களுக்கு அப்பால் இவை தனிப்பட்ட வாழ்விலும், நிறுவன அமைப்புகளிலும், விளையாட்டின் மகத்துவத்திலும் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தி வருவதை ரசிகர்கள் அவதானித்து வருகிறார்கள். போட்டி, பொறாமை, காழ்ப்பு, சுயநலம் ஏன் மரணபயம் என்பன கூட இது தொடர்பாக சர்வதேச விளையாட்டுக்களை ஊடுருவி நிற்பது யாவரும் அறிந்ததே.

தொழில்சார் தன்மை என்பது இன்னொரு சர்வதேச வர்த்தகமாக மாறி நிற்பதாக விமர்சகர்கள் கருதுகிறார்கள். பொதுவாக சமூக நலத் துறைகளுக்கு செலவிடத் தயங்கும் நிறுவனங்கள் பல மில்லியன் டொலர்களை தனிநபர்களுக்கு வாரிவழங்கிக் கொண்டிருப்பதைக் குறிப்பிடுகிறார்கள். விற்பனைப் பொருட்களுக்குச் சர்வதேச சந்தை பிடிக்கும் பாணியில் வீரர்களை, வீராங்கனைகளைப் பணத்துக்குப் பிடிக்கும் சம்பவங்கள் மிகச் சாதாரணமானவை. இவை குறிப்பாக பெரும் எடுப்பில் ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா தற்போது புதிதாக ஜப்பான் நாட்டிலும் காணப்படும் ஒரு போக்காகும். எனவே தொழில்சார் தன்மையில் விளையாட்டுகள் வீரர்களின் முழுநேரத் தொழிலாக அமைந்து விடுவதால் தம் உயர் திறனைப் பேணிக் கொள்ள போதை வஸ்துக்கள் பாவித்தல், தமக்குச் சார்பாக நிலைமைகளை மாற்ற லஞ்சம் கொடுத்தல் என்பனவற்றை சட்டத்துக்குப் புறம்பானவையாக இருந்தாலும் செய்வதற்கு முற்படுகிறார்கள். இதன் காரணமாக பல வீரர்கள் விளையாட்டுக்கள் அபகீர்த்திக்குள்ளாகுவது இன்றைய உலகில் சாதாரணமான காட்சியாக மாறிவிட்டது. அதோடு அதீத திறமையுடையவர்களாக இவர்கள் இருப்பதால் இவர்கள் தம்மை சாதாரண மானுடருக்குச் சிறிது மேலாக **(SUPER HUMAN)** எண்ணிக் கொள்வதும் இதனால் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலாவது உலக ரசிகர்களால் கசப்புடன் விமர்சிக்கப்படுவதும் தவிர்க்க முடியாததாக ஆகி விட்டது. மேலும் பல மில்லியன் டொலர் விளையாட்டு ஒப்பந்தங்களைக் கூசாமல் முறிப்பதும் இதனால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுவதும் நிறுவன ரீதியான நடவடிக்கைகளுக்கு உள்ளாகி விடுவதும் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றன. ரசிகர்களின் பார்வையில் இவ்வீரர்களின் விளையாட்டுக்கள் பற்றிய பிம்பம் பெரிதாக விழுந்துள்ளமையாலும், மறுபக்கம் சரிவரத் தெரிய வராமையாலும் இது பற்றிய உண்மைகளை நாம் அறிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றோம். நாம் நேசிக்கின்ற எந்தச் சர்வதேச புகழ் பெற்ற வீரனும் இதற்கு விதிவிலக்கல்ல.

இன்னொரு புறம் உலக ரசிகர்களால் விளையாட்டுத் திறமையுடன் சேர்ந்து அவர்களின் தோற்றம், தோற்றத்தைமேம்படுத்திக்கொள்ளும்பாங்கு ஆகியவற்றால் தமக்கு மேலதிக புகழையும் அதேவேளை தமக்கு ஆபத்தை தேடிக்கொள்கின்ற ஒருபோக்கும் கூட சர்வதேச ரீதியில் காணப்படுகின்றது. இதற்கு உதாரணமாக டென்னிஸ் உலகில் ஆர்ஜென்ரினாவைச் சேர்ந்த கப்ரியாலா சபாட்டினி, அமெரிக்காவைச் சேர்ந்த அன்ட்ரி அகாசி, பல குத்துச்சண்டை வீரர்கள் போன்றவர்கள் ஒரு சிலரைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக தமது இல்லங்களுக்குப் பலத்த காவல்கள், தமக்கு மெய்ப்பாதுகாப்பாளர்கள்என்றவாறு தமக்குத்தாமே ஒரு சிறை வாழ்க்கையை ஏற்படுத்திக்கொள்ளும் துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகும் நிலையைக் காண்கிறோம். பல்வேறு அமைப்புக்களின் போட்டித்தன்மை அதிதீவிர ரசிகர்கள், எதிரணி வீரர் மீது கொள்ளும் பொறாமை, அதேவேளை இவ் வீரர்களே அறியாமல் பெருந் தொகைப் பந்தயப் பணங்கள் (இன்னொரு வகை வர்த்தகம்) கட்டப்படுவது தமது சாதக நிலைமையைக் கருத்தில் கொண்டு வீரர்களை இல்லாதொழிக்க முயற்சிகள் மேற்கொள்வது என்பன இவ் வீரர்களின் உயிருக்கே ஆபத்தாக முடிந்து விடுகின்றன.

**வா. ஜெயரட்ணம் (நிர்மலன்)**

எமது மண்ணில் இத்தகைய போக்குகளுக்கு எவ்வகையிலும் இடமில்லை என்பது பெரிதும் மகிழ்ச்சி தரும் விடயம். வீரர்கள் தமது பொழுது போக்கு, சந்தோசம் என்பவற்றிக்காகவும், ரசிகர்கள் தமக்குப் பிடித்தமான வீரர்கள், விளையாட்டுக்கள் மீது கொண்ட நேசத்தாலும் விளையாட்டுடன் தொடர்பு படுகின்றார்கள். குறிப்பாக தொழில்சார் விளையாட்டுப் பாங்கு முற்றிலும் இங்கு காணப்படாததொன்று. இதனால் சர்வதேச ரீதியில் காணப்படுகின்ற முறைகேடுகள், ஆபத்துக்கள் இங்கு எவ்வாறும் எழ முடியாதது. ஆனால் **Celebrities** இங்கும் பல்வேறு விளையாட்டுகளில் காணப்படுகின்றார்கள். இவர்களை ரசிகர்கள் தம் இதயம் நிறைந்த நட்சத்திரங்களாக போற்றுகிறார்கள். இவ்வகை வீரர்கள் தம் திறமையால் மட்டும் ரசிகர்கள் மனதில் இடம் பிடித்துக் கொண்டவர்கள் அல்ல. அதனால் தாம் பிடித்த இடத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் பாரிய பொறுப்புஇவர்களுக்கு உண்டு. ஏனெனில் வினளயாட்டுத் திறமையோடு, தமது சொந்த வாழ்வின் தூய்மை, களங்களில் விளையாடும் நாகரிகமான முறைகள், ரசிகர்களை மதிக்கும் தன்மை, ஏனைய வீரரின்வீழ்ச்சியில் தாம் வெற்றிகாணக் கூடாது என்ற சிந்தனை போன்றவற்றையெல்லாம் வீரர்களின் திறமையுடன் இணைந்து நோக்கியே எமது ரசிகர்கள் வீரனைப் போற்றுகின்றார்கள். இவையெல்லாம் சேராத விடத்து ரசிகர்கள் இவர்களை துச்சமாக நினைத்து தூக்கிஎறிந்துவிடுவார்கள். நாம் ஒரு பாரம்பரியமான பண்பின் அடிப்படையில் வாழும் சமூகம். இதனாற்றான் எம்மண்ணில் வளர்ந்து வரும் விளையாட்டுத் துறைகள் பல தடைகளின் மத்தியில் அண்மைக் காலத்தில் பெருவீச்சொன்றைக் காட்டி நிற்கமுடிந்திருக்கிறது.

எமது வளங்கள் இங்கிருந்து படிப்படியாக வெளியேறிக் கொண்டிருப்பது இன்னொரு துயரம். தனது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்வது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ள உரிமை. இதில் தலையிடுவதை யாரும் விரும்புவதில்லை. இதேவேளை விளையாட்டுகளில் பிரகாசிக்கும் வீரர்கள் ஒருவகையில் பொது வாழ்வுக்குள் வந்து விடுகிறார்கள். இந்நிலையில் போற்றப்படும் வீரர்களில் ரசிகர்கள் ஒருவித உரிமையை எடுத்துக் கொள்வது தவிர்க்க முடியாததே. ஏனெனில் இவ்வீரனின் திறமைக்காக மட்டுமன்றி அவனது திறமை அவனது துறையில் சமூகத்துக்குப் பயன்பட்டால்...? என்றதொரு வினாவை யெழுப்பி அந்த வளம் சமூகத்துக்குப் பாய்ந்தோட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இந்நிலையில் இவ்வகை வளங்களின் இழப்பு பெரும் மனச்சுமையை ஏற்படுத்துவதாக அமைகிறது. எது எவ்வாறாயினும் எமது ரசிகர்கள் எமது வீரர்களை நேசிக்கும் பாங்கும் கண்ணியப்படுத்தலும் உலகில் எந்தப் பாகத்திலும் கிடைத்து விடாது. இந்தக் கௌரவம் உணர்வுடன் இணைந்தது.

ஆகவே விளையாட்டுப் பண்புகள் என்பவை வாழ்க்கையின் வழிகாட்டி என்று சகலரும் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும் என்பதை ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

சர்வதேச ரீதியாக விளையாட்டுக்கள், அதனோடு இணைந்த செயற்படுத்தும் பல்வேறு கட்டமைப்புகள் மிகவும் இறுக்கமானவை. அதோடு பலமானவை. இந்நிலை ஓரளவிலாவது சர்வதேச விளையாட்டுக்கள் வெறும் சூதாட்டம் என்ற அவப்பெயரைப் பெறாது காத்துக் கொள்ள முடிந்திருக்கிறது. முற்றாக இவ்வமைப்புகள் இவற்றில் வெற்றி பெறா விட்டாலும் ஓரளவிலாவது வெற்றி பெறக் காரணம் இவ்வமைப்புகளின் தகுதிசார் உயர்நிலைத் தன்மையாகும். இத்தன்மையினாலேயே பல உலகப் பிரசித்தம் பெற்ற விளையாட்டுக்கள் ஒரு குடையின்கீழ் சர்வதேச ரீதியில் செயற்பட முடிந்திருக்கிறது. இவ்வுயர் தகைமை எந்தமட்டத்திற்கும் எமது பிரதேச மட்டத்துக்கும் ஏற்புடையதொன்றாகும். நிறுவனங்களை அமைத்துக் கொள்வதோ செயற்படுவதோ சுதந்திரம். அது யாருக்காக இயங்குகின்றது என்ற வினா எழும்போது விளையாட்டுச் சார்ந்த எந்த நிறுவனமும் ஏதோ ஒரு விளையாட்டுடன் தொடர்புடையது. மொத்தத்தில் அது மக்களுடன் தொடர்புடையது என்பது சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல. இங்குதான் உயர் தகைமை **(COMPETENCY)** என்பது அவசியமாகிறது. உயர் தகைமை என்பதில் பல விடயங்கள் அடங்கும். முதலாவது எடுத்த காரியங்களைத் துணிவாகச் செய்வது. அதற்கு அத்துறையில் ஆழ்ந்த புலமையும், ஆற்றலும், அனுபவமும் இருக்க வேண்டும். அடுத்தது, மேற்கண்ட காரியத்தை செய்வதற்கு தேவையான அர்ப்பணிப்பு, அதோடு ஒரு விளையாட்டை ஒழுங்குபடுத்தும்போதோ, செயற்படுத்தும் போதோ, விளையாட்டை மைதானத்தில் நடாத்தும் போதோ இது விடயங்கள் ஆயிரக்கணக்கான மக்கள் அறியாததல்ல, அவர்களால் செய்ய முடியாததும் அல்ல. மொத்தத்தில் அவர் ஏதும் அறியாத பாமரப் பார்வையாளர் அல்ல என்பதையும் நன்குணர்ந்து கொள்ளவேண்டும். எனவே ரசிகர்களைத் திருப்திப்படுத்தும் ஆற்றல் இல்லாத நிலையில் இவர்களின் தகுதி **(COMPETENCY)** நம்பகம் **(RELIABILITY)** என்பன கேள்விக்குரியதாகும். எமது ரசிகர்கள் மிக நாகரிகமானவர்கள். இதனால் அவர்கள் தமக்குள் விவாதித்துக் கொள்கிறார்கள். விசனப்பட்டுக் கொள்கிறார்கள்.

இன்று சர்வதேச ரீதியில் **ELECTRONIC** மத்தியஸ்த முறைகள் வந்துவிட்டன. கிரிக்கெட்டை உதாரணமாகக் கூறலாம். இன்னொருவகையில் ஆட்டங்கள் ஏதோ ஒரு முடிவுடன் முடிந்திருக்கலாம். அந்த ஆ[illegible]ய தீர்வுகள் அத்துடன் முடிவதில்லை என்பதற்கு '94 உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நல்லதொரு உதாரணம். அதாவது ஆட்டம் முடிந்த பின்னும் கூட தொலைக்காட்சி ஆய்வின் பின் வீரர்கள் தண்டிக்கப்பட்டுள்ளார்கள், மத்தியஸ்தர்கள் தகுதியற்றவர்களாக நிரூபிக்கப்பட்டுஅடுத்த ஆட்டங்களுக்கு நீக்கப்பட்டுள்ளார்கள். கடந்த ஆசியபோட்டிகளில் கலந்து கொண்டு தங்கப்பதக்கங்கள்பெற்ற பலர் தகுதி நீக்கம் செய்யப்பட்டு எதிர்காலத்தில் விளையாடத்தடைவிதிக்கப்பட்டுள்ளார்கள். எம்மிடம் நிறுவன ரீதியாக அவ்வகை**ELECTRONIC** வசதிகள் இல்லாதிருக்கலாம். ஆனால் ரசிகர்கள் அவற்றை பகுத்தாயும், உணரும் திறன் மிகவும் கொண்டவர்கள். எனவே எந்தவொரு விளையாட்டிலும் தலை தூக்கும் தகுதியீனச் செயல் முறைகள், பச்சாதாபங்கள், அவர்களுக்கெதிராகச் செயற்படத் தயங்கும் நிறுவனங்கள் பற்றிய கணிப்பொன்று மிகவும் கசப்பானதாக ரசிகர்கள் மத்தியில் காலாகாலமாக நிலைத்து நிற்கும்.

விளையாட்டுக்கள் மைதானத்தில் மட்டும் முடிந்து விடுவனவல்ல. கிரிக்கெட்டின் ஆறுமணித்தியாலங்களோ, வலைப்பந்தாட்டத்தின் நாற்பது நிமிடங்களோ, உதைபந்தாட்டத்தின் அறுபது நிமிடமோ அந்த விளையாட்டின் முடிவல்ல. உண்மையில் அதன் பரிமாணம் அவ்வாட்டம் முடிந்த பின் பல்வேறு உணர்வலைகளாகக் கிளை பிரிந்து பரந்து செல்கின்றது. நாம் ஒரு போராட்ட சமூகம். நாம் செய்யும் எந்தக் காரியமும் சத்தியம், நீதியின் பாற்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். இன்றேல் விளையாட்டுத் துறையின் மகிமைக்கு களங்கம் ஏற்படுவது மட்டுமல்ல, விளையாட்டு தொடர்பான அத்தனை பேருக்கும் ஒரு விரக்தி நிலையை உருவாக்கிவிடும். எனவே நாம் எல்லோரும் ஒன்றிணைந்து இம் மண்ணின் விளையாட்டுத் துறையை மென்மேலும் வளம்படுத்த எம்மால் ஆன சகலவற்றையும் சத்தியத்தின்பால் நின்று செயற்படுத்த வேண்டும்.

## உழுத்த

உடன்பாடொன்றை உருவாக்க வேண்டிய அவசியத்தை புலிகள் வலியுறுத்தும்போது அதைத் தட்டிக் கழிக்கும் இவர்கள் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டினை தமது மேலாதிக்க ஆக்கிரமிப்பு நிலையினை உறுதிப்படுத்தும் ஆவணமாக கருதி தாமே உருவாக்கிய போர் நிறுத்த விதிகளை புலிகள் மீறுவதாக எண்கணக்கு காட்டுகின்றனர். தாம் பிறந்த மண்ணில், தமது தாயக பூமியில் விட்டு விடுதலையாகி திரிய தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த இராணுவம் அங்கு தடையாக நிற்பதன் பொருளும் சந்திரிக்கா அம்மையார் விசேட அடைமொழிகளுடன் கூறுவதன் பொருளும் ஒன்றேயாம். இவையொன்றும் தமிழீழமக்கட்கு புதியவைஅல்ல. ''எண்ணித் துணிக கருமம்'' என்பதன் பொருளை உணர்ந்த எம் மக்கள் சந்திரிக்கா அம்மையார் தடம் புரள்வதை கவலையோடு கவனிக்கின்றார்கள்.

இத்தகைய நிலைகள் இருந்த போதும் சந்திரிக்கா அம்மையார்க்கு இன்னமும் வாய்ப்பு இருக்கின்றது என்பதை தமிழ்த் தேசியத்தின் தலைவன் அமைதியாகக் கூறும் நிலையே இன்றுள்ளது. ஏனென்றால் அண்மைக் கால வரலாற்று நிகழ்வுகள் தமிழரின் விடுதலைப் போராட்டம் சருவதேச தகுதி காண் நிலையை தாண்டி விட்டது என்பதை உணர்த்தி விட்டது அது பிராந்தியச்சிக்கல்எனும் நிலைப்பாட்டைத் தாண்டி உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்று விட்டது. அதனை வழிப்படுத்திய வரலாற்றினை, இயற்கையை தனது ஆசானாகக் கொண்ட தலைவன் அதே வரலாற்றின் இயங்குவிதிகட்கு ஏற்ப எல்லையற்ற இயற்கையின் சக்தியை உள்ளடக்கியவனாக மிளிரும் நிலை தோன்றிவிட்டது. எனவே இப்போது எம்மக்கள் மேலும் உறுதியைப் பெற வேண்டும். போராட்டத்திற்குவலிமை சேர்க்க வேண்டும். வளமான வாழ்வினை கனவுகாண வேண்டும். ஏனெனில்,

''உழுத்த மாளிகையின் இடுக்குகள் எங்கணும் ஆலம் விதைகள்'' எனவே எம் மக்கள் ''நம்பிக்கையுடன் எழ'' வேண்டும்.

# "ஆரம்பக் கல்வியில் இருந்தே தேசப்பற்று ஊட்டப்படவேண்டும்"

பல்கலைக் கழகப் பட்டம் பெற்றதும் பலர் பறந்தோடி அந்நிய தேசங்களில் அடைக்கலம் புகுந்து விடுகின்றனர். இது இன்று நேற்று ஏற்பட்ட ஒன்றல்ல. இது காலம் காலமாக இருந்து வரும் ஒன்று. ஆனால் அண்மைக்காலங்களில் இது மேலும் அதிகரித்துள்ளது என்று கூறலாம். அவ்வாறு செல்வோரது நோக்கம் பலவாக இருந்தாலும் தேசப்பற்று ஊட்டி வளர்க்கப்படாமையே அதற்கு காரணம் என நான் நினைக்கின்றேன். அதனை பல்கலைக்கழகத்தில் வைத்து ஊட்ட முடியாது. அப்படி ஊட்டுவது காலம் கடந்ததாகிவிடும். தேசப்பற்றானது ஆரம்பக் கல்வியிலிருந்தே மாணவர்களிடையே வளர்க்கப்படல் வேண்டும் என்கிறார் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் அவர்கள்.

ஆறாம் ஆண்டில் ஈழநாதம் மக்கள் தினசரி தனது காலடியை பதிக்கும் வேளை வெளியாகும் சிறப்பிதழுக்காக துணை வேந்தரை அவரது இல்லத்தில் வைத்து சந்தித்தபோது,

கேள்வி;- இன்றைய கல்வி முறை சமுதாயத்திற்கு பயன்படக் கூடிய முறையில் அமைந்துள்ளதா?

பதில்: கல்வித்திட்டம் நல்ல முறையில் தான் வகுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதை நடைமுறைப் படுத்துவதில் தான் சில நடைமுறைச் சிக்கல்கள் இருந்துவருகின்றன. அதனால் அத்திட்டம் முழுமையாக செயல் வடிவம் பெறாது இருந்திருக்கலாம். இன்றைய நிலையில் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட பற்றாக்குறை, சாதனங்களின் கிடைப்பனவு போன்றவற்றை இதற்கான தடையாகக் குறிப்பிடலாம். இதனால் சமுதாயம் முழுமையான பயனை பெற்றிட முடியாது உள்ளது.

கேள்வி: தற்போதைய கல்வி முறையில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என கருதுகிறீர்கள்?

பதில்: கல்வி என்பது வேலை தேடுவதை மட்டும் இலக்காகக் கொண்டு அமைந்துவிடக்கூடாது. அது கல்வியின் நோக்கமும் அல்ல.

கல்வி என்பது ஒரு மாணவனின் சுயநம்பிக்கையை வளர்க்கக்கூடியதாக அமைய வேண்டும். ஆளுமையை விருத்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். சிந்திக்கும் ஆற்றலை தூண்டக்கூடியதாக இருக்க வேண்டும். ஆனால் இன்று அப்படியான நிலையில் ஆசிரியர்களோ மாணவர்களோ இல்லாதுள்ளனர். இதற்குவகுப்பறைகளில் கருத்துப்பரிமாறல்கள் இன்று இல்லை. ஆசிரியர், மாணவர்களிடையேயும் இல்லை. பல்கலைக் கழகங்களிலும் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே உள்ளது. வாரத்தில் ஒரு தடவையாவது ஆசிரியர் மாணவர்களுடன் மனம்விட்டு கற்றவற்றை பரிமாறிக் கொள்ள வேண்டும். அப்போது தான் மாணவர்களின் மனதில் எழும் சந்தேகங்களை ஆசிரியர்களால் போக்கிட முடியும்.

இன்று வகுப்பறைகளில் மாணவர்கள் கேள்வி கேட்கும் தன்மை மழுங்கடிக்கப்படுகிறது. ஒருவர் கேள்வி கேட்டால் சகமாணவன் நையாண்டி செய்கிறான் அல்லது ஆசிரியர் அவரை ஏளனம்செய்கிறார். இத்தகைய நிலை முற்றாக மாற வேண்டும். ஆசிரியர்கள் பாடத்திட்டத்தை பூர்த்தியாக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அதனால் அவர்கள் கருத்துப் பரிமாறல்களுக்கென நேரம் ஒதுக்குவதில்லை. இன்று அது முற்றாகவே ஒழிக்கப்பட்டு விட்டது. மாணவர்களுடன் ஆசிரியர் மனம்விட்டு பேசும் போதுதான் அவன் பீதியிலிருந்து விலகி விளங்காதவற்றை கேட்டுப் படிக்கும் நிலைக்கு மாறுவான். கேட்டுப்படிப்பதிலும் பார்க்க பார்த்துப்படிப்பது திறம். அதிலும் செய்து பார்த்து படிப்பது மிகத் திறம் என்றோர் சீனப் பழமொழியுள்ளது. செய்கை முறைகள் (PRACTICAL) இன்று உயர்தர வகுப்பில் கூட இல்லை. இதுவே இன்று மாணவர்களிடையே விஞ்ஞான அறிவு இல்லாமல் போனதற்கு முக்கிய காரணமாகிறது. பல பாடசாலைகளில் ஆய்வு கூட (LAB) வசதி இல்லை. தேவையான உபகரணங்கள் இல்லை. இருந்தாலும் அவற்றை செய்து காட்டுவதற்கு ஆசிரியர்களுக்கும் ஆளுமை இல்லை.

மேலும் வகுப்பறையிலே பாடங்களை செய்யவிட்டு உடனுக்குடன் அவற்றைப் பார்த்து திருத்துதல் முன்னைய காலங்களில் இருந்தது. ஆனால் இன்று அது அறவே இல்லாது போய் விட்டது. அப்படி உடனுக்குடன் மாணவர் முன்னிலையில் பார்க்கும்போது அவர் எந்த இடத்தில் பிழை விடுகிறார் என்பதை புரிந்து கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் முடியும்.



யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குணரத்தினம்

கேள்வி: மாணவர்கள் சாதாரண தரம் சித்தியடைந்ததும், தமக்கான கல்வித்துறையை எந்த அடிப்படையில் தெரிவு செய்வதாக நினைக்கிறீர்கள்?

பதில்: சாதாரணதரம் சித்தியடைந்ததும்மாணவர்களினதும், பெற்றோரினதும் இலக்கு பல்கலைக்கழகத்தை நோக்கியதாகவே உள்ளது. இதனால் சமூகத்தில் மதிப்பு மிக்க ஓர் அந்தஸ்து கிடைக்கும் என கருதுகின்றனர். இந்நிலையில் பிள்ளைகளின் விருப்பிற்கு மாறாக பெற்றோர் தாம் விரும்பும் துறைகளில், அதாவது மருத்துவம், பொறியியல், சட்டம் போன்ற துறைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அதனையே கற்குமாறு "அதி உந்துதல்" (BIG PUSH) கொடுக்கின்றனர்.

இதேவேளை பாடசாலைகளுக்கிடையில் நிலவும் போட்டி நிலையும் இதற்கொரு காரணமாகிறது. அவைகள் கூடுதலான மாணவர்களை தத்தமது பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதையே குறியாகக் கொண்டுள்ளன. இதைத் தமது சாதனையாகவே பாடசாலைகள் கருதுகின்றன.

கேள்வி: அவர்களுடைய தெரிவு எவ்வாறு அமைதல் மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என எண்ணுகிறீர்கள்?

பதில்: மாணவர்களது தெரிவு அவரவர் "சிந்தனா சக்திக்கு" ஏற்ப அமைதல் வேண்டும். மாறாக மற்றையோரது வற்புறுத்தலாக அது இருந்து விடக் கூடாது. வற்புறுத்தலின் மத்தியில் அமையும் கல்வியால் மாணவர்களது எதிர்காலம் மழுங்கடிக்கப்படுவதை காண முடிகிறது. இதனாலேயே இன்று எமது பெறுபேறுகளும் வீழ்ச்சி கண்டு வருகின்றன. உயர்தரப் பரீட்சைக்கு வருடந்தோறும் ஒரு லட்சத்து அறுபத்தேழாயிரம் பேர் வரை தோற்றுகின்றனர். இவர்களில் 50 ஆயிரம்பேர் பல்கலைக் கழக தகுதி பெறுகின்றனர். இதிலும் எண்ணாயிரம் பேரே நாடு பூராவும் பல்கலைக்கு தெரிவாகின்றனர். இதில் யாழ் பல்கலைக்கழகத்திற்கு போதியளவு வெற்றிடம் இருந்தும் மானியங்கள் ஆணைக்குழுவினால் 800 ற்கும் குறைவானோரே சகல பீடங்களுக்கும் அனுமதிக்கப்படுகின்றனர். இவற்றை மனதில் கொண்டே மாணவர்கள் தமது உயர்கல்வியை தொடங்குவது சாலப்பொருந்தும் என கருதுகிறேன்.

கேள்வி: பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு உங்கள் ஆலோசனை என்ன?

பதில்: இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர் சேவை, எழுதுவினைஞர் சேவை, மின்னியல், தொழில்நுட்பம், அபிவிருத்திபோன்ற துறைகளில் பெருமளவு வேலைவாய்ப்புகள் உள்ளன. இருந்தும் மாணவர்கள் ஒரு சில துறைகளை மட்டுமே நோக்காகக் கொண்டு கல்வியைத் தொடர்கின்றனர். இதனால் பெரும்பாலான வேலைகளுக்கு தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கமுடியாதுள்ளது.

ஆனபடியால் பல்கலைக் கழக அனுமதி கிடைக்காதவர்கள் தொழில் நுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக் கழகம், இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவற்றில் கற்பதன் மூலம் எதிர்காலத்திற்கு அத்திவாரம் இட்டிடலாம் என எண்ணுகிறேன்.

கேள்வி: இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில் கல்வி கற்கும் "டிப்புளோமா கற்கைநெறி" அவர்களுக்கு வேலையை பெற்றுக் கொடுக்குமா அன்றி பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோரைத் திருப்திப் படுத்தும் ஓர் வழியா?

பதில்: 1987 ஆம் ஆண்டளவில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோருக்கு பிராந்திய கல்லூரிகள் (REGIONAL COLLEGES) அமைக்கப்பட்டு அதன்மூலம் கல்வி வாய்ப்பை வழங்குவதே அரசின் நோக்கமாகும். இதன் அடிப்படையில் அமைந்ததே இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி (A.U.C.) ஆகும். ஆனபடியால் இதில் பட்டம் பெறும் மாணவர்களுக்குரிய வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது அரசின் பொறுப்பாகும். மாறாக நீங்கள் கேட்பதுபோல் திருப்திப்படுத்தும் வழியாக கொள்ள முடியாது.

தற்போது அங்கு முதல் இரு வருடங்களையும் பூர்த்தி செய்து அதிகூடிய புள்ளிகளைப் பெறும் சில மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர வாய்ப்பளிக்கப்பட்டு பட்டதாரி கற்கை நெறிக்கு அனுமதிக்கும் திட்டம் மானியங்கள் ஆணைக்குழுவால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

கேள்வி: யாழ் தொழில்நுட்பக் கல்லூரி பற்றி...

பதில்: குறிப்பிட்ட நேரங்களில் பரீட்சைகள் நடைபெறாமையால் மாணவர்கள் விரக்தியடைந்த நிலையிலேயே காணப்படுகின்றனர். போதியவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. பயில்வோருக்கு சான்றிதழ்கள் காலம் கடந்து வழங்கப்படுகின்றபோதிலும் சம்பந்தப்பட்ட துறைகளில் வினைத்திறனும் தொழில் சிறப்புத் தேர்ச்சியும் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இதனால் இங்கு குறிப்பிட்ட சில தொழில் நுட்ப துறைகளில் வேலை வாய்ப்பு இருந்தும் அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முடியாதுள்ளது. இந்நிலை மாற்றியமைக்கப்பட்டு சகல துறைகளும் விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

கேள்வி: பாடசாலை கல்வியில் சிறந்த பெறுபேற்றைப் பெறும் மாணவர்கள் சிலர் பல்கலைக்கழக கல்வியில் பின்தங்குவது ஏன்?

பதில்: பாடசாலைக்கும் பல்கலைக் கழகத்திற்கும் இடையில் கற்கும், கற்பிக்கும் முறைகளில் பல வேறுபாடுகள் உள்ளன. கீழ் வகுப்புகளில் ஆங்கிலத்தில்தேர்ச்சி இன்மையால்கற்பதில்பலசிக்கல்களை அவர்கள் எதிர்நோக்குகின்றனர். அத்துடன் கீழ் வகுப்பில் பல்கலைக்கழகம் புகும் நோக்குடன் போட்டி போட்டு கற்கின்றனர். பின்பு இங்குவந்ததும் அப்போட்டி முடிந்து விட்டது. இனி என்ன நான் பட்டதாரிதானே என்ற நினைப்பு அவர்களுக்கு வந்து விடுகிறது. விஞ்ஞான துறையைப் பொறுத்த வரையில் ஒழுங்கும் ஆய்வு கூட செய்முறைகளும் முக்கியமானவை. இவற்றை ஒழுங்காக கடைப்பிடிக்காத மாணவர்களுக்கு கல்வி ஓர் சுமையாகவே இருக்கும். விஞ்ஞான பீட மாணவர்களில் பெரும்பாலானவர்கள் "ரியூட்ஸ்" (TUTES) எழுதுவதில்லை. புள்ளிகள் வழங்க முற்பட்டால் பார்த்து எழுதுகின்றனர் என்றார்.

கேள்வி: பல்கலைக் கழகம் ஆராய்ச்சிக்குரிய இடமாகஇருக்கின்றபோதிலும் யாழ். பல்கலைக் கழகம் ஏன் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதில்லை?

பதில்: ஆராய்ச்சிகளைமேற்கொள்வதற்கு அமைதியான சூழ்நிலையும் போதியளவு உபகரணங்களும் தேவை. இன்றைய சூழ்நிலையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வது கடினமானதே. அத்துடன் போதியளவு நிதியை அரசுவழங்குவதில்லை. மிகக் குறைந்த அளவையே வழங்குவதால் அவற்றுக்கு மாணவர்களுக்கு பயிற்சி வழங்கக்கூடியளவிற்குரிய உபகரணங்களையே வாங்கக் கூடியதாகவுள்ளது. இருந்தும் சில சிரேஷ்ட விரிவுரையாளர்கள் வெளிநாடுகளில் காலத்திற்குக் காலம் ஆய்வுகளை வெளியிட்டு வருகின்றனர்.

கேள்வி: மூளைசாலிகள் வெளியேறாதிருக்க நீங்கள் கூறும் வழி என்ன?

பதில்: யாழ்.பல்கலைக் கழகக் கல்வி சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தரத்தில் இருப்பதால் இங்கு பட்டம் பெற்றோர் மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்கின்றனர். இவ்வாறு சென்றவர்கள் வெளிநாடுகளில் தமது கல்வியை முடித்ததும், மேற்குலக நாடுகள் இவர்களுக்கான சகல வசதிகளையும் கொடுத்து தம்வசப் படுத்திக் கொள்கின்றனர். இதனால் சகலவசதிகளும் கிடைத்ததும் இவர்கள் இங்கு வர விரும்பாது அந்த நாடுகளிலேயே தமது சேவைகளை வழங்கி வருகின்றனர். இத்தகையோரில் பத்து வீதமானோராவது இங்கு வந்து தமது சேவையை வழங்க முன்வந்தாலே பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதி தேவையாவது பூர்த்தியாகிவிடும் என நம்புகிறேன்.

**சந்திப்பு:**
**சசிகரன் - ரமேஸ்**

எமது நாட்டவர்களே இன்று லண்டன், ஜேர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளில் சிறந்த விஞ்ஞானி

(27ஆம் பக்கம் பார்க்க)

**ஜெயா வைண்டிங்வேக்ஸ்**

இல. 54, இளங்கோ வீதி,
யாழ்ப்பாணம்.

மின்பிறப்பாக்கி, நீர் இறைக்கும்
இயந்திர கொயில், டைனமோ
மற்றும் சகல விதமான
வைண்டிங் வேலைகளும்
தரமாக செய்து கொள்ள நாடுங்கள்.

---

**புதிய ராதிகா**

**நகை மாடம்**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

189, சந்தோசம் வீதி, (கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

---

**சாளரம்**

**இளையோர் திங்கள் இதழ்.**

வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

---

காஞ்சிபுரம், தஞ்சாவூர், மணிப்புரி மற்றும்
சகலவிதமான சாறி வகைகள், பட்டு
வேட்டிகள், சேட்டிங் - சூட்டிங் மற்றும்
புடைவைத் தினிசுகளையும் தெரிவு
செய்ய சிறந்த ஸ்தாபனம்.

**ச. லிங்கநாதன்**

**வண்ணச் சோலை**

13-14, மேஜர் சோதியா தெரு,
(பெரியகடை வீதி)
யாழ்ப்பாணம்.

---

**இதயம் இனிக்கும் 6 ஆம் ஆண்டில் ஈழநாதம்**

---

**துர்க்கா**

**கடைச்சல் தொழிலகம்**

இல. 39, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: **நா. நாதன்**

---

**காபிலா காலணியகம்**

**இல. 4, சந்தோசம் தெரு,**
(கஸ்தூரியார் வீதி)
**யாழ்ப்பாணம்.**

KABILA
**SHOE PALACE**

---

**GNANAMS**
Photographer
and Block Makers

301, *Clock Tower Road,*
*Jaffna.*

---

**க. செ. கைலாசம்பிள்ளை**
மருந்துச்சரக்கு வியாபாரம்

76, சோதியா தெரு (பெரியகடை)
யாழ்ப்பாணம்.

# ஈழத்தில் தமிழ் உரைநடையின் வளர்ச்சி

பாலநடராஜன்

தமிழ் மொழியில் உரை நடை இலக்கியத்தின் வளர்ச்சி ஐரோப்பியரின் வருகைக்கு பின்னரே செழுமை பெற்றது. சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலே பண்டைக்கால உரைநடைகள் சிலவற்றைக் காணக் கூடுமாயினும்,

''பாட்டிடை வைத்த குறிப்பினாலும்
பாவின்று எழுந்த கிளவியானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் என்று
உரைநடை வகையே நான்கென மொழிய'' என்று

தொல்காப்பியர் நான்கு வகையான உரைநடைகளை இனங்காட்டியுள்ள போதும், ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்பாக உரைநடையில் மட்டும் எழுதப்பட்ட நூலொன்றும் தமிழ் மொழியில் வெளிவந்ததாக இல்லை. வீரமா முனிவர் எனப்படும் கொன்ஸ்டன்டைன்ஜோசப்பெஸ்க் என்னும் இயற்பெயருடைய ஐரோப்பிய கத்தோலிக்க மத குருதான் (இவரது காலம் கி.பி. 1680 - 1747 ஆகும்) தமிழ் மொழியில் முதல் முதலாக உரைநடைநூல்கள் எழுதியவர் என்று அறியப்படுகிறது. அதன் பின்னரே தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் உரை நடையில் நூல்கள் எழுதப்படலாயிற்று. ஐரோப்பியர்களின் வருகையும், அச்சு இயந்திரங்களின் அறிமுகமும் உரைநடை வளர்ச்சிக்கும் செழுமைக்கும் ஏதுக்களாயின.

## ஆரம்ப கால தமிழ் உரைநடை

ஆரம்பகால தமிழ் உரைநடையில் தனித்தமிழ் மட்டுமன்றி சமஸ்கிருத மொழியும், கிரந்த எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனை மணிப்பிரவாள நடை என்பர். இந்த வகையில் 1109 இல் விசயபாகுவினால் எழுதப்பட்ட சிலாசனம் தான் ஈழத்தின் முதலாவது உரைநடை எனக் கூறப்படுகிறது. 12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதான பொலநறுவைக் கல்வெட்டு இதற்கு அடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இக்கல்வெட்டில் காணப்படும் மெய்யெழுத்துக்களுக்கு புள்ளியிடப்படவில்லை. இரட்டைக்கொம்புகளுக்கு பதிலாக அடுத்தடுத்த இரு ஒற்றைக் கொம்புகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் சமஸ்கிருத மொழிச் சொற்கள் கிரந்த எழுத்துக்களிலேயே பொறிக்கப்பட்டு இருக்கின்றது. இதே காலப் பகுதியை ஒத்ததாக யாழ்ப்பாணத்திலே எழுதப்பட்ட கல்வெட்டில் 'என்றும்' என்னும் சொல்லை பயன்படுத்தி வசனம் நீட்டப்படுவதையும், யாழ்ப்பாண வழக்கில் காணப்படும் சிறப்பு சொற்கள் கையாளப்பட்டிருப்பதையும் காணலாம்.

## ஒல்லாந்தர் கால வசனநடை

போர்த்துக்கேயரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் 1737 இல் அச்சு இயந்திரங்களைக் கொண்டு வந்தனர். எனினும் 1707 இல் வெளியிடப்பட்ட ''தேச வழமைச் சட்டங்கள்'' என்னும் நூலே ஈழத்தின் முதலாவது தமிழ் உரை நடை நூல் எனலாம்.

ஒல்லாந்தர் கால உரை நடை பொதுவாக அனுமான் வால்போல நீண்டதாகும். 'ஆனாலும்', 'ஆயினும்', 'அன்றி', 'என்கிலும்' போன்ற இடைச்சொற்களையும், வினை எச்சங்களையும் இணைத்து வசனம் நீட்டப்படுவது அக்கால மரபாக இருந்துள்ளது. புணர்ச்சி விதிகள் அதிகம் கவனிக்கப்பட்டுள்ளது. வழக்கிலுள்ள சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒல்லாந்த மொழிச் சொற்கள் தமிழ்மயமாக்கப்பட்டிருக்கிறது.

## ஆங்கிலேயர் கால வசனநடை

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழியின் உரை நடையில் பாரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. 1736 இல் யாழ்ப்பாண வைபவ மாலையை எழுதிய பண்டத்தெருப்பு மயில்வாகனப் புலவனாரின் உரைநடை அலாதியானது. அவை நீண்ட வசனங்களாக இருக்கின்ற போதும் போர்த்துக்கீச, ஒல்லாந்த மொழிச் சொற்களைத் தவிர்த்து பேச்சுத்தமிழ் பயன்படுத்தப்பட்டு இருக்கும். அத்துடன் 'இக்காலத்தில்' என்பது போன்ற காலத்தை உணர்த்தும் சொற்களும், 'அது', 'இது', 'உது' என்பது போன்ற சுட்டுப் பெயர்களும் இவற்றில் காணப்படும். 'இப்படி' 'இவ்வாறு' 'இங்ஙனம்' என்ற சொற்களைப் பாவித்து வசனங்களை தொடங்குவதையும்; பெயரெச்சம் வினையெச்சங்களை பயன்படுத்தி வசனங்களை நீட்டிச் செல்வதையும் இக்கால வசன நடையின் சிறப்பு அம்சங்கள் எனலாம்.

## உதயதாரகையின் அறிமுகம்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்பட்ட முதலாவது தமிழ் செய்திப் பத்திரிகை 'உதயதாரகை' ஆகும். கத்தோலிக்க திருச்சபையினால் நடத்தப்பட்ட **Morning Star** பத்திரிகையும் இதே காலப் பகுதியிலேயே வெளிவந்து கொண்டிருந்தது. உதயதாரகை அறிமுகப்படுத்திய உரை நடை செய்திகளை சொல்வதுடன் மட்டும் நிற்கவில்லை. செய்தியைப் பற்றிய விபரணங்களை உள்ளடக்கியும், ஆசிரியரின் சொந்தக் கருத்துக்களை சேர்த்தும், பேச்சு வழக்கு சொற்களை பயன் படுத்தியும் இந்த உரைநடை எழுதப்பட்டிருக்கிறது. 'ஆரோ வாணம் விட இடையில் நின்ற மட்டுவில் ஒருவன் பட்டான். மாப்பிள்ளைக் குருக்கள் பட்டார். செட்டியில் ஒருவன் பட்டான். சேதர் தன் மகனும் பட்டான்' என்பது போல பழமொழிகளை இடைச் சொருகியதாகவும் உதய தாரகை செய்திகளை எழுதியது. இதே உரைநடை இப்போதும் கையாளப்படுவதில்லை என்பது தெரிந்ததே. இதற்கு பிற்காலங்களில் வந்த தமிழறிஞர்கள் பலரும் தமிழ் உரைநடையை வளர்த்தெடுத்தமையே காரணமாகும். இவ்வாறு தமிழ் உரைநடையை வளர்த்து எடுத்தவர்களில் ஆறுமுக நாவலர் மிகவும் குறிப்பிடத்தக்கவர்.

## நாவலரின் வசனநடை

''வசனநடை கைவந்த வல்லாளர்'' எனக் குறிப்பிடப்படும் நாவலர் எழுத்துக்களை எண்ணி எழுதும் ஆற்றல் மிக்கவர். அவரது வசனநடை பல்வேறு சிறப்புக்களை உடையது. ஓசைநயம், சொற்களை செட்டாக பயன்படுத்தும் தன்மை, வசனங்களின் அமைப்பு, வசனங்களை ஒன்றுடனொன்று இணைக்கும் லாவகம், வசனங்களின் ஊடாக காட்சிப் படிமம் ஒன்றை தோற்றுவித்தல் என்பன நாவலரின் வசனநடையில் இலகுவாக

> **செய்யுண்டை வாய்ந்த நக்கீரர் உரைநடையும், விளக்கங் குறைந்த இளம்பூரணமும், கட்டுரைச் சுவை செறிந்த சேனாவரையரது இலக்கண நடையும், தங்கோணிறுத்தும் நச்சினார்க்கினியர் சொன்னடையும், நாவலரின் வசனநடையில் வந்து முடிகிறது.**
>
> - சபாபதி நாவலர்.

கண்டுகொள்ளக் கூடிய சிறப்புஅம்சங்களாகும். பின்வருவனவற்றை நுணுகி ஆராய்வதன் மூலம் நாவலரது வசனநடையின் சிறப்புக்களை உணர்ந்து கொள்ள முடியும். அறிவு, அருள், அடக்கம் என்பது போல அடுக்கிச் செல்லுதல்; தன்னுயிர் போல மன்னுயிரோம்பிய என்பது போல புணர்த்திக் காட்டுதல்; தக்கிண பூமியிலே திருவவதாரஞ் செய்தார் என்பது போல பொருத்தமான அடைமொழியை சொருகுதல்; வல்லினஎழுத்துக்களைகுறைத்துமெல்லின எழுத்துக்களை கோர்வையாக்குதல்; அஃதாவது என்பது போல மாத்திரைகளை நீட்டுதல்; என்பன நாவலர் தமது வசனநடையில் ஓசைநயம் உண்டாக்குவதற்கு கடைப்பிடித்த உத்திகளாகும்.

> **அனுமான் வால் போல நீண்ட வசனநடைக்கு பதிலாக தனி வினைமுற்றுக்களே போதுமானதாகி விடுகிறது. விபரணங்களாகவும், எண்ணக் கருத்துக்களாகவும் வசனம் விரிவடையும் தன்மை குறைந்துவருகிறது. கருத்துச் செறிவுக்கு முதன்மை தருவதாய் பொருள்உணர்த்தாத எந்தச்சொல்லையும் விலக்குவதாய் நவீன தமிழ் உரைநடை கணனி யுகத்தினுட் பிரவேசிக்கிறது.**

மேலும் பலபொருளைக்குறிக்கும்ஒருசொல்லை பயன்படுத்தி கருத்து மயக்கம் ஏற்படுவதை தவிர்ப்பதும், ''அறம்வளர மறம் தேயும்'' என்பது போல மறுதலைச் சொற்களைக் கையாண்டு கருத்தை நிலைநிறுத்துவதும் நாவலரின் வசனநடைகளில் கவனிக்கத்தக்க அம்சங்களாகும்.

அத்துடன் நாவலர் பயன்படுத்திய வசனநடையின் மற்றுமொரு சிறப்பு வசன அமைப்புக்கள் ஆகும். ''வெயில் நன்றாக எறிக்கிறது. தாகத்தினாலே நாக்கு வரண்டு போயிற்று'' என்பது போல தனித்தனியான சிறு சிறு வசனங்கள் ஒருவகை. ''பல் விளக்கி, நாக்கு வழித்து, வாய் கொப்புளித்து, முகம் கைகால் கழுவி, ஈரம் துவட்டு'' என்பது போன்ற தொடர் வசனங்கள் மற்றுமொருவகை.

''எல்லாவறிவும்எல்லாமுதன்மையும், எல்லாவநுக்கிரகமும் உடைய முழுமுதற் கடவுள் தாம் ஒருவரேயாய் பசுக்களாகிய ஆன்மாக்களெல்லாந் தமக்கு என்றும், உடைமைப்பொருள்களேயாகத்தாம் என்றும் உடையவராகவே நின்று பசுபதி எனப்படும் சிவபெருமான் பிரபஞ்சம் எங்குமாகி நீக்கமற வியாபித்து நிற்பர்'' என்பது போல மிக நீண்ட வசனங்கள் இன்னுமொரு வகை. ஆக நாவலரது வசனநடையில் ஒரேயளவுடைய வசனங்கள் பெரும்பாலும் இருப்பதில்லை. நீண்டும் சிறுத்தும் வரும். எனினும் ஒன்றுடனொன்று தொடர்புடையதாக இருந்து பொருளை நன்கு உணர்த்தும். இன்னும், ஆதலால், ஆயினும், மேலும், அன்றியும், இனி, இங்ஙனமாக, இவ்வாறே என்பன போன்ற இடைச் சொற்களை பயன்படுத்தி வசனங்களை ஒன்றுடனொன்று இணைப்பதும், பொருள் நன்கு புலப்படும் வகையில் வசன அமைப்பை பேணுவதும் நாவலரிடம் காணக்கூடிய சிறப்பு அம்சங்களாகும். உதாரணமாக ''வாளைஉருவிக்கொண்டுபோனான்'' என்பதையே நாவலர் ''உருவிய வாளொடு போனான்'' என மெய்ப்பாடு தோன்றும் வகையில் குறிப்பிட்டிருப்பதைக் கொள்ளலாம்.

நாவலர் தொடக்கி வைத்த வசனநடையின் காரணமாக தமிழ் பண்டிதர் வீட்டுப்படிகளில் இருந்தும் இறங்கி வந்தது. நாவலர் காலத்தவரான சி. வை. தாமோதரம் பிள்ளை கையாண்ட உரைநடையில் கடும் புணர்ச்சிகளை விலக்கி சொற்களை அரைகுறையாக மட்டும் புணர்த்தி எழுதியிருப்பதைக் காணலாம். உதாரணமாக ''ஆதலாற் தமிழாராய்ச்சியிற் புகுவோர்க்கு இந்நூல் இன்றியமையாப் பெருஞ் சிறப்பிற்றாயிற்று'' என்ற சி. வை. தாவின் வசனத்தைக் கொள்ளலாம். ''ஆதலால் தமிழ்'' என்று முற்றாகப் பிரிக்காமலும், ''ஆதலாற்றமிழ்'' என்று முற்றாகப் புணர்த்தாமலும் எழுதிய சி. வை. தாவின் உரைநடையை ''முட்டுக்காய்'' என்று எள்ளி நகையாடியோரும் உளர் என்பது குறிப்பிடத்தக்கது.

இனி இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தமிழ் மொழியின் உரைநடையை வளர்த்த சிலரை இனங்காட்டி இதனை நிறைவு செய்யலாம். அடுக்கு மொழியாக அமையாத அதே வேளையில் இசைபட சொற்களை அடுக்கிச் செல்லும் சுவாமி விபுலானந்தரின் வசனநடை இதில் குறிப்பிடத்தக்கது. அயன்படைத்த படைப்பினும் பார்க்க நயம் படைத்த மெல்லி நல்லாரையும் ஆடவரையும் உருப்படுத்தியுதவும் நாடகக் கவியை யென்னென்று புகழ்ந்தேத்துவதென உன்னுமிடத்து செக சிற்பியார் எனப் புகழ்ந்து போற்றுதல் சிறப்புடைத்தாமெனப் புலப்படுகின்றது. இது மதங்கசூளாமணி நூலின் முன்னுரையில் சுவாமி விபுலானந்தர் குறிப்பிட்டுள்ள ஒரு வசனமாகும். இதிலுள்ள ஓசை நயம் படிப்போர் கவனத்தில் பதியக்கூடியது ஒன்றாகும்.

எதிர்மறை வடிவத்தில் வசனத்தை எழுதிச் செல்வதற்கு உதாரணமாக சோமசுந்தரப் புலவரது வசனநடையைக் கொள்ளலாம். உயிரிளங்குமரன் நாடகத்தில் சுப்பிரமணிய முனிவர் என்னும் பாத்திரத்திற்கு ஊடாக பேசப்படும் வசனம் இதற்கு ஒரு தகுந்த எடுத்துக்காட்டு ஆகும். ''மகனே! நீ வெள்ளியங்கிரியிலே இருக்கின்ற நீலகண்ட ராசன் மகனில்லையோ? சிவகாமித் தாயார் உனது தாயல்லவோ? பேரின்ப வல்லியை நீ காதலித்து இருந்ததில்லையோ?'' இவ் வசனத்தை நுணுகிப் பார்க்கும் போது எதிர்மறையான கேள்வி வடிவத்தில் எழுதிச் சென்று கூற முற்படும் செய்தியை விளக்கும் தன்மையை அவதானிக்கலாம்.

எளிமையான சொற்களை குறைந்த அளவில் பயன்படுத்தி சிறு சிறு வசனங்களாக அடுக்கிச் செல்வதற்கு உதாரணமாக வே. க. நவரத்தினத்தின் உரைநடையைக் காட்டலாம். மறுநாட்காலை நான் யாழ்ப்பாணத்திற்குப் பிரயாணமானேன். நான் இருந்த பெட்டியில் முனியாண்டி என்பவனும் இருந்தான். நான் அவனோடு தந்திரமாக நட்புப்பூண்டு, ''நீ எங்கு போகிறாய்?'' என்று கேட்டேன். அவன், 'நான் யாழ்ப்பாணம் போகிறேன்' என்று கூறினான். நான், 'நீ இதற்கு முன்னும் யாழ்ப்பாணத்திற்கு போயிருக்கின்றாயா?' என்று வினவினேன். 'ஆம். நான் அங்கு அனேகந்தரம் போயிருக்கின்றேன். யாழ்ப்பாணம் என் பிறந்த தேசம் போல் உள்ளது' என்று கூறினான். உரையாடலாக வளர்த்துச் செல்லப்படும் இவ் வசனநடையில் எளிமையான சொற்களையும், பிசிறலற்ற தன்மையையும் கண்டுகொள்ள முடியும்.

மணி மணியாக சொற்களை அடுக்கிச் செல்லும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் வசன நடையில் மக்களின் பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் தூய தமிழாகி மெருகேறி வருவதைக்

(23ஆம் பக்கம் பார்க்க)

# ஈழநாதத்தின் அகம் பொலியும் ஆறாம் ஆண்டு

சுபமுகூர்த்த பட்டு புடைவைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்

**பேரரசி**
**வண்ணச் சோலை**
**(மகாராணி)**
50, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

புடைவை வகைகள், பட்டுவேட்டி,
கூறைச்சேலை மற்றும்
அழகு சாதனப் பொருள்கள்

யாவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்

**வைகுந்தம்**
**பல்பொருள் அரங்கம்**
17, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

உயர்தர
திருமண பட்டுப் புடைவைகளுக்கு
தலைநகரில் தலைசிறந்த
ஸ்தாபனம்

**காவேரி**
**பட்டுச்சோலை**
48, சோதியா தெரு, (பெரியகடை)
யாழ்ப்பாணம்.

★ அழகுசாதனப் பொருள்கள்
★ சிறுவர் சைக்கிள்கள்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ அன்பளிப்புப் பொருள்கள்

யாவும் நிதான விலையில்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்:-

**ராஜன் அழகு மாடம்**
68, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

நவநாகரிக புடைவை வகைகளுக்கு
நாடவேண்டிய கைராசியான ஸ்தாபனம்

)(

**கணேசானந்தா**
**பட்டு மாடம்**
15, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

ஆறாம் ஆண்டில்
காலடி எடுத்து வைக்கும்
ஈழநாதம் பத்திரிகைக்கு
எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்
"தடைகளை தாண்டுவதற்காக
கற்பதல்ல கல்வி"
"தடைகளை உடைத்தெறிவதற்காகக்
கற்பதே கல்வி"

**BECON**
நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்

**ஆசீர்வாதம்**
**வர்த்தக நிலையம்**
61, பெரியகடை
கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

பாடசாலை உபகரணங்கள்
காரியாலய காகிதாதிகள்
மொத்த, சில்லறை வியாபாரிகள்

30 வருட சேவையில்

**மொறாயஸ்**

கண்ணாடிகளைப் பெறவும்
பற்களைக்கட்டிக் கொள்ளவும்
50, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# தேசிய விடுதலைப் போராட்டம் வழிச்செலுத்தும் சமூகமாற்றங்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது - தனியே எமது இனத்தினதும், மக்களினதும் அரசியல் விடுதலையை வென்றெடுக்கும் வகையில் மட்டும் தனது பரிணாமத்தை கட்டுக்குள் வைத்திருக்கும் நிலை துரிதமாக மாற்றமடைந்து வருகின்றது.

எமது மண்ணினது விடுதலையோடு கூடிய மக்களின் சுதந்திரம் என்ற வரையறையையும் கடந்து - சமூக ரீதியான விழிப்புணர்வுகளையும், காலங் காலமாக எமது இனத்தை மூடி மறைத்திருந்த மாயத் திரைகளையும் கிழித்தெறிந்து மிகப் பெரியளவிலான பரப்பைக் கொண்டதாக விடுதலைப் போராட்டம் கூர்ப்படைந்தும் வருகின்றது.

எமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்கும் பிரதான நிலைப்பாடு ஒருபுறம் - எம்மை நாமே ஒரு புதிய சிந்தனைகளோடும் கருத்து நிலைகளோடும் ஆளாக்கி கொண்டிருக்கும் சமூகரீதியான மாற்றங்கள் மறுபுறம் - என்ற வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் புதிய அர்த்தங்களை பெற்று வருவதையும் காணக் கூடியதாயுள்ளது.

சாதியம் என்ற போலி உணர்வு நிலை மறைந்து வருதல் - ஆணுக்குப் பெண் சமமென்ற உணர்வு செயற்பாடும் - தனிமனித மற்றும் சமூக ஒழுக்கச் சிந்தனைகளும் செயற்பாடும் - வர்க்கநிலை தொலையும் கட்டம் - புதிய கல்விச் சிந்தனைகள் - அபரிமிதமான வளர்ச்சிகாணும் புதிய கலை இலக்கியங்கள் - பாரம்பரிய கலைகளுக்கு ஊக்குவிப்பு - தற்சார்பு பொருண்மியத்தில் ஆர்வம் ஆகிய துணைப் பரிமாணங்கள் இன்று சிறப்புப் பெற்றுள்ளன / பெற்றுவருகின்றன.

எமது சமூகத்தில் - ஆணிவேர் வரை ஊறியிருந்த சாதிய உணர்வுகளும் - பெண்ணடிமைச் சிந்தனைகளும் இன்று களையப்பட்டு வருகின்றன.

சமுதாய நிகழ்வுகளின் ஒவ்வொரு கட்டங்களிலும் - குறுகிய நோக்கம் கொண்ட பழமைவாதச் சிந்தனைகளின் பேரினால் - அடிக்கடி நினைவூட்டப்பட்டு வந்த சாதிய உணர்வுகள் ஒடுக்கப்பட்டு மறக்கப்பட்டு வருகின்றமையானது ஈழத்தமிழ் சமுதாய வரலாற்றில் மிகப் பெரும் திருப்பமாகும்.

சாதியம் என்ற போர்வையில் அடக்குவோன் - அடங்கி நடப்போன் என்றவாறான வர்க்கச்சிந்தனைகள் பலம் பெற்றிருந்த காலகட்டங்களோடு இன்றைய நிலையை நோக்கும்போது இது தெளிவாகத் தெரிகின்றது.

சமத்துவமான மனிதவாழ்வு என மேடைகளில் உச்ச தொனியில் குரல் உயர்த்தியவர்கள் - மறுபுறம் எதைச் சாடினரோ அதனை கீழ்த்தரமாக வளர்த்து விட்ட கைங்கரியங்களும் இந்த மண்ணில் ஒரு தசாப்தத்திற்கு முன்னர் நடைபெற்றதுண்டு.

சாதிய உணர்வுகளை வளர்த்துக் கொள்வதும் - அதன் வழிச்செல்வதும் நாகரிகமான செயல்களில் அத்தியாவசியமான ஒன்று எனக் கருதியவர்கள் வாழ்ந்த மண்ணும் இந்த மண்தான்.

இந்த வகையில் -அத்தகைய உணர்வுகளை சமுதாயத்தில் இருந்து மழுங்கடிக்கச் செய்வது என்பது விடுதலைப் போராட்டத்தினால் மட்டுமே சாத்தியமாகியதொன்றாகும்.

இன்று, எமது சமுதாயத்தில் சாதிய உணர்வுகளை கடந்து அரங்கேறிவரும் திருமணங்கள் இதற்கு கட்டியம் கூறுகின்றன - சாதியம் என்ற எல்லைக்குள் வாழ்ந்து வரும் சில போலிச் சிந்தனா வாதிகளுக்கும் அடிப்படைவாதிகளுக்கும் இந் நிகழ்வுகள் தகுந்த அறிவினைத் தந்தும் வருகின்றன.

ஆயினும் எமதுசமூகத்தில்இருந்து சாதிய உணர்வுகள் முற்று முழுதாக இன்னும் வேரறுக்கப்படவில்லைஎன்ற கருத்தும் நோக்கக் கூடியது.

ஆனால் விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தியுள்ள விழிப்புணர்வுகளினால் - புதிதாக மலரும் அடுத்த தலைமுறையிலாவது சாதிய உணர்வுகள் ஒட்டுமொத்தமாக களைந்தெறியப்பட்டு விடும் என்ற நம்பிக்கை சாத்தியமானதொன்றாகவே தென்படுகின்றது.

**தேசிய விடுதலைப் போராட்டம்- தனியே அரசியல் சுதந்திரத்தை நாடி நிற்கும் வரையறைக்குள் தன்னை கட்டுப் படுத்திக் கொள்ளாது சமூக ரீதியான விழிப்புணர்வுகளையும்- புதிய கருத்து நிலைகளோடு கூடிய சமத்துவமான சமுதாயமொன்றை உருவாக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது. இந்த வகையில் விடுதலைப் போராட்டம் தனது இலக்கை அடையும் போது- தமிழீழ சமுதாயம் புதிய புதிய சிந்தனைகளைக் கருக் கொண்ட சமூகமாக மாறி விடும் என்ற நம்பிக்கை வலுப் பட்டும் வருகின்றது.**

சாதிய உணர்வுகளைப்போலவே- சமுதாயத்தில் அகலக்கால் பரப்பியிருந்த பெண்ணடிமைவாத கருத்துக்களும் செயற்பாடுகளும் இன்று பெரியளவில் மாற்றம்கண்டுள்ளன / கண்டு வருகின்றன.

ஒட்டு மொத்த நோக்கில் பெண்களது இத்தகைய வளர்ச்சிக்கு அவர்களே காலாக இருப்பதும்/ இருந்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் போராட்டம் கூர்ப்படைந்த காலத்திற்கு முன்னைய நிலைகளோடு ஒப்பிடுகையில் - இன்று பெண்ணினம் கண்டுள்ள வளர்ச்சிப் போக்கு - தேசியத் தலைவர் பிரபாகரனின் கருத்துப் போக்கில் உதித்த எண்ணங்களால் வலிமைப்படுத்தப் பட்டதும்,

தமிழ்ச் சமுதாயத்தை பொறுத்த வரையில் - சிறுபராயம் முதல் ஆண் ஒருவனுக்கு மனதில் கருக்கொண்ட சிந்தனைப் போக்கில் - பெண் என்பவள் இரண்டாம் தரமானவளாகவே சித்தரிக்கப்பட்டாள். இந்த தனிமனித பாங்கு - சமூகத்திலும் அவளை இரண்டாந் தரமானவளாகவே சித்தரிக்க வைத்தது.

ரகுராம்

தாயாக, மனைவியாக, சகோதரியாக என்ற இன்னோரன்ன உறவுகளில் அவளை வைத்துப் பார்த்த ஆண் சமூகம் - அவளை நண்பி என்ற ஸ்தானத்தில் வைத்து கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவோ - அல்லது உணர்வுகளை பரிமாறிக் கொள்ளவோ ஏற்றுக் கொண்டதில்லை.

அடிப்படையில் தனக்கு பெண்ணை சமானமாக வைத்திருக்க எந்த ஆணும் உளப்பூர்வமாக விரும்பாதநிலையே தொடர்ந்தும் வந்தது.

ஆனால் - விடுதலைப் போரில் பெண்களின் பங்கிற்கு பின்னர் இந்த நிலை பெரிதும் மாற்றத்திற்குள்ளானது.

ஆணாதிக்க போக்கிலிருந்து விடுபட்டு சுயமாக பெண்கள் செயலாற்ற ஆரம்பித்ததும் - பெண் என்பவளால் இதை மட்டுமல்ல எதையும் செய்ய முடியும் என்ற உணர்வு நிலை ஆண்களுக்கு ஏற்பட்டது வெளிப்படையானது.

பகிரங்கமாகசொல்லப்போனால்- பிரமிப்போடு கூடிய ஆச்சரியத்தை இது தமிழ் சமுதாய ஆண்களுக்கு தந்தது. ஆண்டாண்டு காலமாக - ஒரே கருத்து நிலையில், அந்தக் கருத்து நிலைக்கு ஏற்பவே சமுதாயப் பார்வையைக்கொண்டிருந்த ஆண்கள் மட்டுமல்ல பெரும்பாலான பெண்களுக்கும் கூட யதார்த்தம் வியப்பைத் தந்தது.

இவர்களால் செய்ய முடியுமா? என்ற நிலை மாறி - இவர்கள் தான் செய்கிறார்கள் என்பதை சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையை தமிழ்ப் பெண்கள் தாங்களே உருவாக்கிக் கொண்டதும் கவனிக்கத் தக்கது.

பரம்பரை பரம்பரையாக-பழமைவாத கொள்கைகளின் பெயரில் - பெண்களை பீடித்திருந்த அடிமைச் சங்கிலிகளும், பண்பாடு - கலாசாரம் என்ற வட்டத்திற்குள் பெண்கள்மேல் போடப்பட்டிருந்த நிர்ப்பந்தங்களும் அழுத்தங்களும் உடைத்தெறியப் பட்டு வருகின்றநிலை இன்றுதோன்றியுள்ளது.

பெண் ஒருத்தியின் தனிப்பட்ட விடயங்களையும், அவளது விருப்பு வெறுப்புக்களை கடந்த தீர்வுகளையும் ஒரு ஆண்தான் தீர்மானிக்க வேண்டும் என்ற எமது இனத்தின் போலியானஉணர்வு சிதறடிக்கப்பட்டு வருகின்றது.

தனிமனித வாயிலாகவும், சமூகத்திலும் பெண்கள் எவரின் சார்பின்றியும் தனித்து இயங்கி வாழ முடியும் என்ற நிலையை தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் தந்திருக்கிறது.

இருந்தாலும் - மரபுவாத சிந்தனைகளின் வழியாலும், ஆணாதிக்கத்தின் வக்கிர உணர்வுகளாலும் பெண் வர்க்கத்தின் சுதந்திரம் என்பது முற்றுமுழுதாக கிடைக்கப் பெறவில்லை என்பதும் உண்மையாகும்.

சீதனம் என்ற பெயரினால் முதிர் கன்னிகளாக-சிறகொடிந்த பறவைகள் போல் பெண்கள் வீடுகளில் வலம் வருவது இன்றும் தீர்ந்தபாடாக வில்லை. மனதால் ஒருமித்த காதல் திருமணம் என்ற கட்டத்திற்கு செல்லும்போது சீதனக் கொடுமையினால் திருமணங்கள் நின்றுபோவதும் இங்கு நடந்தே வருகின்றது.

இதனைவிட - பெண் என்பவள் தனியே பாலியல் ரீதியான நோக்குக்காக மட்டும் படைக்கப்பட்டவள் என்ற ஆணாதிக்கத்தின் கீழ்த்தரமான வக்கிர உணர்வுகள் முற்றாக இன்னும் அழிந்தும்போய்விடவில்லை.

இத்தகைய நிலைமைகள் மாறும் போதே - பெண்விடுதலை என்பது யதார்த்தத்திற்கு வரும் என்பது திண்ணம். இதற்கு எமது தேசிய விடுதலைப் போராட்டம் வழிவகுக்கும் என்று நம்ப இடமுண்டு.

எமது விடுதலைப் போரின் இன்னொரு வழியில் - புதிய வகைகளில் பிரசவம் எடுத்து வரும் கலை இலக்கிய ஆக்கங்கள் - தமிழிலே எழுந்து வரும் கலை இலக்கிய ஆக்கங்களுக்கு புதிய பாதையை காட்டி நிற்கின்றன.

இந்த மண்ணின் கனன்றெரியும் வேட்கைகள் - கலை இலக்கிய ஆக்கங்களில் வீச்சு மிகுந்தவையாக பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

விடுதலைப் போராட்டத்தின் வழியே - நடந்தேறும் தியாகங்கள், சாதனைகள், வெற்றிகள், வேதனைகள், சோதனைகள் ஆகியவற்றை - எமது எதிர்கால சந்ததிகளுக்கு இனங்காட்டிச் சொல்லப் போகும் பதிவேடுகளாகவும் ஈழத்து கலை இலக்கியம் மிளிர்ந்து வருகின்றது.

இந்த மண்ணின் கள நிகழ்வுகளை நேரிடையாக அனுபவித்து உணர்ந்து எழுதப்படும் ஆக்கங்கள் - தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதி சேர்த்து நிற்கின்றன.

கடந்த ஒரு தசாப்தத்துக்கு முன்னர் சமூகத்தின் புறக்கோணங்களை படம் பிடித்து தந்த இலக்கிய மரபுகள் மாற்றம் பெற்று புதிய உத்வேகத்துடன் கலைப் படைப்புக்கள் உருவாகத் தொடங்கியுள்ளன.

வெறுமனே, வார்த்தை கோர்வைகளையும் அதற்கேற்றாற் போல இசைக்கோலங்களையும் தந்துவிடும் திரையிசைப் பாடல்களை விட,

- உணர்வு பூர்வமான கருத்துச் செறிவுள்ள, அதேசமயம் திரையிசைப் பாடல்களின் இசைக் கோலங்களை விட ஒருபடி அதிகமாகவே தரத்தைக் கொண்ட விடுதலைப் பாடல்கள் இன்று உருவாக்கம் பெற்றுள்ளன.

போர்க்கால இலக்கியம் படைப்பதில் - களத்தே நின்று போராடும் போராளிக் கலைஞர்கள் முதல் புதியதொரு மலர்வு கொண்ட தலைமுறை உத்வேகத்துடனும் உற்சாகத்துடனும் செயற்பட்டு வருகின்றது.

தங்களது பிறழ்ந்துபோன சிந்தனைகளுக்கு நடுவே - கண்முன்னே நடக்கும் நிகழ்வுகளை பதிவு செய்யத் தயங்கும் பிரபல கலைஞர்களையும் புத்திஜீவிகளையும் தவிர - வியப்பிற்குரிய கலைப் பாய்ச்சலொன்றை தரும் புதிய ஆக்ககர்த்தாக்கள் இருபத்தியோராம் நூற்றாண்டின் கலை வடிவங்கள் ஈழத்திலிருந்துதான் உருவாகும் என்ற திடநம்பிக்கையைத் தருகிறார்கள்.

இந்த வகைகளில் புற பரிமாணங்களை தன்னுள் அடக்கி நகர்ந்து செல்லும் விடுதலைப் போராட்டம் தனது இலக்கை பூரணமாக அடையும்போது - புதியதோர் சமுதாயம் ஒன்றை உருவாக்கித்தந்து விடும் கட்டமாகவும் அது அமையும்.

எமதுசமூகம் மாறிக்கொண்டிருக்கிறது. விடுதலைப்போராக வீசிக்கொண்டிருக்கும் வரலாற்றுப் புயல் எமதுமண்ணில்காலம் காலமாக நிலைத்திருந்த பழமைவாத விருட்சங்களை வேரோடு பிடுங்கி வீழ்த்தி வருகிறது. எமது மனக் குகையில் குடியிருந்த மூட நம்பிக்கைப் பேய்கள் விரட்டப்பட்டு வருகின்றன. எமது சமூகக் கருத்துலகில் புதிய பார்வை மலர்கிறது. புதிய விழிப்புணர்வு தோன்றி வருகிறது. சமூக உறவுகளில் புரட்சிகரமானமாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

-அனைத்துலக மகளிர் தினத்தை(1993)முன்னிட்டு தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் விடுத்த செய்தியிலிருந்து.

ஆறாம் ஆண்டிற்குள்
நுழையும் ஈழநாதமே
அரிய பல செய்திகளை
சுவையாகத் தரும் உன் சிறந்த
பணி தொடர எம் வாழ்த்துக்கள்

# யாழ். மா. பே. உ. சங்கம்

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

ஆறாம் ஆண்டில்
கால் பதிக்கும்
ஈழநாதமே! நீ
இன்று போல் என்றும் வாழி



# திருமாட்டி புடவைக் கடல்

இல: 122, இராசன் தெரு,
யாழ்ப்பாணம்.

## நவீன தமிழ்

தமிழ் தேசியக் கருத்தை எதிர்த்தவர்கள்.

° இரு பெரிய - மார்க்ஸிஸ பார்வை கொண்ட விமர்சகர்களான கைலாசபதியும் - சிவத்தம்பியும்- படைப்பிலக்கியத்திற்குமார்க்ஸிஸ சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். என்றவர்கள். இலக்கிய விமர்சனத் துறையில் முதலாளித்துவ மேனாடுகளில் பயிலப்படும் அளவு கோல்களை ஆதரித்தவர்கள்.

- இதைப் போலவே க. நா. சுப்ரமணியமும் தாக்கப்பட்டார்; இன்றும் விமர்சிக்கப்படுகின்றார்.

° தமக்கு சார்பாக உள்ள படைப்பாளிகளை உயர்த்தியும் - மற்றவர்களை தாழ்த்தியும் இவர் செயற்பட்டார்.

° பிராமணிய ஆதிக்கத் தன்மை காரணமாக பிராமணியர் தவிர்ந்த சில நல்ல படைப்பாளிகளைக் கண்டுகொள்ளத் தவறினார்.

° தமக்கு விருப்பமுள்ள படைப்பாளிகளின் படைப்புகளை பெரிதும் ஆராயாமல் 'பட்டியல்' போடுவதில் ஈடுபட்டார். அவர் போடும் பட்டியலில் அவரே அடிக்கடி மாற்றங்கள் செய்து வந்தார்.

இவற்றைவிட - 'முன்னர் திருக்குறள் இலக்கியம்இல்லை என்றவர் பின்னர் 80 களில் அதை மகத்தான இலக்கியம் எனக் கூறினார்' என்கிறார் ப. கிருஷ்ணசாமி.

'தமிழ் நாட்டு சந்தன மரத்தைப் பார்த்துக் கொண்டு ஆலிவ் இலை போல ஆகுமா இது? என்றும் கேட்பார். காவிரியாற்றங்கரையில் நின்றவாறு நயாகரா என்றால் நயாகரா தான் என்று சப்புக் கொட்டுவார் க. நா. சு. என தமிழ்நாடன் அவரின்மேலைத் தேய அக்கறையை விமர்சனம் செய்கிறார்.

'ஜெயகாந்தன் முற்போக்குக் கொள்கையை ஆதரிப்பவர். எனினும்- இவரது கதைகளில் முக்கால் வாசி முற்போக்குக்கொள்கைக்கு ஒத்து வராது' எனக்கூறி படைப்பை விட்டு, படைப்பாளியை எடை போட க. நா. சு. ஆரம்பித்து விடுகின்றார் என்ற குற்றச்சாட்டும் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டு இலக்கியவாதியான சுந்தரராமசாமி பல விஷயங்களில் க. நா. சுவுடன் ஒத்துப்போயிருக்கிறார். அவர் சொல்கிறார்-

'க. நா. சுவை இலக்கிய விமர்சகன் என்று கூறமுடியாது. உலக அரங்கில் இலக்கிய விமர்சகன் கலாசாரத் தளத்தின் உன்னத அறிவை நோக்கிப் பேசும் போது, க. நா. சு. குழம்பிச் சரியும் தமிழ் வாசகனை சபையாகப் பேச நேர்ந்திருக்கிறது. இவரை ஒரு இலக்கிய சிபார்சுக்காரன் என்று சொல்ல வேண்டும்'.

சுந்தரராமசாமியின் கருத்து - தமிழ்நாட்டின் நவீன தமிழ் இலக்கிய இயக்கத்தைச் சாடுவது போன்றே உள்ளது.

க. நா. சுவின் தவறான அணுகுமுறையிலிருந்து தமிழ் இலக்கிய விமர்சனத்தின் அளவு கோல்கள் மாற்றப்பட வேண்டும். தமிழ் இலக்கிய வளர்ச்சி ஏற்படுவது அதற்குப் பிறகுதான் சாத்தியமாகும் என க. நா. சுவின் விமர்சனக்கொள்கையை அடியோடு நிராகரிக்கின்றார் மாலன்.

இப்படியாக குற்றச் சாட்டுக்கள் சூடாக வெளிக்கிளம்பிக் கொண்டிருக்கின்றன.

ஒரு நல்ல படைப்பாளி எவ்வளவு தூரம் இலக்கியத்தைச் செழுமைப்படுத்த முடியுமோ அவ்வளவுதூரம் விமர்சகனும் இலக்கியத்தை உச்சநிலைக்கு உயர்த்திச் செல்ல முடியும் என கருதப்பட்டு வருகின்ற சூழலில் -

விமர்சகர்கள் படைப்பாளிகளுடனும் பத்திரிகைகளுடனும் - வாசகனுடனும், சக விமர்சகர்களுடனும் மோதிக் கொண்டே வந்தனர்; வருகின்றனர். இது விமர்சகர்களின் நோக்கத்தை சந்தேகிக்க வைக்கின்றது.

முற்போக்கு இலக்கியத்திற்கும் கைலாசபதிக்குமான பல ஆதரவுக் கருத்துக்கள் எழாமலும் இல்லை. ஏராளமான படைப்பாளிகள் தங்கள் எழுத்துமுயற்சிகளுக்கு அங்கீகாரம் வேண்டி கைலாசபதியை அணுகியுள்ளனர்.

'தமிழ்நாட்டு பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள், ஆய்வாளர்களின் போக்கில் ஒரு புதிய வரவேற்கத் தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கைப் பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோரின் வரலாற்று முறை - சமூக இயல் திறனாய்வுப் பாதை இவர்களைக் கவர்ந்து வருகிறது' என தி. க. சி. அகமகிழ்கின்றார்.

கைலாசபதி மாதிரி ஒரு விமர்சகர் இன்று தமிழ்நாட்டில் இருந்திருந்தால் தமிழ் எவ்வளவோ வளர்ந்திருக்கும் எனக் கூறி சமீபத்தில் தமிழகத்தில் சர்ச்சையைஏற்படுத்தினார் மாலன்.

க. நா. சு. பற்றியும் பல நல்ல கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. க. நா. சு வாடகை வீட்டில் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து கொண்டு தமது வாழ்வின் பெரும் பகுதியை நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அர்ப்பணித்தவர் என போற்றப்படுகின்றார்.

தமது விமர்சனத்தின்மூலம் நல்ல படைப்பாளிகளையும் படைப்புக்களையும் அடையாளப்படுத்தியவர். சிறுகதையும் நாவலும் புதுக்கவிதையும் வடிவமைப்பு விஷயத்தில் குழம்பிக் கிடந்த காலகட்டத்தில் அவற்றைஇயக்கங்களாக மாற்றிய பெருமை க. நா. சுவுக்கே உண்டு என அவர் புகழப்படுகின்றார்.

இலக்கியத்தின் உருவவாதி தான் என்பதை அவர் மறுக்கின்றார். 'எனக்கு உருவத்தை விட விஷயம்தான் ரொம்பவும்முக்கியம். ஆனால்- இலக்கியம் ஆவதற்கு உருவம் முக்கியம் என்பதும் தெரியும்' என்று பெங்களூரிலிருந்து வெளிவந்த 'படிகள்' இதழுக்கு (1984) அளித்த பேட்டியில் குறிப்பிடுகின்றார்.

தான் 'பட்டியல்' விமர்சகர் என்று குற்றம் சாட்டப்படுவதை அவர் நியாயப்படுத்த முனைந்துள்ளார்.

'ஒரு இலக்கியப்படைப்பை அக்குவேறு ஆணி வேறாக அலசுவதைவிட தரமற்றதை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டிய பெரும் பொறுப்பு என்னிடமும் - ஏன் ஒவ்வொரு தரமான வாசகனிடமும் இருப்பதாக நான் நினைக்கிறேன். இதனால்தான் தரமான இலக்கியத்தை பட்டியலிட்டுவிட்டு தரமற்றவற்றை கடுமையாகச் சாடும் முயற்சியில் இறங்கினேன்' என்கிறார் க. நா. சு.

(25ஆம்பக்கம் பார்க்க)

## தென்னிலங்கை

கட்டடங்கள்குறைவான வெலிஓயா, வவுனியா, மன்னார், கிளிநொச்சி பகுதிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பகுதிகளில் இராணுவம் புலிகள் மீது அழுத்தம் கொடுப்பின் புலிகள் குடாநாட்டை கைவிடவழி வகுக்கப்படும்.

குடாநாட்டின் மீதான தாக்குதல் நீண்ட காலத்திற்கு இழுபடும். கடந்தகால இந்திய சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் இதற்குச்சான்று. இதுவே பல மூத்த அதிகாரிகளின் சிந்தனையாகஉள்ளது.

கிழக்கில் உறுதியான நிலை ஏற்படுத்தப்பட்டு அப்பகுதி பாதுகாப்பை விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைத்துவிட்டு அங்கிருந்து இராணுவத்தை வடக்கிற்கு நகர்த்தலாம். அதிரடிப்படையினர் காடுகளினுள் நுழைந்து விடுதலைப்புலிகளை விரட்டலாம்.

கிழக்கை கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதன்மூலம் விடுதலைப் புலிகளின் விநியோகம் துண்டிக்கப்படும். கிழக்கில் படையினர் தொடர்ந்து கொடுக்கும் தொந்தரவு அங்கு புலிகள்நிரந்தரமாக முகாம் அமைக்க முடியாமற்செய்துள்ளது. புலிகள் காடுகளில் பலமிழந்து உள்ளனர். தாக்கி விட்டு ஓடவே அவர்களால் இயலும். இந்நிலையில் படையினருக்கு இரு வழிகள் உண்டு. ஒன்று குடாநாடு மீதான பாரிய படையெடுப்பு. மற்றையது வன்னிப்பெருநிலப்பரப்பில் படையினர் கட்டுப்பாட்டை விரிவாக்குவது.

குடாநாடு மீது பாரிய நடவடிக்கை மேற்கொள்ள இரு காரணங்கள் உண்டு. ஒன்று புலிகள் குடாநாட்டில் நன்கு நிலையூன்றி விட்டனர். நிர்வாகத்தை தம் வசமாக்கி விட்டனர். இரண்டாவது குடாநாட்டில் புலிகளின் இராணுவபலம் அதிகரிக்கிறது. குடாநாடு மீதான பாரிய தாக்குதல் 10,000 பொது மக்கள் உயிரிழப்பிற்கு வழிவகுக்கலாம். இவ்விழப்பு அங்கு புலிகளுக்கு ஆதரவு அலையாக மாறி விடவும் வாய்ப்புண்டு.

குடாநாடு மீதான படையெடுப்பு மூலம் படைகள் சில வெற்றிகளைப் பெற்றால் புலிகளுக்கு ஓர் அழுத்தம் கொடுக்க முடியும் அதே சமயம் வன்னிப் பெருநிலப் பரப்பிலிருந்து குடாநாட்டிற்குள் செல்லும் புலிகளின் விநியோகத்தைத் துண்டித்து விடுவதன்மூலம் குடாநாட்டில் புலிகளின் செயற்பாடுகளை நசுக்கி விடலாம்.

மனித நடமாட்டம் அற்ற பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சிறிலங்கா இராணுவத்தின் தற்போதைய செயற்பாடு கைவிடப்படல் வேண்டும்'',

மேற்கண்ட கட்டுரைமூலம் லக்ஷ்மன் குணசேகரவினால் கூறப்படுவது என்ன என்று நோக்கினால் பின்வரும் கருத்துகள் தெளிவாக புலப்படுகின்றன.

1) வன்னி பெருநிலப்பரப்பும் அதன் பின் யாழ் குடாநாடும் கைப்பற்றப்பட வேண்டும்.

2) கிழக்கில் அதிரடிப்படையும், வடக்கில் இராணுவமும் நிறுத்தப்படல் வேண்டும்.

3) குடாநாட்டில் புலிகளின் சிவில் நிர்வாகம் அழிக்கப்படல் வேண்டும் என்பவையே அவையாகும்,

இத்தகைய பல கட்டுரைகள் மணலாறு - இதயபூமி நடவடிக்கை, பூநகரி - தவளை நடவடிக்கை என்பவற்றின் பின் அதிகமாக வெளிவந்தன. இராணுவத்தைக் கிண்டலடித்து ஏன் தூங்குகின்றீர்கள் என அவர்களை ஊக்குவிக்கும் வகையிலான போர் வெறியூட்டும் கட்டுரைகள் அக்காலப் பகுதியில் இந்த இராணுவ ஆய்வாளர்களால் எழுதப்பட்டது.

தென்மராட்சியைக் கைப்பற்றும் நோக்கிலான ஒபரேஷன் யாழ்தேவி நடவடிக்கையில் இராணுவம் தடம் புரண்ட பின்னர் நிலைமையே மாறியது. அதுவரை இராணுவத்தினரிடமிருந்த ரி-55 ரக செக். தயாரிப்பு போர் டாங்கிகளை 'ஓஹோ' எனப் பாராட்டியும் அதை காட்டி மிரட்டியும் எழுதி வந்த தென்னிலங்கை இராணுவ ஆய்வாளர்கள் அந்த டாங்கிகள் மீது குற்றம் காண ஆரம்பித்தனர். அதன் செயல்திறனில் கேள்வி எழுப்பினர். இத்தகைய நடவடிக்கை இராணுவ ஆயுத தளபாடங்கள் இறக்குமதியில் பெறப்பட்ட கனரக வாகனங்கள் இயந்திரக் கோளாறு கொண்டவை என்றும் ஆயுததளபாட கொள்வனவில் இராணுவ உயர்பீடம் மோசடிகள் செய்துள்ளது என்பதையும் கண்டறிந்து எழுது மளவிற்குக் கொண்டுபோய்விட்டது.

இந்நிலையில் தென்னிலங்கைப் பத்திரிகைகளில் பாதுகாப்புத்துறை தொடர்பான தகவல்கள் சுய தணிக்கையுடன் வெளிவர வேண்டும் என இராணுவ உயர்பீடம் அரச உயர்பீடத்தை நெருக்க ஆரம்பித்தது. உதாரணமாக வியட்நாம் போரில் அமெரிக்கப் பத்திரிகைகளின் கட்டுப்பாடற்ற செய்தி வெளியிடும் சுதந்திரமே அமெரிக்காவின் தோல்விக்குக் காரணம் எனக் கூறப்படுவதை அவர்கள் எடுத்துக் காட்டினர்.

ஆனால் அன்றைய டி. பி. விஜேதுங்க அரசு போர்கள நிலைமையை உள்ளபடியே வெளியிட வேண்டும். மக்களுக்கு என்ன நடக்கின்றது என்பது அறியப்பட வேண்டும் எனக் கூறி இராணுவச் செய்திகளுக்கான தணிக்கையை அமுலுக்கு கொண்டு வர மறுத்தது. பத்திரிகைகள் விரும்பினால் சுய தணிக்கை செய்து கொள்ளலாம் என்றும் அந்தஅரசு கூறியது.

போரின் நிலைவரம் மக்களுக்கு தெரியவும் வேண்டும் ஆனால் அது தொடர்பாக செய்திகள் சரியாக கையாளப்பட்டு சுயதணிக்கையின் பின்னரே வெளியிடப்படவும் வேண்டும் என இரண்டாம் உலகப் போரின் போது பிரபலமாகவிருந்த அமெரிக்க செய்தியாளரான வோல்ட்டர் குரோன்கைட் கூறியது, மேற்படி இரு தரப்பினருக்கும் அவர்களின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவிப்பதாகவே உள்ளது.

இவ் வகையில் தென்னிலங்கை பத்திரிகைகளின் இராணுவ ஆய்வாளர்களின் கருத்துக் குழப்பங்களுக்கு முக்கிய காரணம் அவர்கள் இந்தப் போர்முனை ஏன் திறக்கப்பட்டது என்பதற்கான மூலத்தை அறியாமை அல்லது அறிய மறுப்பதுவே என்பதை துணிந்து கூறிவிடமுடியும். இனப்பிரச்சினைக்கான-இனப் போருக்கான - மூலத்தை அவர்கள் கண்டறியாத வரையில் அவர்கள் வாரம் தோறும் எழுதும் இராணுவ ஆய்வுகள் வெறும் பக்கம் நிரப்பும் வார்த்தை மாயங்களாகவே தொடர்ந்து நீடிக்கும் என்பதே உண்மை.

## ஈழத்தில்

கவனிக்கலாம். ''நாட்கள் சில கழிந்தன. ஒருநாள் மாலை வேளை, அவ் வீட்டிலுள்ளோர் யாவரும் தோட்டத்தருகில் இருக்கும் மண்டபத்தில் வழக்கம் போல் அமர்ந்து இருந்தனர். கதவுகள் திறந்தவண்ணம் இருந்தன. ஏரியின் அக்கரையில் காட்டுக்குள் ஞாயிறு மறைந்து கொண்டு போயது'' என்பது இதற்கு உதாரணமாகக்கூடும்.

இவ்வாறாக பலராலும் வளர்த்தெடுக்கப்பட்ட தமிழ் வசனநடை இன்று கணனிக் காலத்தில் புகுந்துள்ளது. இலக்கண விதிகளுக்கு கட்டுப்படுவது என்பதை விடவும் கருத்துக்களை புலப்படுத்தல் என்பதே இப்போது முதன்மை பெறுவதாகிறது. இதனால் இருந்தான். எழுந்தான். நின்றான். நடந்தான் என்பது போல தனி வினைமுற்றுக்கள் கூட ஒரு வசனப் பொருளைப் புலப்படுத்த போதுமானதாகிவிடுகிறது. துண்டு துண்டாக அடுக்கப்படும் சொற்கள் கோர்வையாகிவசனப்பொருளைஉணர்த்த- பொருள் உணர்த்தாத எந்தச்சொல்லும் தேவையற்றதாகி விலக்கப்பட இப்போதைய வசனநடை ஒரு புதிய போக்கில் திசை திரும்பியுள்ளது.

''சக்கை லொறியடா கவனமாய் பாருங்கோ'' எனக் கத்தியபடி நான் குதிக்க, ஒரு முறை பெரும் ஒளி வெள்ளம் எழுந்தது. பின் காற்று ஒரு முறை முட்டி மோதித் தள்ளியது. இன்னதெனக் கூற முடியாத - வர்ணிக்க முடியாத - சத்தம் காதைப் பிளந்து வானைக் கடந்து சென்றது. காட்டு மரங்கள் ஒரு கணம் ஆடி அடங்கின. விலங்குகள் திகைத்து நிற்க-கந்தகப் புகைமூக்கை அடைத்தது. ஒருகாவிய நாயகன் கரும்புலியாகி சரித்திரம் படைத்து விட்டான்'' ''போர் உலா'' என்னும் நூலில் கப்டன்மலரவன் எழுதியுள்ள இவ் வசனம் இதற்கு தகுந்ததொரு எடுத்துக்காட்டு. இவ் வசனத்தில் இடம்பெறும் சொற்கள் உணர்த்தும் பொருள் இக் காலத்திற்கு உரியது. இந்தக் கால சூழ்நிலையை உணர்ந்து கொள்ளாத எவரும் இவ் வசனநடையின் உட் பொருளைக் கிரகிப்பது கடினமானதே.

இவ்வாறாக மொழியின் வளர்ச்சிப்போக்கில் இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடியே யாகும். காலச் சூழ்நிலையையும், மக்கள் சமுதாயத்தின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்வு நிலைமைகளையும் உணர்ந்து கொள்ளும் போதே அவ்வக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட வசனநடையினதும், சொற்களினதும் பொருளை விளங்கிக் கொள்ளலாம்.

**ஆறாண்டு குழந்தாய் ஈழநாதம்**
**ஐந்தாண்டாய் நீ அள்ளி வந்த செய்திகளை**
**ஆவலோடு உன்முகத்தில் கண்விழித்தே! — எம்**
**கடமைகளைத் தொடர்கின்றோம்!**
**ஈழத்தின் தேவைக்கு உன்பணி தொடர**
**பல்லாண்டு வாழிய நீ!!**

உலகின் ஜீவநதியாம் நைல் நதி; யாழ்நகர் மத்தியில் ஊற்றெடுக்கும் அருவியாம் **குளிரருவி,**
**உங்களின்** நாவின் சுவைக்கும், நறுமணத்திற்கும், நல்ல தரத்திற்கும், உடலும், உள்ளமும் புளகாங்கிதக் கடலில் மிதந்து செல்ல

★

**எம்மிடம் ....**

★ ஒரே கிண்ணத்தில் மூவர்ண

கிறீம் குமிழ்கள், பழ அமிர்தம், ஜெலி, நட்ஸ், கொக்கோ, பனான, வனிலா, அமெரிக்கன் ஐஸ் கிறீம், சோடா பேயஸ் கொண்ட

★ **அதிவிசேட ஐஸ்கிறீம்**

- நட்ஸ் கொக்கோ ஐஸ்கிறீம்
- வணிலா ஐஸ்கிறீம்
- புறுட்சலட் கிறீம்
- ஒறேஞ் பானம்
- அன்னாசிப் பானம்
- தமிழீழ, வெளிநாட்டு அப்பிள், அன்னாசி, ஒறேஞ் யூஸ் ரின்கள், (புட்டிகள்)
- சுத்தமான பசும்பாலில் விசேடமாகத் தயாரிக் கப்பட்ட **யோக்கட்கப்**

★



★

அறுசுவைச் சிற்றுண்டிகள்

- ☐ றோள்ஸ், பற்றிஸ்,
- ☐ கட்லட், லட்டு,
- ☐ தொதல், கேசரி,
- ☐ பேஸ்ரி, வடை,
- ☐ மிக்சர்

**திருமண, பிறந்த நாள் விசேட கேக் வகைகள்**

**இவை மட்டுமா?**
இனிமை இரசத்தில் குளித்து இருக்கும்

- ☐ றம்புட்டான்,
- ☐ அன்னாசி,
- ☐ மாம்பழம், ☐ விசிஸ்,
- ☐ லெரேநா பயகல்வெஸ்

இவை Tin களில் (புட்டிகளில்) கிடைக்கும்

---

- ☐ கிறிஸ்பி,
- ☐ கிளாசிக் டாக்
- ☐ புதிய மில்நட்
- ☐ கயு நட்
- ☐ புறுட் கயுநட்
- ☐ புறமிஸ்
- ☐ செலிபறேசன்
- ☐ சந்திர ஒளிகால

கண்டோஸ் சொக்கிளற் வகைகளும்

---

மஞ்சி, மலிபன், லக்கிலாண், சேவ்ரி பூட்ஸ், பிஸ்கட் வகைகள்

---

கண்டோஸ், நெஸ்ரே, மிக்றே, டெல்ரா, ஸ்ரார், கன்விற், கன்டி ரொபி, இனிப்பு வகைகளும்

★

**கதைத்து, சுவைத்து, புசிக்க மனம் கவரும், மணம் கமழும் பட்டொளி பாய்ச்சிட்ட மெல் லக்காற்று தவழ்ந்துவரும் சிற்றறைகள் கொண்டு தணியாத தாகத்தை தணியவைக்கும்**

யாழ்நகரின் மத்தியில்

# குளிரருவி

**157, இராசன் சாலை,**
**யாழ்ப்பாணம்.**

[சி/ 11404]

# குறுணிக்கல்

சிறு கஷ்டங்களை ஏற்றுக் கொள்கிறார் திருநாவுக்கரசு.

திருநாவுக்கரசுவுக்குப் பக்கத்தில் சைக்கிளை உருட்டியபடி நடக்கிறார் இரத்தினம்.

வடகிழக்குத் திசையிலிருந்து தென்மேற்குத் திசையாக 'ஹெலி' ஒன்று செல்கிறது... இருவரும் தலையை நிமிர்த்தி 'ஹெலி'யைப் பார்க்கின்றனர். ''இண்டைக்கு ஹெலி ஓட்டம் கூடவாயிருக்கு... காலமை ஒரு 'பொம்மரும்' உந்தப் பக்கம் போனது... ஏதோ பிரச்சனை இருக்கு...'' இரத்தினம் தனது ஊகிப்பைக் கூறுகின்றார். இரத்தினத்தின் மனம் இலேசாகச் சஞ்சலப்படுவதைத் திருநாவுக்கரசு உணர்ந்து கொண்டு தனக்குள் சிரிக்கிறார்.

திருநாவுக்கரசு மிகவும் நிதானமானவர். எந்த நிலையிலும் பதற்றப்பட்டுக் கொள்ளமாட்டார். இளவாலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்த பின் தேங்காய் வியாபாரம் செய்து, மரக்கறி வியாபாரம் செய்து கூலிவேலை செய்து... கடைசியாக விறகு கட்ட தொடங்கினார். விறகு கட்டத் தொடங்கிய போது பலர் பலவாறு கூறினர்... அவர் எதையுமே சட்டை செய்யவில்லை! எதற்குமே சிரிப்பார்... பார்ப்பவர்களுக்கு அந்தச் சிரிப்பு வெகுளித்தனமானதாகவே தெரியும்... ஆனால் அந்தச் சிரிப்புக்குள் அவரது முடிவுகள் கருக்கட்டியிருக்கும்.

கண்டி றோட்டுடன் தனங்கிளப்பு றோட்டுச் சந்திக்கின்ற சந்திக்கு வந்துவிட்டனர். இரத்தினத்தின் உதவியோடு சைக்கிளில் ஏறி ஓட ஆரம்பிக்கின்றார் திருநாவுக்கரசு.

இரத்தினம் அவருக்கருகே சைக்கிளில் ஓடிக்கொண்டிருக்கிறார்.

இளவாலையிலை இருந்து வந்த சுவாமியார் ஒருவரை போனமாதம் சந்திச்சனான். எங்கடை வீடு வாசலெல்லாம் காடாய்க்கிடக்காம்..'' இரத்தினம் கூறுகின்றார்.

இருவரும் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இராணுவம் இளவாலையை ஆக்கிரமித்த போது.. மக்களோடு மக்களாய் இவர்களும் அங்கிருந்து புறப்பட்டு.. சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்தில் சில நாட்கள் தங்கி... அங்கிருந்து புறப்பட்டுவந்து மானிப்பாய் அந்தோனியார் கோவிலில் சில நாள் தங்கி...

அங்கிருந்து திருநாவுக்கரசு குடும்பம் செம்மணி வீதியிலுள்ள வீட்டுக்கு வந்தனர். இரத்தினம் குடும்பம் நுணாவிலில் ஒரு வீட்டை எடுத்துக்கொண்டனர்.

''தொழிலில்லாமல் எவள காலத்துக்குச் சீவிக்கிறது. ஏதாலும் தொழில் செய்யப்பார்...'' திருநாவுக்கரசு கேட்கிறார்.

''என்னவேலை செய்யிறது...''

''மனமிருந்தால் எந்த வேலையையும் செய்யலாம்.''

''உன்னைப் போலை விறகு கட்டச் சொல்லுறியே..''

''கட்டினால் என்ன...''

''இளவாலையிலை இருக்கையுக்கை என்ன மாதிரி இருந்தனி இப்ப என்னமாதிரி மாறியிட்டாய்... உப்படி என்னையும் வரச்சொல்லுறியே..''

''எந்தத் தொழிலையும் மன நிறைவோடு செய்தால் அதிலை ஒரு சுகத்தைக் காணலாம்...''

இரத்தினம் எதுவுமேபேசவில்லை.

இளவாலையில் திருநாவுக்கரசு இராசவாழ்க்கை வாழவிட்டாலும் அடக்கமாகவும், கௌரவமாகவும் வாழ்ந்தவரென்று நாக்குப்புரளாமல் கூறலாம்..

கட்டையாக வெட்டப்பட்டு, நடுவகிடிட்ட தலை, மூக்கடியில்விரிந்து கடைவாயடியில் கம்பி போல் சுருங்கிய அளவானமீசை, அளவான உயரம், அதற்கேற்ற உடற் கட்டு, மடித்துவிடாத நீளக்கை சேட், தடித்த பிறேமுடைய கண்ணாடி... றலி சைக்கிள்... சன சமூக நிலையம், ஆலயம், பாடசாலை அபிவிருத்திச்சபை . சகலதிலும் அங்கத்துவம்... பதவிகள்...

இப்படி வாழ்ந்தவர் திருநாவுக்கரசு... இன்று..

''உனக்குச் சொன்னாலென்ன... எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு... வீட்டிலை பெத்த பிள்ளையள் மதிக்கிறதில்லை...கட்டின பெண்சாதி மதிக்கிறாளில்லை... காலையிலை வெளிக்கிட்டால் இருட்டுப் பட்டு' எல்லோரும் படுத்தாப் பிறகு தான் வீடு... அலுப்பெண்டு வீட்டிலை நிண்டால் சண்டை.. அரிசுக்குக் காசு... மீனுக்குக்காசு.. உப்புக்குக்கா செண்டால் நான் எங்கை போறது... என்னத்தைச் செய்கிறது...'' இரத்தினம் மனம்விட்டு கூறுகிறார்.

இரத்தினத்தின் குடும்ப ஒட்டுறவைப் பற்றி திருநாவுக்கரசுதீர்மானித்துக் கொள்கிறார்.

தென்மேற்குப் பக்கமாகச் சென்ற 'ஹெலி' இப்போது தென்மேற்குத் திசையிலிருந்து வடகிழக்குப் பக்கமாகச் சென்று கொண்டிருக்கின்றது.

இருவரும் கைதடிச் சந்தியையும் தாண்டி நாவற்குழிச் சந்தியையும் தாண்டிவிட்டனர்.

நெல் சேமித்துவைக்கும் அந்தக் கட்டிடம் தலைவிரி கோலமாய்க்கிடக்கின்றது.

''இதிலைதான் 'சுப்ப சொனிக்' குண்டுபோட்டது..ஞாபகமிருக்கே..'' திருநாவுக்கரசு கேட்கிறார்.

''ஓமோம் நல்ல ஞாபகம்... சுப்ப சொனிக் இரண்டு குண்டுகள் போட்டு... ஒண்டு இதிலை விழுந்தது... ஒண்டு வீட்டுக்குப் பக்கத்திலை விழுந்தது... வீட்டிலை இருந்ததுகள் செத்தது...''

''பாக்கிற இடமெல்லாம் அகதியளும்...இடிஞ்ச கட்டிடங்களும், குண்டு விழுந்த இடங்களும்... செத்துப்போன பொடியங்களின்ரை படங்களும்... இதுகளுக்கு மத்தியிலைதான் எங்கடை வாழ்க்கை நடந்து கொண்டிருக்கு ..''

நாவற்குழிப் பாலத்திற்கு முதல் வருகின்ற சிறியவளைவு... சில வருடங்களுக்கு முன்பு இந்த இடத்தில் இலங்கை இராணுவத்தினர் முகாமிட்டிருந்தனர் அவர்கள் தங்கள் பாதுகாப்புக் கருதி வீதி ஓரத்தில் சரித்து நட்ட ஒன்றரை அடி நீளமான தண்டவாளத்துண்டுகள் இன்னமும் அப்படியே கிடக்கின்றன.

அந்த இடத்தையும் அவர்கள் தாண்டிவிட்டனர்... அடுத்து நாவற்குழிப்பாலம்...

நீர் நின்று வற்றிய, நிலம் வரண்டு, கீலங் கீலமாக வெடித்துக் கிளம்பியதைப் போன்ற வீதி.. அதிலும் இரண்டு வாகனங்கள் விலத்த முடியாத அளவிலான ஒடுங்கிய பாலம்.. அந்தப்பாலத்தில் திரளிமீன் குஞ்சு பிடிப்பவர்களின் கூட்டம்...

இந்தப் பாரத்தோடு பாலத்தைக் கடக்கமுடியாதென்பதைத்தீர்மானித்துக் கொண்ட திருநாவுக்கரசு... பிறேக் பிடித்து, சைக்கிளை நிறுத்தி, இறங்க முயற்சிக்கிறார்... அவதானமாக இறங்கி விட்டார்... திடீரென்று முன் சில்லுக் கிளம்பி... சைக்கிள் மரக்குற்றியுடன் சரிகிறது..

இரத்தினம் மிகவும் பயந்து போய்விட்டார்.

''இண்டையோடை இந்த வேலையை விட்டிடு...'' இரத்தினம் கோபத்துடன் கூறுகிறார்.

கட்டை அவிழ்த்து, மரக்குற்றியையும், சைக்கிளையும் வேறாக்கி, சைக்கிளை நிமிர்த்துகின்றனர். இனி மரகுற்றியைத் தூக்கிச் சைக்கிள் 'கரியரில்' வைக்க வேண்டும். இன்னும் ஒருவராவது தேவை... எத்தனையோ மனிதர்கள் அவர்களை விலத்திச் செல்கின்றனர்... எல்லோரும் மனச்சாட்சியுள்ள மனிதர்களாக இருக்க வேண்டுமே!

சில நிமிடங்களின் பின்பு.. ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற ஒருவர் அவர்களுக்கு உதவி செய்து, மீண்டும் மரக்குற்றி சைக்கிளில் ஏற்றப்படுகின்றது...

பாலத்தில் சைக்கிளை உருட்டி அதன் பின்பு சைக்கிளில் ஏறி ஓட ஆரம்பிக்கின்றார் திருநாவுக்கரசு.

''இரத்தினம்.. நீ இப்ப சுருட்டுப் பத்திறதில்லையே'' இரத்தினத்தார் அடிக்கடி சுருட்டுப் பத்துவதை திருநாவுக்கரசு அறிவார். நரம்பைப் பார்த்து புகையிலையைக் கிழித்து, வீடிப்பருமனில் சுருட்டைச் சுற்றி மிகவும் பக்குவமாய் பத்துவார் இரத்தினம். அவரது சேட்பையுள் புகையிலையும் தீப்பெட்டியும் எந்த நேரமும் இருக்கும்.

''அதெல்லாம் நிப்பாட்டியாச்சு...'' இரத்தினத்தின் அவல வாழ்க்கையைப் பார்த்து திருநாவுக்கரசு மனத்துள் வேதனைப் பட்டுக் கொள்கிறார்.

''இவ்வளவுதூரம்வந்திட்டாய் .. என்ரை வீட்டையும் பாத்திட்டுப் போவன்...''

'யாழ்ப்பாணம் வரவேற்கின்றது' என்று எழுதப்பட்ட அந்த வளைவையும், தியாகி அன்னை பூபதியின் மிகப் பெரிய அந்தப்படத்தையும்தாண்டி... செம்மணி வீதியில் சைக்கிள் ஊர்ந்து கொண்டிருக்கின்றது.

திருநாவுக்கரசின் வீடு.

வாசலில் மிகப்பெரியதொரு தீன் முருங்கை மரம். பத்தோ பதினைந்து பனைமட்டைகளால் செய்யப்பட்ட தொருபடலை . இன்றோ நாளையோ விழப்போகின்ற பல்லைப் போல அது கிடக்கின்றது ..

முருங்கை மரத்தோடு சைக்கிளைச் சாத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார் திருநாவுக்கரசு. இரத்தினம் திருநாவுக்கரசின் வீட்டை நோட்டம் விடுகிறார்.

ஒரு பெரிய கொட்டிலும் ஒரு சிறிய கொட்டிலும்... சிறிய கொட்டிலின் முகட்டால் புகை கிளம்பிக் கொண்டிருப்பதால் அது குசுனி என்பதை இரத்தினம் தீர்மானித்துக் கொள்கிறார். பெரிய கொட்டில் ...அண்மையில் மேயப்பட்டிருக்கின்றது. செத்தைக் கிடுகுகள் ஓரளவு உக்கிவிட்டன .. முன்பக்கத்தில் சிறியதொரு விறாந்தை வடிவிலான அமைப்பு . அதன் பக்கங்களை மறைப்பதற்கு கிழிந்த பல துவாரங்களுடைய தொரு சாக்குக் கட்டப்பட்டிருக்கின்றது... மிகவும் துப்புரவாக இருக்கின்றது. குந்தியிருந்து கை விளக்குமாறினால் கூட்டுவார்களே அப்படிக் கூட்டப்பட்ட துப்புரவு.

''மங்களம்...'' திருநாவுக்கரசு சைக்கிளைச் சாத்திவிட்டு குரல் கொடுக்கின்றார்.

மங்களம் - அவரது மனைவி.

''அம்மா... அப்புச்சி வந்திட்டார்...'' குசுனிக்குள்ளிருந்து ஒரு குரல்...

''அப்புச்சி வந்திட்டார்...'' கொட்டிலின் பின் புறத்திலிருந்து இன்னொரு குரல்...

''அப்புச்சி... அப்புச்சி..'' இன்னொரு கீச்சிட்ட குரல்...

இரத்தினத்தின் மனத்தளத்தில் ஒரு சிந்தனைச் சுளியடித்து ..

திருநாவுக்கரசும், இரத்தினமும் முற்றத்துக்கு வருகின்றனர் புள்ளை அப்புச்சிக்குத் தேத்தண்ணிபோடு '' குசுனிக்குள்ளிருந்த தனது மகளுக்கு கூறியபடி வருகின்றாள் மங்களம். வந்தவள் இரத்தினத்தைக் காண்கிறாள்.

'இரத்தினண்ணை வாருங்கோ..' புள்ளை இரத்தினம் மாமாவும் வந்திருக்கிறார். அவருக்கும்தேத்தண்ணி போடு ''

''அப்புச்சி... இன்டைக்கு நான் மீனும் சோறும் சாப்பிட்டனான்... அப்புச்சி... நான் இண்டைக்கு மீனும் சோறும்...''திருநாவுக்கரசின் இளையவள்திருநாவுக்கரசின் கால்களைக் கட்டிப்பிடித்தபடிகீச்சுக்குரலில் திரும்பத் திரும்பக் கூறுகிறாள்.. திருநாவுக்கரசும், மங்களமும் சிரிக்கின்றனர்...

இரத்தினத்தின் மனதில் அடித்த சுளி அவரது இதயப் பொக்கணையைக் கலக்குகின்றது...!''அப்புச்சி நான் மீனும் சோறும்...'' அந்தக் கீச்சுக்குரல் பெருநாதமாய் இரத்தினத்தின் செவிப்பறையை அதிர வைக்கிறது..''

திருநாவுக்கரசு வியர்வையால் நனைந்து போயிருந்த சேட்டைக் கழட்டிக் கொண்டு பெரிய கொட்டிலுக்குள் செல்கிறார்... அவருக்குப் பின்னால் சென்ற மங்களம் ..

இடுப்பில் செருகியிருந்த சீலையின் முந்தானையைஇழுத்தெடுத்து .. துடைப்பம் போல் மடித்து... திருநாவுக்கரசின் முகத்தில் வடிந்த வியர்வையைத் துடைக்கின்றாள்...ஓலைக் குடிசைக்குள் ஒல்லித் தேங்காய் வாழ்க்கை .. அதற்குள்... இப்படியொரு பாசம்... உறவு ..!

கிழிந்துபோன சாக்குத் துவாரத்தினூடாக .. அந்தக் காட்சி...!..? இரத்தினத்தின் இறந்தகால குடும்ப வாழ்க்கை சிரட்டைத்தணலாய் அவர் நெஞ்சைச் சுடுகின்றது !

இரத்தினத்தின் மனதில் அடித்த சுளி இதயப் பொக்கணையைக் கலக்கி இப்போது உடலிலுள்ள அத்தனை நரம்புகளையும் ஊடறுத்து வருகின்றது...!

திருநாவுக்கரசு வெளியே வருகின்றார்.

''என்ன இரத்தினம் கடுமையான யோசினை...''

''ஒண்டுமில்லை ''

''நீ என்ன யோசிக்கிறாயெண்டு எனக்குத் தெரியும் . இரத்தினம் '' திருநாவுக்கரசுவின் ஆத்மாவிலிருந்து வார்த்தைகள் ஜனனிக்கின்றன...

''மனிசன்ரை புற அழகு காலத்துக்குக் காலம் மாறும்... அதைப் பாதுகாக்கேலாது... ஆனால் அக அழகு... அதைமாறாமல் பாதுகாக்கலாம்...

.. நீயும் நானும் ஒரே பிரச்சனைக்குள்ளைதான் வாழ்றம் ..

...எங்கைபாத்தாலும்அகதியள்...

எங்கை பாத்தாலும் குண்டு விழுந்து சிதறின கட்டிடங்கள் ..

எதைப்பார்த்தாலும் குண்டுபட்ட காயங்கள் .

.. வீதிக்குவீதி .. மதிலுக்கு மதில் .. செத்துப்போன புள்ளையளின்ரை படங்கள் ..

.. இதுக்குள்ளைதான் நாங்கள் வாழ்றம்...

.. இதுகளுக்கூடாகத்தான் நாங்கள் வாழவேண்டியிருக்கு... முடிஞ்சது முடிஞ்சதுதான்... அதுகளை நினைச்சு ஆவலாதிப் படுகிறதிலை அர்த்தமில்லை...

...குறுணிக்கல்லை கண்ணுக்குக் கிட்டப்புடிச்சுப் பார்த்தால் அது உலகத்தை மறைக்கும்... பயங்கரமாக இருக்கும் அதையே, கண்ணுக்கு எட்டப் புடிச்சுப் பார்த்தால் அது குறுணிக்கல்தான் எண்டது தெரியும்...

...நான் குறுணிக்கல்லை, குறுணிக்கல்லாகவே பாக்கிறன்.

நீ குறுணிக்கல்லை... பாறாங்கல்லாயப் பாக்கிறாய்...

.. அவ்வளவுதான் ! திருநாவுக்கரசின் பேச்சுக்கள் இரத்தினத்தின் மனக்கிணற்றுள் எதிரொலிக்கின்றன.

---

# நவீன தமிழ்

வெகுஜன - வணிக இலக்கியப் போக்குகளை எதிர்க்க - ஒரு காலத்தில் போராடியவர் இதற்காகவே 'சூறாவளி' என்கிற இதழை ஆரம்பித்தவர்-

'இந்த நவீன காலத்தில் பெரும் பத்திரிகைகளை ஒதுக்குவது சாத்தியமில்லை. அச்சுத் தொழில் மிகப் பெரும் சமூக நிகழ்வாக மாறியிருக்கிறது' என்றும்-

'தமிழில் வெளிவரும் ஐந்து பெரும் பத்திரிகைகளை நான் தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கின்றேன்' என்றும் முரண்படுகின்றார்.

க. நா. சு வின் மார்க்ஸிஸ எதிர்ப்பு வாதமும் கலை - இலக்கியங்களில் வடிவத்திற்கு வழங்கி வந்த முக்கியத்துவமே கைலாசபதிக்கும் அவருக்குமிடையே மோதலை ஏற்படுத்தியது எனலாம். இருவரும் முரண்பட்டு நாகரிகமாகவே மோதிக் கொண்டார்கள். ஆனால் கடைசிக் காலங்களில் இந்த மோதல் நிலை முற்றி-

'தகப்பனார் சொத்தை தின்று வாழ்ந்தவர்' என க. நா. சுவை கைலாசபதி திட்டும் அளவிற்கு பனிப்போர் விஸ்வரூபமெடுத்தது.

இருவரும் படைப்பு மனோ நிலையில் வாழ்ந்திருக்கிறார்கள். பாரதியை - புதுமைப்பித்தனை இருவரும் ஆதரித்துள்ளனர்.

பண்டிதத்தை நிராகரிப்பதில் இருவரும் உடன்பாடானவர்களாக இருந்துள்ளனர்.

இருவருக்கும் மேலைத் தேய இலக்கியப் பரிச்சயம் இருந்துள்ளது. இதனடிப்படையிலேயே விமர்சன அளவு கோல்களை நிர்ணயித்துள்ளனர்.

உலக இலக்கியங்களை ஒப்பிட்டு ஆராய்வதில் இருவரும் தீவிரம் காட்டியுள்ளனர். கைலாசபதி இதில் ஒரு படிமேலே சென்றுள்ளார் என்றே சொல்லலாம்.

பழமைவாதிகளை எதிர்த்தது போல நவீன இலக்கிய போக்குகளை ஆதரிப்பவர்களில் சிலரை இருவரும் எதிர்த்துள்ளனர்.

இந்த இரு இலக்கிய விமர்சன இயக்கங்களின் கொள்கைகள் அடுத்த நூற்றாண்டிற்கும் சுமந்து செல்லப் படலாம். ஆதலால்- இரு போக்காளர்களின் மோதல்கள் தொடரும்.சிஷ்யர்கள் அதைச் செய்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

இலங்கை

இளங்கலைஞர் மன்றத்தின்

# 15-வது இசைவிழா

கலாமண்டபம்

சட்டநாதர் வீதி, நல்லூர்

**11-2-95 முதல் 25-2-95 வரை**

(தொடர்ந்து 15 தினங்கள்)

9-ம் நாள் 19 02-95 ஞாயிற்றுக்கிழமை

## தியாகராஜ உற்ஸவம்

வடமாகாண பனை-தென்னை
வள அபிவிருத்தி கூட்டுறவு
சங்கங்கள், கொத்தணிகள்
சமாசம் ஆதரவில்

காலை

**9. 00 - 10 30 மங்கள இசை**

கே எம். பஞ்சாபிகேசன்
எம். பி. நாகேந்திரன்
ஆர். கேதீஸ்வரன் } நாதஸ்வரம்

ரி. உதயசங்கர்
எஸ். முருகையா
ஏ. மோகன் } தவில்

**10. 30 - 10. 50 மங்கள விளக்கேற்றல்**

திரு சா. செல்வரெட்ணம் அவர்கள்
(தலைவர், வடமாகாண ப. தெ. வ. கூ: ச. சமாசம்)

திரு. க. ஜெகசோதி அவர்கள்
(தலைவர், யாழ் ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணி)

திரு: அ. சிவசுப்பிரமணியம் அவர்கள்
(தலைவர், தென்மராட்சி ப. தெ. வ அ. கூ சங்கம் கொத்தணி)

திரு. தே. அந்தோனிப்பிள்ளை அவர்கள்
(தலைவர், வடமராட்சி ப. தெ. வ. அ. கூ. சங்கம் கொத்தணி)

அருளுரை: இயலிசை வாரிதி ந. வீரமணி ஐயர் அவர்கள்

தலைவர்; திரு. கி சிவநேசன் அவர்கள்.
(பொது முகாமையாளர், வடமாகாண ப. தெ. வ. கூ. ச. சமாசம்)

பிரதம அதிதி. திரு. தி. சபாரத்தினம் அவர்கள்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ப. தெ. வளப் பிரிவு வடமாநிலம், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்; திரு. சி. கந்தசாமி அவர்கள்
(தலைவர், வலிகாமம் ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்)

**10. 50 - 11. 25 பாட்டு**

வி. சிவஞானசேகரம் - பாட்டு
வி. கே. குமாரசாமி - வயலின்
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்

**11. 25 - 12. 10 பாட்டு**

சாரதா சச்சிதானந்தம் - பாட்டு
எஸ். கோபிதாஸ் - வயலின்
எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்

மதியபோசனம்உபயம்;

திருப்பதி ஸ்ரோர்ஸ்

கொழும்பு

**பா. திருலிங்கநாதன் வணிகநிலையம்**

ஆதரவில்

மாலை நிகழ்ச்சிகள்:

**3. 00 - 4; 00 மங்கள இசை**

வி. கே. நம்பிராஜன்
கே. ஸ்ரீதரன்
எஸ் செல்வம் ] நாதஸ்வரம்

எம். எஸ். விஜயகுமார்
எம். எஸ். சதீஸ்குமார் ) தவில்

**4- 00 - 4- 45 பாட்டு**

விஜயலட்சுமி இராமலிங்கஐயர் - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
எஸ்- துரைராஜா-மிருதங்கம்

**4- 45 - 5. 30 வீணை இசை**

எம் எஸ். சுந்தர் - வீணை
எஸ். துரைராஜா - மிருதங்கம்
ஏ. செல்வரத்தினம் - கடம்

**5- 30 - 6- 15 பாட்டு**

பிரசாந்தி ராமச்சந்திரன் - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி -வயலின்
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்

**6- 15 - 7- 00 வயலின் இசை**

சாந்தநாயகி சுப்பிரமணியம் - வயலின்
எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்
கே. மயூரன் - கடம்

**7 - 00 - 7. 45 பாட்டு**

பரமேஸ்வரி கணேசன் - பாட்டு
சு. கோபிதாஸ் - வயலின்
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்

**7. 45 - 8. 05 மங்கள விளக்கேற்றல்**

திரு கு. பாலசிங்கம் அவர்கள் (சுன்னாகம்)
திரு. பா. திருலிங்கநாதன் அவர்கள் (வர்த்தகர், யாழ்ப்பாணம்)
திரு. இ. அருட்செல்வன் அவர்கள் (புதிய விஞ்ஞான கல்வி நிலையம்)

அருளுரை; சிவஸ்ரீசதா யோகீஸ்வரக்குருக்கள், நல்லூர்

தலைவர். திருமதி பி. ஸ்கந்தராசா அவர்கள் (அதிபர். வேம்படி மகளிர் கல்லூரி)

பிரதம அதிதி: செல்வி திலகவதி பெரியதம்பி அவர்கள் (கல்விப்பணிப்பாளர், வலயம் 1)

சிறப்பு விருந்தினர்: திருமதி காங்கேயன் அவர்கள் (உதவிக்கல்விப்பணிப்பாளர்)

**8-05 - 8 50 பாட்டு**

பொன். ஸ்ரீ வாமதேவன் - பாட்டு
ஆர். ராதாகிருஷ்ணன் - வயலின்
எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்
சதா வேல்மாறன் - கடம்

**8 50 - 10.00 வில்லிசை**

ஸ்ரீதேவி குழுவினர்

**கலா ரஸிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்**

வாழ்த்துவோர்:

ஸ்ரீ நதியா நகை மாளிகை
அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-11393)


## உலகின் வறியவர்கள்

உலகிலே எட்டு ஆபிரிக்க நாடுகளும் மூன்று ஆசிய நாடுகளும் மிகவும் வறியநாடுகளாகக் கணிக்கப்பட்டுள்ளன. 1993-ம் ஆண்டுத்தரவுகளின் படி மொசாம்பிக் நாடு மிக வறிய நாடாகும். இந்தநாட்டு மொத்த தேசிய உற்பத்தியில் தலா வருவாய் டாலர் 80 ஆகும். இதற்கு அடுத்த படியாக எதியோப்பிய - 100 டாலர், தன்ஸானியா 100 டாலர், சிபாரா-140 டாலர், லியோன், நேபாளம் - 160 டாலர், பூட்டான் 170 டாலர். வியட்நாம் 170 டாலர், புறுண்டி - 180 டாலர், உகண்டா - 190 டாலர், சாட் - 200 டாலர், ருவண்டா - 200 டாலர்.

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள உலகவங்கி தேசப்பட தொகுப்பில் மேற்படி தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

உலகிலே மிகவும் செல்வந்த நாடு சுவிற்ச்சர்லாந்து இந்நாட்டு தலாவருமானம் 36. 410 டாலர்களாகும் இதற்கு அடுத்தபடியாக லக்ஸ் சம்பேர்க், ஜப்பான், டென்மார்க், நோர்வே, சுவீடன், ஐக்கிய அமெரிக்கா, ஐஸ்லாந்து, ஜேர்மனி குவைத் ஆகிய நாடுகள் செல்வந்த நாடுகளாக விளங்குகின்றன.

உலகிலே 100 கோடி மக்கள் வறுமையிலே வாடுகின்றனர். இவர்களுக்கு கல்வி, சுகாதார சேவைகள், காணி கடன், அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத நிலையில் வாடுகின்றனர்.

இதுதவிர கினி - பிசௌ நாட்டிலே உயிர் வாழும் காலம் 39 வயதாகும். இதற்கும் மாறாக ஜப்பானில் மக்கள் சராசரியாக 79 வயது வரை உயிர் வாழுகின்றனர்.

உலகின் வறிய நாடுகளில் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் இறப்பு விகிதம் அதிகமாகவுள்ளது, ஆப்கானிஸ்தான்' மொசாம்பிக் ஆகிய நாடுகளில் பிறக்கும் 1000 குழந்தைகளில் 162 குழந்தைகள் இறந்து விடுகின்றனர். சிங்கப்பூர். அயர்லாந்து சுவீடன் ஆகிய நாடுகளில் இந்த இறப்பு வீதம் 5 ஆகவே காணப்படுகிறது.


பாடசாலை மாணவர்களுக்கான

★ அப்பியாசக் கொப்பிகள் ★ ஏனைய உபகரணங்கள்
★ அலுவலக உபகரணங்கள் ★ கட்டிடப்பொருட்கள்

ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

# புஸ்பா அன் கோ

293, மானிப்பாய் வீதி,
(வண்ணார்பண்ணை தபாற்கந்தோர் முன்பாக)
யாழ்ப்பாணம்

(சி-11400)

# பொ. ஐ. முன்னணியின் ஆட்சி செல்லப் போகும் திசை என்ன?

சிறிலங்காவின் அரசாங்க இயந்திரத்தில் 17 நீண்ட வருடங்களின் பின்னர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆட்சியில் ஏற்பட்டுள்ள இம் மாற்றம் வெறும் ஆள் மாற்றம் மட்டும்தானா? அல்லது அடிப்படைக் கொள்கைகளிலும், செயற்பாடுகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றம் தானா? என்பது தொடர்பாக பொதுமக்கள் மனதில் இப்போது சந்தேகம் பலமாகவே எழுந்து வருகின்றது.

அரச இயந்திரத்தை நிர்வகிப்போரில் ஏற்பட்டுள்ள மாற்றம், ஆளும் கட்சியின் பெயரையும் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் ஆட்களையும் மாற்றியுள்ள போதும், அடிப்படை அம்சங்களில் மாற்றம் ஏற்படாத போது பொதுமக்களுக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சுவது தவிர்க்க முடியாததே.

**காற்றில் பறக்கும் வாக்குறுதிகள்**

சிறிலங்காவின் அரசியல், சமூக, பொருளாதார அரங்குகளில் உடனடியாக மாற்றம் கொண்டு வரப்படும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மாற்றப்படும் திறந்த பொருளாதாரக் கொள்கை அடிப்படையில் அந்நிய முதலீட்டாளர்களுக்கு செங்கம்பள வரவேற்பு கொடுப்பது நிறுத்தப்படும். அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நிகழும் ஆடம்பர செலவீனங்கள் முடிவுக்கு கொண்டு வரப்படும். பஜரோ இண்டர் கூலர்களிலும், பி. எம். டபிள்யூக்களிலும் ஆட்சியாளர்கள் பவனி வரும் நிலை ஒழிக்கப்படும். அரசாங்க நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படும் நிலை தடுக்கப்படும் என்பன போன்ற பல்வேறு வாக்குறுதிகளை விதைத்தே பொதுஜன ஐக்கிய முன்னணி வாக்குகளை அறுவடை செய்திருந்தது. வடக்கு கிழக்கு போரை முடிவுக்குக் கொண்டு வருவதும், இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை அரசியல் பேச்சுக்கள் மூலம் காண்பதும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரசாரமாக இருந்தது.

> பொதுஜன ஐக்கிய முன்னணியை பிரதிநிதித்துவம் செய்யும் எமக்கும். இதனை முன்னின்று வழிநடத்துவோர்கட்கும் இடையேயும் அரசாங்க பொருளாதாரச் சட்டங்களை வகுப்போர்களுக்கும் இடையேயும் தற்போது கொள்கைப் பிரச்சினைகள் எழுந்துள்ளன.
>
> இதேபோன்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் இலக்கை வகுப்போர்களுக்கும் இடையேயும் அதனைப் பிரதிநிதித்துவம் செய்வோருக்கு இடையேயும், அரசாங்கத்திற்கு இடையேயும் இன்று பிளவுண்டு.
>
> வாசுதேவ நாணயக்கார

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்து ஐந்து மாதங்களும் ஜனாதிபதி பதவியேற்று சுமார் மூன்று மாதங்களும் நிறைவு பெற்றுள்ள இன்றுள்ள நிலையில் இவ் வாக்குறுதிகளின் கதி அதோ கதியாகி வருவது கண்கூடு அரசியலமைப்பை மாற்றுவதற்கான ஏற்பாடுகளும் வடக்கு கிழக்கு போரில் மோதல் தவிர்ப்பு நிலையும் ஏற்பட்டுள்ள போதும். பொதுமக்கள் திருப்திப்படக் கூடிய வகையில் அரசின் செயற்பாடுகள் இல்லை என்பது தெளிவு.

அரசின் பொருளாதாரக் கொள்கை அந்நிய முதலீட்டாளர்களைக் கவருவதை மையமாகக் கொண்டே வகுக்கப்படுவதாக கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளே அரசைக் குற்றம் சாட்டுகின்றன வெளிநாட்டு அரசுகளுடனும் அந்நிய நிறுவனங்களோடும் ஐ. தே. க அரசு செய்து சொண்ட ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் ஒருதலைப்பட்சமாக இரத்து செய்ய முடியாது என்ற போர்வையின் கீழ் அவற்றுக்கு புதிய முகவுரைகள் எழுதப்படுகின்றன. இதற்கு இரணவில அருகில் நிலையம் தொடர்பான உடன்படிக்கை ஒரு எடுத்துக்காட்டு ஐ. தே. கவின் காலத்தில் இறக்குமதியான ஆடம்பர வாகனங்கள் காட்சிப் பொருளாகி ஏலத்தில் விற்பனையான காட்சி கண்ணிலிருந்து மறைவதற்கு முன்பாக இப்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பஜரோ இன்டர் கூலர்களையும் பி.எம். டபிள்யூக்களையும் தீர்வையற்ற வகையில் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. அரசாங்க நிறுவனங்கள், தனியார் மயமாக்கப்படுவதை கண்டித்த பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர்களின் முழக்கங்கள் செவிப்பறைகளிலிருந்து விலகுவதற்கு முன்பாகவே காப்புறுதிக் கூட்டுத்தாபனம், வங்கிகள் போன்றவை தனியார் மயமாக்கப்படுவதைஎதிர்த்த ஊழியர்களின் போர்க்குரல் கேட்கிறது. அமைச்சரவையின் முக்கிய விவாதங்களும், முடிவுகளும் 'கிச்சின் கபினெட்டிலேயே' மேற்கொள்ளப்படுவதாகவும் அரசுத் தலைவர்களின் நாளாந்த செயற்பாடுகள் ஆடம்பரமான நட்சத்திர ஓட்டல்களில் சாதாரண நிகழ்ச்சியாக இடம்பெறுவதாகவும், ஆளும் கட்சிக்குள் முணுமுணுப்புக்கள் கேட்கத் தொடங்கிவிட்டன. ஆளும் கட்சிக்குள் கோஷ்டிப் பூசல்கள் வேறு தலை எடுக்கத் தொடங்கி இருக்கின்றன.

**வளரும் அதிருப்திகள்**

தொழிற்சாலைகளிலும், நிறுவனங்களிலும் ஊழியர்கள் வேலைநிறுத்தப்போராட்டங்களிலும், புறக்கணிப்பு

(28ஆம் பக்கம் பார்க்க)

நிமலராஜன்

## ஆரம்பக்கல்வி

களாக விளங்குகின்றனர். இவர்கள் தமது சேவையை எமது நாட்டில் வழங்கத்தயாராகவே இல்லை.

இத்தகைய நிலையினை கருத்தில் கொண்டே இங்கிருந்து மூளைசாலிகள் வெளியேறுவதை தடுக்க உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தோம். சிலர் வெளியேறாதிருக்க நீதிமன்றத்தினூடாக தடைவிதித்தோம். பிணை நிற்பது குறித்து கடுமையான சட்டவரையறைகளை போட்டோம். எதுவுமே பயனற்றதாகி விட்டது, இத்தகையோருக்கு தேசப்பற்று கிடையாது. தேசப்பற்றை பல்கலைக் கழகத்தில் வைத்து ஊட்டமுடியாது. அது ஆரம்பக் கல்வியிலிருந்தே ஊட்டப்படல் வேண்டும். அதன் மூலமே தடுக்க முடியும் என எண்ணுகிறேன்.

கேள்வி: எதிர்காலத்தில் யாழ் பல்கலைக்கழகத்தில் ஏதாவது மாற்றங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளீர்களா?

பதில்: பொறியியல் பீடம் அமைக்க அனுமதி கிடைத்தபோதிலும் கட்டடத்திற்கான நில ஒதுக்கீடும் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. மீன் பிடிப்பீடம், பல் வைத்திய பீடம் போன்றவற்றையும் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அத்துடன் கல்வியுடன் இணைந்த விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் வழங்கப்படும் தங்கப்பதக்கத்துடன் வெண்கலப் பதக்கம், வெள்ளிப்பதக்கங்களையும் வழங்குவது குறித்தும் ஆலோசித்து வருகிறோம் என்றார் துணைவேந்தர்.

## புலனாய்வு

எவ்வாறாயினும் தடய அறிவியல் மூலம் பெறப்படும் முடிவுகள் குற்றப் புலனாய்வு நடவடிக்கையின் ஆரம்பப்படியாகவேகொள்ளமுடியும். இவ் ஆய்வுகள் மூலம் பெறப்படும் முடிவுகள், குற்றத்தில் ஈடுபட்டவர் அல்லது பாதிக்கப்பட்டவர் பற்றிய ஆரம்பத் தகவல்களை மட்டுமே அறிந்து கொள்ள முடியும். அதாவது ஒரு முனையை கண்டுபிடிக்க மட்டுமே கூடியளவில் இது உதவக் கூடும். இதனூடாக குற்றவாளியை கண்டுபிடிக்க மேலும் பல முயற்சிகள் செய்யப்படவேண்டியிருக்கும்.

## பேச்சுவார்த்தை

ணமாக மோதல் தவிர்ப்பு நிலை உடன்பாட்டின் அடிப்படையில் செயற்பட வேண்டிய கண்காணிப்புக்குழுக்கள் செயற்பட முடியாத நிலை உருவாகியுள்ளது.

மறுவளமாக இராணுவத் தலைமைப்பீடம்இன்றுதமது கட்டமைப்பைமாற்றியமைப்பதிலும்இராணுவத்திற்குமீள் பயிற்சி அளிப்பதிலுமே தீவிர அக்கறை காட்டுவதாக உள்ளது. அதேசமயம் இராணுவத்திற்குப் புதிய ஆட்களைச் சேர்ப்பதற்கானமுயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

இதற்கு ஏதுவாகவே அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் உள்ளன. சமாதானம் பற்றிபேசிக் கொண்டே கடந்தவருடத்தை விட கூடுதல் நிதியைஇராணுவத்திற்குஒதுக்கியுள்ளதோடு, பாதுகாப்பு உயர் பீடத்தில் களை எடுப்புக்களை மேற்கொண்டாலும், போரிடும்ஆற்றல் மிக்க இராணுவம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா உருவாக்க முற்படுவதாகவுமே அனுமானிக்க முடிகின்றது.

# சொந்த இடங்களுக்கு திரும்புதல் இடம்பெயர்ந்த மக்களின் பேரவா!

"நாம் எமது சொந்த இடங்களுக்கே செல்ல விரும்புகின்றோம்'' இதுவே அண்மையில் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த உள்நாட்டு வெளிநாட்டு செய்தியாளர்களிடம் இடம்பெயர்ந்த மக்கள் தெரிவித்த ஒட்டு மொத்தக்கருத்து. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு இச்செய்தியாளர்கள் சென்றபோதெல்லாம் அங்கெல்லாம் எதிரொலித்தது இக்கோரிக்கையே.

சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறும் சமாதானப் பேச்சுக்களின் ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட விடயங்களில் ஒன்று இடம்பெயர்ந்த மக்களின் மீளக் குடியேற்றமாகும். இராணுவ ஆக்கிரமிப்பினால் பல இடங்களிலிருந்தும் இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் அவரவர் சொந்த இடங்களுக்கு சென்று குடியேற வேண்டும் என்பது விடுதலைப்புலிகள் தூதுக்குழுவினால் பேச்சுவார்த்தை மேசையில் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கையாகும்.

**முதலில் எது?**

இன்று இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகளை நோக்கினால் அது பல்வேறு வகைகளிலும் பாரிய பிரச்சினையாகவே காணப்படுகின்றது. எனவே இத்தகைய மக்களின் உடனடிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசுடான பேச்சுவார்த்தையில் வற்புறுத்தியுள்ளனர். இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த 1990 ஆம் ஆண்டு முதல் கடந்த நான்கு வருடங்களில் இடம்பெயர்ந்த மக்களின் தொகை அதிகரித்துள்ளது, இவர்களில் அநேகமானோர்-பிற மாவட்டங்களிலிருந்தும்-யாழ். மாவட்டத்திலேயே தங்கியுள்ளனர். இதனால் யாழ். மாவட்டம் அதன் குறித்த சன அடர்த்தியை விட மேலதிக மக்கள்தொகையைப் பராமரிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

**பராமரிப்பிற்கு புதிய திட்டம்**

யாழ். குடா நாட்டிற்குள்ளேயே இடம் பெயர்ந்தவர்களுக்கென சுமார் 200 இடம் பெயர்ந்தோர் முகாம்கள் இயங்குகின்றன. இந்த வசதிகளற்ற முகாம்களினுள் வதியும் மக்கள் முகம் கொடுக்கும் இன்னல்கள் சொல்லுந்தரமற்றவை. இந்த இடம் பெயர்ந்தோர் முகாம்களை இதுவரைகாலமும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களே பராமரித்து வந்தன. ஆனால் தற்போது இந்த முகாம்களை பராமரிக்க புதிய நடைமுறை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டத்தின்படி அகதிமுகாங்களை பராமரிப்பது அம் முகாம் அமைந்துள்ள பகுதி உதவி அரச அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இடநெருக்கடிக்கு மத்தியில் வாழும் இந்த இடம்பெயர்ந்த மக்களில் அநேகமானோர் தொழிலின்றி அல்லலுறுகின்றனர். அதிலும் அன்றாடம் உழைப்பவர் குடும்பங்கள் மிகவும் சிரமப்படுகின்றன. அரசினால் வழங்கப்படும் உலர் உணவுப் பொருட்களைக் கொண்டு கால்வயிறு அரை வயிறு என தம் வாழ்க்கையை ஓட்டுகின்றனர்.

**நோய்களின் தாக்கம்**

இவ்வாறான நிலையில் இடம் பெயர்ந்தோர் முகாம்களின் அடுத்த எதிரியாக நோய்கிருமிகளின் தாக்கம் காணப்படுகின்றது, வயிற்றுளைவு மலேரியா என்பன இம் மக்களுக்கு அடிக்கடி வந்துபோகும் நோய்கள். சுகாதார சீரின்மை, போசாக்கு குறைவு போன்றவை நோய்கள் இலகுவில் இங்கு தாக்குவதற்கு வழி சமைத்துவிடுகின்றன. இதைவிட இடம்பெயர்ந்த இம் மக்களுக்கு தேவையான அளவு மருத்துவ வசதிகளும் கிடைப்பதில்லை.

**சீரற்ற உணவு விநியோகம்**

இடம்பெயர்ந்த மக்களிற்கான இலவச உலர் உணவு விநியோகமும் கூட சீரற்று காணப்படுவதாக அவர்கள் குறைபட்டுக் கொள்கின்றனர். அரசின் உலர் உணவு விநியோகம் சீரற்று காணப்படுகின்றது. தரம் குறைந்த காலாவதியான பொருள்கள் கூட இவர்கள் மீது தள்ளி

(28ஆம் பக்கம் பார்க்க)

பார்த்திபன்

# - ஆறாம் ஆண்டில் ஈழநாதம் -
# இடம்பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றோர்

ஈழநாதம் மக்கள் தினசரி தனது ஆறாவது அகவையில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு ஈழநாதம் நிறுவனத்தினர் நடாத்திய கவிதை, கட்டுரை, சிறுகதை, வலைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட போட்டிகளில் பரிசில்கள் பெறுவோர் விபரம்:

## சிறுகதை

**முதற் பரிசு: ''தழும்புகள்''**
ரஜனி பேராயிரவன் 72/35 சிவராஜி வீதி (பணிக்கர் வளவு) திருநெல்வேலி.

**இரண்டாம் பரிசு: ''மொட்டுக்கள்''**
செல்வி சறோஜினி கதிரவேற்பிள்ளை, வியாபாரிமூலை, பருத்தித்துறை

**மூன்றாம் பரிசு:**
''புல்லாங்குழலும் ஒரு புலிவீரனும்''
செல்வி பிரேமினி சபாரத்தினம். பெரிய அரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

## கவிதை

**முதலாம் பரிசு:**
''அர்ப்பணமானவற்றின் பெறுமதி''
இத்தாவில் க. சிவராசா இத்தாவில், பளை.

**இரண்டாம் பரிசு: ''இந்த வீடுகள்''**
க. வசந்தராசா 13-ம் ஆண்டு பளை மத்திய கல்லூரி, பளை

**மூன்றாம் பரிசு: ''விஷவேடம்''**
சத்துருக்கன் மே/பா, இ. சிவநாதன் தபால் கட்டையடி, இணுவில் மேற்கு, இணுவில்.

மாணவருக்கான கட்டுரை

**முதற் பரிசு:**
செல்வன் மகாலிங்கம் சாந்தீபன் ஆண்டு - 13 விஞ்ஞானம் பளை மத்திய கல்லூரி, பளை

**இரண்டாம் பரிசு:**
செல்வி சர்மிலா சண்முகலிங்கம் யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

**மூன்றாம் பரிசு:**
செல்வன் யோகராஜா சிவாகரன் ஆண்டு -12 யாழ். இந்துக்கல்லூரி.

## வலைப்பந்தாட்டம்

1-ம் இடம்: தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர் விளையாட்டுக் கழகம்

2-ம் இடம்: குருநகர் யுத்கார்மல் விளையாட்டுக் கழகம்

3-ம் இடம்: அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

## உதைபந்தாட்டம்

ஆட்டத் தொடர் நாயகன் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த
ஜே. டார்வின்

இச் சுற்றுப் போட்டியின் சிறந்த அணி
மன்னார் இளந்தென்றல்
விளையாட்டுக் கழகம்

1-ம் இடம்: குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம்

2-ம் இடம்; யாழ். பல்கலைக் கழகம்

3 ம் இடம்: பாஷையூர் சென். அந்தனீஸ் விளையாட்டுக் கழகம்

4-ம் இடம்: இளவாலை யங் கென்றீசியன் விளையாட்டுக் கழகம்

## பொ.ஐ.முன்னணி

கள் மற்றும் மறியல்கள் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவது பொதுஜன ஐக்கிய முன்னணியின் போக்கில் பொதுமக்களுக்கு ஏற்பட்டு வரும் விசனத்தையும், ஏமாற்றத்தையும் கோடிகாட்டும் குறிகாட்டிகளாகும். காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர்களின் ஆர்ப்பாட்டம் முதல் இரணவிலவில் மக்கள் போராட்டம் ஈறாக இதற்கு பல உதாரணங்களை சுட்டிக் காட்ட முடியும் இந்த நிலையில் நாட்டின் பொருளாதாரம் மோசமான நிலைக்குஇட்டுச் செல்லப்படுவது ஒருபுறம் தொழிலாளர் சக்தியின் இந்த நடவடிக்கைகளை நிறுத்த வழி தெரியாமல் அரசாங்கம் குழம்பிப் போயிருப்பது மறுபுறம்,

வேலை நிறுத்தங்களையும் அதனோடு இணைந்த போராட்டங்களையும் ஐ. தே.கவின் பாணியில் பலத்தைப் பிரயோகித்து நசுக்க முடியாத இக்கட்டான நிலை அரசுக்கு இருக்கிறது. அதே வேளை தொழிலாளர்களின் கோரிக்கைகளை சுமுகமாக தீர்க்கக் கூடிய நிரந்தர தீர்வுகளை முன் வைக்க முடியாத நிலையும் அரசுக்கு உண்டு. தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்கக் கூடியளவிற்கு அரசாங்கத்திடம் வளங்கள் இல்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இந்தநிலையில்தான்பொதுஜன ஐக்கிய முன்னணி நாட்டை வழிநடத்திச்செல்ல இருக்கும் புதிய திசை எது என்ற கேள்வி பலமானதாக எழுகின்றது. பற்றாக்குறையான திறைசேரி நிர்ப்பந்தங்களையும், நிபந்தனைகளையும் விதிக்கும் வெளிநாட்டு நிதி உதவி வழங்கும்நிறுவனங்கள் வாக்குறுதிகளால் உந்தப்பட்டுநிறைந்த எதிர்பார்ப்புடன்இருக்கும்மக்கள்; சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கும் அரசியல் எதிரிகள்; இவ்வாறாக பல முனைப்பட்ட சவால்களுக்கும்சங்கடங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலையில்அரசு தடுமாறுகின்றதுஎன்பது வெளிப்படையாகவே உணரப்படுகின்றது.

பெற்றோல் போன்ற எரிபொருட்களின் விலை சந்தடியின்றி உயர்த்தப்பட்டதும் காணாமற் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்களுக்கு காலவரப்பு விதிக்கப்பட்டிருப்பதும் பொதுமக்கள் மனதில் ஐயத்தையும், கேள்வியையும் எழுப்பியிருக்கின்றன.

### ஐ. தே. கவின் கணக்கு

பொதுஜன ஐக்கிய முன்னணி தடுமாறித் திணறும் நிலையை ஐ. தே. க வெகுவாக ரசிப்பதையும், உன்னிப்பாக கவனிப்பதையும் அதனது செயற்பாடுகள்காட்டுகின்றன. இதற்கு ஐ. தே க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரம சிங்கவின் அநுராதபுரப் பேச்சு தகுந்ததொரு எடுத்துக் காட்டு. ஐ. தே. க. அரசியல் அரங்கில் இப்போதும் பலம்வாய்ந்த தனிப்பெரும் கட்சியாக விளங்குகிறது என்பதை சுட்டிக் காட்டி தமது உரையை ஆரம்பித்த ரணில்''அரசியல் என்பதுகொள்கைஅடிப்படையில்தான் அமைய வேண்டும். வாக்குறுதிகளின் அடிப்படையில் அல்ல. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு மக்கள் மயமாக்கலை எதிர்த்தும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதாகவும் வாக்குறுதி அளித்து பதவிக்கு வந்தது. இப்போது அவற்றை செயற்படுத்த முடியாமல் தடுமாறுகிறது. ஐ. தே. க. தனது கடந்த கால தவறுகளையும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பல வீனங்களையும் உணர்ந்து கொண்டு செயற்படும்'' எனத் தெரிவித்து இருக்கிறார்.

இதன் மூலம் ஐ. தே. க. ஓடுமீனை ஓட விட்டு உறுமீன் வருமளவும் வாடி நிற்கும் கொக்குப் போல செயற்பட

## சொந்த

விடப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களை அணுகிய போது அவர்கள் கூறுவது, கப்பல் வருவதில் தாமதம் இதனால் நிவாரண விநியோகமும் பாதிக்கப்படுகின்றது என்பதே.

சிறிலங்கா அரசு இடம்பெயர்ந்தவர்களின் நிவாரண விநியோகம் சம்பந்தமாக புதிய நடைமுறை ஒன்றை பரிசீலனை செய்வதாக கூறப்படுகிறது, அதன்படி இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரண பொருள்களை வழங்கும் திட்டத்திற்கு பதிலாக முத்திரைகளாக அவற்றை வழங்குவதே புதிய திட்டமாகும். பொருள்களுக்கான முத்திரைகளை மக்களுக்கு வழங்கினால் அவர்கள் அவற்றை சம்பந்தப்பட்ட கடைகளில் சமர்ப்பித்து பொருள்களை பெற்றுக் கொள்ள முடியும் என அரசின் புதிய அறிவிப்பு கூறுகின்றது. வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை முற்றாக அகற்றாத நிலையில் இத்திட்டம் நடைமுறை சாத்தியமா என்பது கேள்விக்குறியே.

### தொழிலின்மை

இடம்பெயர்ந்த மக்கள் தம் சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளதால் அநேகமாக தொழில் இழந்தே காணப்படுகின்றனர். தற்போது கடின உழைப்பு மூலமாக அன்றாடம் ஒருவாறு தம் வயிறை நிரப்ப வேண்டிய நிலை காணப்படுகின்றது. தற்போது கடலில் மீன்பிடிப்பதற்கான தடை ஓரளவு நீக்கப்பட்டபோதும் இம்மக்களில் பலர் மீண்டும் தம் சொந்த பகுதிகளுக்கு - கரையோர குடியிருப்புகளுக்கு சென்று தம் சொந்த வீட்டிலிருந்து தொழிலுக்காக கடலுக்குச் செல்ல முடியாத நிலை. இடம்பெயர்ந்த நிலையில் கடற்றொழிலையும் மேற்கொள்வது என்பது எவ்வளவு தூரம்சாத்திய மாகும்.

### கல்விநிலையங்கள்


இடம்பெயர்ந்த பாடசாலைகள் கல்விநிலையும் சிறப்பானதாக இல்லை. இப்பாடசாலைகளுக்கான நிரந்தர கட்டிடமோ, ஒதுக்கீடோ, தளபாடங்களோ இல்லாத நிலையில் இப்பாடசாலைகள் இயங்க வேண்டிய அவலம் காணப்படுகின்றது. யாழ்நகரின் சில தனியார் கல்விநிறுவன கொட்டகைகளில் கூட இந்தப் பாடசாலைகள் பகுதி நேரமாக இயங்கும் நிலை காணப்படுகின்றது.

இவ்வாறாக இன்னோரன்ன இன்னல்களின் மத்தியில் பல வழிகளிலும் பாதிக்கப்பட்ட இந்த இடம்பெயர்ந்த மக்கள் மீள தமது சொந்த இடங்களில் குடியேறும் நிலை ஏற்பட வேண்டும் அந்த நாளை எதிர்பார்த்து இந்த மக்கள் கனத்த நெஞ்சங்களோடு நம்பிக்கையுடன் தமது முகாம்களில் முடங்கி கிடக்கின்றனர்,

விழைவது நன்கு புலனாகிறது. எதிர்க்கட்சியாக இருப்பதனால் எடுத்ததை எல்லாம் எதிர்க்கும் எதிர்க்கட்சியாக இல்லாமல் பொருத்தமான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நிதானமாக காத்திருக்க ஐ. தே. க. தயாராக இருப்பது போல் உள்ளது.

எனவே இனியும் ஐ.தே.க. வின்பலவீனங்களைத் தேடியும் விசாரணைக் குழுக்கள் அமைப்பதிலும், ஐ.தே.கவின் ஆட்சிக் காலத் தவறுகளைச் சாடியும் அறிக்கைகள் விடுவதிலும் ஊழல் மற்றும் மோசடிப் பேர்வழிகளைத் தேடியும் நாட்களைக் கடத்துவது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் நாட்களையே எண்ண வைத்து விடும் எனலாம்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



திருமதி சிவசம்பு தங்கம்மா

| | |
|---|---|
| தாயின் மடியில் | மண்ணின் மடியில் |
| 04-07-1922 | 20-01-1995 |

எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சென்றடைந்த எமது அன்னையின் அந்தியேட்டிக் கிரியை இன்று 19-02-1995 ஞாயிற்றுக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும். மேற்படி கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து சொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பொ. கனகரத்தினம்
(கனகு,காஜ்) பிள்ளைகள்.
மருமக்கள்பேரப்பிள்ளைகள்
'ஜெயமஹால்'
கண்டிவீதி, சங்கத்தானை
சாவகச்சேரி. (10985)

ஆறாவது அகவை காணும் ஈழநாதமே
நீ நீடூழி வாழ்கவென
வாழ்த்துபவர்
கணேஷா பல்பொருள் வாணிபம்
65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி- 11394)